அறைவு 03 இயம் 29 January 31 - February 02, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00



திருக்கோணேஸ்வர
மகா
கும்பாபிசேகம்

தை - 28ம் நாள்

11.02.2015

# முதலமைச்சர் பதவிக்கு மும்முனைப்போட்டி




கிழக்கின் முதலமைச்சர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கான போட்டிகள் மும்முனையில் தொடர்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சரிவைத் தொடர்ந்து ஆட்டம் கண்டு விட்ட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவியைத் தமதாக்கிக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே வெளிப்படையான போட்டியில் உள்ள நிலையில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியும் கோதாவில் இறங்கி-யுள்ளதாக நம்பகமாகத் தெரிகின்றது.

தனியொரு கட்சியாக அதி கூடிய ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் யாதாயினும் ஒரு பேரத்தில் இணைந்து கொள்வதன் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாகாண சபையை அமைப்பது தொடர்பான கோரிக்கையொன்றை அக்-கட்சியின் மாகாண 17

## மாகாணங்களை இணைக்கும் ஆய்வில் மணிசங்கர் ஐயர்



பிரிக்கப்பட்ட வடக்குகிழக்கு மாகாணங்கள் இரண்டையும் இணைப்பது தொடர்பான சாத்தியப்பாடுகளை ஆய்வு செய்து வரும் இந்திய அரசில் இராச தந்திரியாகப் பணி 17

## மார்ச் 28ம் திகதி கோணேசர் ஊர்வலம்

சிவராத்திரியின் முடிவில் தொடங்கி அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு வருடாந்தம் நடைபெற்று வந்த திருக்கோணேஸ்வரச் சிவனூர்வலம் இவ்வருடம் மார்ச் 28ம் திகதி மட்டும் நடைபெறும் என ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

திருக்கோணேஸ்வரத்தின் மகா கும்பாபிசேகப் பெருவிழா எதிர்வரும் 5ம் திகதி ஆரம்பமாகி 11ம் திகதி மகாகும்பாபிசேகம் நடைபெற்ற பின்னர் அடுத்துவரும் 45 நாட்களுக்கு சங்காபிசேகம் நடைபெறவிருப்பதால் இவ்வருடம் சிவராத்திரியின் முடிவில் ஊர்வலம் நடத்த முடியாமல் இருப்பதாகத் தெரிவித்த அவர்கள், 17

## மு.கா விற்கு முதலமைச்சர் பதவி! விட்டுக்கொடுக்க ஐமுசுமு தயார்!!

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியினைக் கடந்த இரண்டரை வருடங்களாகச் சுகித்து வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்போது அப் பதவியை முஸ்லிம் காங்கிரஸிற்குத் தாரை வார்க்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கில் ஆட்சி 17

## வசதிக் கட்டணம் மட்டுமே பாடசாலைகள் அறவிடவேண்டும்



பாடசாலைகளின் தேவைக்காக பணம் அறவிடுவதனை உடன் அமுலாகும் வகையில் தடை விதிக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அனைத்து அதிபர்களுக்கும் 17

## திருக்கோணேஸ்வரர் கும்பாபிசேகம்



வரலாற்றுப் புகழ்வாய்ந்ததும், ஈழத் தமிழரின் அரும்பெரும் சொத்துக்களுள் ஒன்றானதும், "தெட்சிணகைலாயம்" எனப் போற்றப்படுவதுமான திருக்கோணேஸ் - வரத்தின் மகா கும்பாபிசேகம் எதிர்வரும் பெப்ரவரி 11ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பெருவிழாவையொட்டிய கிரியா காலக் கிரமமானது எதிர்வரும் 05ம் திகதி முதல் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையினர் அறியத்தந்துள்ளனர்.

பெப்ரவரி 05ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரைக்கும் காலை 7 மணிக்கும் மாலை 4 மணிக்கும் பூசைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

எண்ணைக்காப்பு சாத்துதல் 17

## - மலைமுரசு -

ஊடகவியலாளர்கள் மற்றும்
முத்தமிழ்ச்சங்கம் இணைந்து நடாத்தும்



சுகிர் - லசந்த



9ஆண்டு 5ஆண்டு

### நினைவேந்தல் நிகழ்வு


31.01.2015

நகரசபை மண்டபம் திருகோணமலை
மாலை 4 மணி
தலைமை - மாயன் (ஆசிரியர் மலைமுரசு)

- நினைவேந்தல் நிகழ்வு
  பாரதியின் பாடல் - இசைப்பவர்கள் உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவிகள்
- தலைமையுரை
  "லசந்த - எழுத்தாணியுடன் களத்தில்...." - மாயன்
- "ராஜன் - ஒரு தனி மனிதனாக..."
  நினைவுக்குறிப்பு - ஊடகவியலாளர் பொ.சற்சிவானந்தம்
- "எஸ் எஸ் ஆர்" ன் நினைவுகளை மீட்டல்
  கவிதை - ஊடகவியலாளர் சாலி
- மாவட்ட ஊடகவியலாளர்களின் சவால்கள்
  ஊடகவியலாளர் - வடமலை ராஜ்குமார்
- "சுகிர்தராஜன் - ஓர் நண்பனாக...."
  நினைவுக் குறிப்பு - ஊடகவியலாளர் அச்சுதன்
- சிறப்புரை - "யுத்தத்திற்கு மத்தியில் ஊடகப்பணி"
  என்.வித்தியாதரன் - சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர்
- நன்றியுரை
  வண. பங்குத்தந்தை. குரூஸ் (முத்தமிழ்ச்சங்கச் செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Sugirtha Stationers



காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336
அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்

- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மைகளை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# மழுங்கடிக்கப்படும் மக்களின் போராட்டம்

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகப் பொறுப்பேற்ற மாவை சேனாதிராசா அவர்கள் தனது கன்னியுரையில் தமிழர்கள் தெருவில் இறங்கிப் போராடும் நாளொன்றைக் குறித்திருந்ததுடன் அப் போராட்டத்தைத் தலைமை தாங்கி தாமும் தமது கட்சியும் நடாத்தப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

எனினும் அவர் குறத்திருந்த காலக்கேடானது காலாவதியாகிப்போனபோதும் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க முடியாது போனமைக்கு அவர் குறித்திருந்த காலத்தில் நிகழ்ந்த, மாறிய காலதேசவர்த்தமானங்களே காரணமாயின.

அவ்வாறான மாற்றங்கள் நிகழாது விட்டிருக்குமானால் மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்திருக்க முடியமுா? என்பது என்னவோ சந்தேகம்தான்.

ஆனால் தமிழர்களின் அரசியல் தலைமைகளின் தலையீடு இன்றி தாமாகவே தமிழர்களால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் போராட்டங்களை வளர்த்து விடவேண்டிய அல்லது ஆதரவு தரவேண்டிய தார்மீகக் கடமை தமிழர்களின் தலைமைகளுக்கு உண்டு.

நியாயமான மக்கள் கிளர்ச்சியொன்றை வளர்த்து விடுவது சனநாயகப் பண்பொன்றாக இருப்பதுடன் அதன் நியாயத்தன்மையை ஆய்ந்து அதன்பால் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க உதவி செய்வதும் அவ்வாறான மக்கள் போராட்டங்களைத் தலைமைதாங்குவதும் தமிழ்த் தேசியத் தலைவர்களின் பங்கொன்றாகவே இருக்க முடியும்.

இவ்வாறு தாமாகக் கிளர்கின்ற மக்கள் கூட்டத்தை அனைத்துச் செல்லும் போதுதான் எதிர்காலத்தில் தமிழத் தலைமைகளால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டங்களுக்கு மக்கள் பின்புலமாகி வருவர்.

மக்களின் நியாயத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற மேல் நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசியல் தலைமைகள் தயாராக வேண்டும். ஒரு நாளில் நடைபெறும் போராட்டமானது ஓய்ந்து போனாலும் அப்போராட்டத்தின் கருப்பொருளை அணையாது மீண்டும் மீண்டும் உரமேற்றி உரிய தீர்வைப் பெற்றுத்தரும் மட்டும் அப்பொருளை அடுத்த கட்டத்திற்குக் காவவேண்டியது அரசியல் தலைமைகளின் முக்கிய வேலையாகவே உள்ளது.

இதனை உணர்ச்சிசார்ந்த விடயமாகக் கருதாமல் அறிவுசார் விடயமாகக் கருதி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அண்மையில் திருகோணமலையில் இரண்டாவது முறையாக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது தமிழ் மக்களின் போரராட்டத்தின் நியாயத்தை வெளிக்கொணர எந்தவொரு தமிழ் அரசியல் தலைமையும் முன்வரவில்லை. இரண்டாவது தடவையாக ஏன் ஓர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது? அவ்வாறு முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்புலத்தில் யாதேனும் நியாயம் உள்ளதா? அப் போராட்டத்தை மழுங்கடிக்கச்செய்யப்பட்ட சக்திகளின் செயற்பாடு சனநாயகரீதியானதா? என்பவற்றை ஆராய்ந்து அம்மக்கள் போராட்டத்தைப் பற்றிய பிரக்ஞையை அனைத்து மக்களுக்கும் ஊட்டினாலொழிய மக்கள் போராட்டத்தின் மீது மக்களுக்குரிய நம்பிக்கை வலுவிழந்து போகாது காக்க முடியும்.

தாமாகக் கிளர்கின்ற அல்லது ஒரு நியாயத்தின் பெயரால் பேசுபவர்களின் பின்னே அணி திரள்கின்ற மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்து விட்டு தமிழ்த் தலைமைகள் தாமொரு போராட்டத்தைக் கோரும் போது மக்கள் ஆதரவு தரவில்லை என விசனம் கொள்வதில் நியாயம் ஏதுமில்லை.

மக்கள் போராட்டங்களே சுதந்திர நாடொன்றின் மீட்கும் அடிப்படைகளில் முக்கியமானது. அதனை மழுங்கடிக்காது பாதுகாப்போமா?

-மாயவன்-


## மூலக்குழுக்களில் இருந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தனர்

தமிழரசுக் கட்சியினரால் மூதூர் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட மூலக் குழுக்களின் அங்கத்தவர்கள் சிலர் திடீரென ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவம் பெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மூலக்குழுக்களில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு கட்டைப்பறிச்சான் மற்றும் பாரதிபுரம் கிராமத்திலிருந்து தலா இருவரும், மல்லிகைத்தீவு மற்றும் மேன்காமத்தில் இருந்து தலா ஒருவரும்,ஆக மொத்தம் அறுவர் கட்சி மாறியிருப்பதாகத் தெரிகின்றது.

ஐக்கியதேசிக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சி மாறியுள்ள நிலையில் திடீரென ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் உறுப்பினர்க்ள கிராமங்களுக்கும் இடைத்தங்கள் முகாம்களுக்கும் பயணித்திருப்பது தெரிய வந்துள்ளது.

## இந்துக் குருமார் சங்கத்தினர் உதவி



மூதூர் இந்துக் குருமார் சங்கத்தினர் இடைத்தங்கல் முகாம்களில் வாழும் பாடசாலைச் சிறார்களுக்கு தம்மல் திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு அப்பியாசக் கொப்பிகளை வாங்கி வழங்கியுள்ளனர்.

இந்துக்குரமார் சங்கத்தின் தலைவரான சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள், மற்றும் அச்சங்கத்தின் ஆலொசகர்களில் ஒருவரான முன்னாள் மூதூர் கோட்டக் கல்வி அதிகாரி கோ. திரவியராசா அவர்களின் முய்றிசயாலேயே இந்த உதவிகள் மவறிய மாணவர்களைச் சென்றடைந்துள்ளன.



கட்டைப் பறிச்சான், மனற்சேனை ஆகிய இடைத்தங்கல் முகாம் மாணவர்ளு-க்கு இவ் உதவிகள் சென்றடைந்துள்ளதாக அங்குள்ள எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்

## கிழக்கு மாகாண ஆளுனராக ஒஸ்டின் பெர்ணாண்டோ





கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுனராக சிவில் நிர்வாக மூத்த அதிகாரியான ஒஸ்டின் பெர்ணாண்டோ அவர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

பதவியேற்பு வைபவத்தின் பின்னர் தனது கன்னி உரையை ஆற்றிய அவர் இன, மத பேதங்களைத் தாண்டிய பணியைத்தான் ஆற்றவிரும்புவதாகத் தெரிவித்தார்.

## தண்டனை இடமாற்றம்

முன்னாள் திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலய அதிபர் மற்றும் உப அதிபர் ஆகியோருக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

அதற்கமைய முன்னாள் அதிபர் க.பேரானந்தம் நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரிக்குப் உப அதிபராக இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதுடன் முன்னாள் உபஅதிபர் கே.பி.ஜெகதீஸ்வரா ஆசிரியர் பணிக்காக தம்பலகாமம் கோணேஸ்வரா மகா வித்தியால-யத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

மாணவர் சத்துணவுத் திட்டத்தை வழங்குனர்களின் பெயரால் அதிபரே இயக்கியதாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்-பாகவே இவ்விடமாற்றங்களை கல்விச் செயலாளர் மேற்-கொண்டுள்ளார்.

## "கடலன்னை" மீனவர் சங்கம் உதயம்




உப்புவெளி திருகோணமலையில் புதிய மீனவர் சங்கமொன்று உதயமாகியுள்ளது.

கடன் அன்னை மீன் வியாபாரிகள் கூட்டுறவுச் சங்கம் எனப் பெயரிடப்பட்டுள்ள இச்சங்கத்தை மாகாணசபை உறுப்பினர் ஜனார்த்தனன் திறந்து வைத்தார்.

இச்சங்கத்தின் தலைவராக வி.செல்வராசா, செயலாளராக ஏ.ஞானச்சந்திரன் மற்றும் பொருளாளராக எம்.எஸ்ஸதீன் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

## வாகரைக்கு 72 வீடுகள்

புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்ததை தொடர்ந்து, வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் வழங்கப்பட்ட 300 வீடுகளில் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 72 வீடுகள் கிடைத்துள்ளதாக அப்பிரதேச செயலாளர் எஸ்.ஆர்.ராகுலநாயகி தெரிவித்தார். வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள 72 குடும்பங்கள் இந்த வீடமைப்புத்திட்டத்தில் உள்வாங்கப் பட்டுள்ளனர். பத்து வருட காலத்தில் மாதாந்தம் ஆயிரம் ஷரூபாய் திருப்பிச்செலுத்தும் கடன் அடிப்படையில் ஒரு இலட்சம் ஷரூபாய், பயனாளிகளுக்கு மூன்று தவணைகளில் வழங்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



## டெங்கு வாகரை




மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 28ஆம் திகதி வரை காலப்பகுதியில் 22 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு ள்ளதாக கோறளைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி ஏ.பி.திஸாநாயக்கா தெரிவித்தார். புதன்கிழமையிலிருந்து (28) எதிர்வரும் 04ஆம் திகதிவரை டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை தடுக்கும் வாரமாக பிரகடனப்படுத்தி, மக்களை விழிப்பூட்டும் வேலைத்திட்டங்களை கோறளைப்பற்று பிதேச செயலாளர் பிரிவில் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் வேல்விஷன் நிறுவனம் இணைந்து மேற்கொண்டுவருகின்றன.

## கவனயீர்ப்பு போராட்டம்

காணாமல் போயுள்ள தமது உறவுகளை கண்டுபிடித்துத் தருமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம் மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திபூங்காவில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மட்டக்களப்பு காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தின் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்குவதற்கான மகஜரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேந்திரன் ஆகியோரிடம் மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர் ஏ.செல்வேந்திரன் கையளித்தார். மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 1985ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரை காணாமல் போயுள்ள தமது உறவுகளை கண்டுபிடித்துத் தருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் கோருவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



## சிறுபான்மைக்கு நீதி தரும் புதிய அரசு



புதிய ஜனாதிபதி, சிறுபான்மையினம் நசுக்கப்படக்கூடாது என்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதை நாங்கள் பாராட்டவேண்டியவர்களாக உள்ளோம். இருந்தபோதிலும், இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்குமா என்பது தொடர்பில் நாங்கள் ஆராயவேண்டியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை படுகொலையின் 28ஆவது நினைவுதினம், கடந்த புதன்கிழமை கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "இந்த நாட்டில் நல்ல சமாதானம் இன்று ஏற்பட்டுள்ளது. பல பிரச்சினைகள் எமக்கு இருந்தாலும், இன்று உள்ள அரசாங்கம் அனைத்து மக்களையும் ஓரளவு சமனாக நடத்தும் வாய்ப்பை ஏற்படுத்தி வருகின்றது. இதுபோன்று நாங்கள் சென்று கொண்டிருப் போமானால், நல்ல எதிர்காலத்தை எதிர்நோக்கலாம்.

இந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்திக்கொடுத்தது.

ஒட்டுமொத்தமாக சிறுபான்மையினம் கடந்தகால ஆட்சியில் நசுக்கப்பட்டது. இதன் காரணமாகவே சிறுபான்மையினம் ஒன்றுபட்டு இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. இன்று எமது பிரச்சினைகளை அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்துகின்றபோது, பல விடயங்களை தீர்க்கக்கூடிய நிலையிருக்கின்றது. நாங்கள் அவர்களுக்கு அடிபணியவேண்டிய அவசியம் இல்லை. காரணம் அவர்களிடம் அடிபணிந்து நாங்கள் அமைச்சு பதவிகளை பெறவில்லை. அமைச்சு பதவி எங்களது கோரிக்கைகளை பெறுவதற்கு சிலவேளைகளில் தடையாக இருக்கலாம். அதனால் நாங்கள் அமைச்சு பதவிகளை ஏற்கவில்லை.

அரசாங்கத்தின் அனைத்து விடயங்களுக்கும் கையை உயர்த்தும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை. பாதகமான விளைவுகளை தடுப்போம். சாதகமானவற்றுக்கு ஆதரவு வழங்குவோம். இன்று நல்ல சூழ்நிலையில் இந்த அரசாங்கம் சென்றுகொண்டுள்ளது. அண்மையில் இந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து எமது கோரிக்கைகளை முன்வைத்தபோது, அதற்கு அவர்கள் பச்சைக்கொடி காட்டியுள்ளனர். சிறையில் வாடும் எமது இளைஞர்கள், தமது மக்களின் காணிகள் உட்பட பல பிரச்சினைகளை கருத்தில்கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு ஆராயப்பட்டுவருகின்றன. பறிபோன நிலங்களை பெற்றுக்கொடுப்பதற்காக விசேட குழுக்களை அமைக்கவுள்ளனர். ஆகவே, புதிய ஜனாதிபதி, சிறுபான்மையினம் நசுக்கப்படகூடாது என்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார். அதனை நாங்கள் பாராட்டவேண்டியவர்களாக இருக்கின்றோம்" என்றார்.

## சந்திரிக்கா – சல்மா சந்திப்பு



பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் தான் வேண்டுகோள் விடுத்ததாக காத்தான்குடி நகரசபை உறுப்பினரும் பெண்களுக்கான வலவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சல்மா ஹம்சா தெரிவித்தார். கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் இந்த வேண்டுகோளை விடுத்ததாகவும் அவர் கூறினார்.

## செயற்திட்டங்கள் துரிதம்

கிழக்கு மாகாணத்தையும் மத்திய மாகாணத்தையும் மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தி, நீர்வழங்கல், வடிகாலமைப்பு செயற்றிட்டங்களை அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்துக்கு அமைவாக துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் பணித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் திகாமடுல்லை, மட்டக்களப்பு, திருகோணமலையிலும் கண்டி மாவட்டத்தை முதன்மைப்படுத்தி மத்திய மாகாணத்திலும் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல், வடிகாலமைப்பு தொடர்பான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல், புதன்கிழமை (28.01.2015) பத்தரமுல்லை, செத்சிரிபாயவிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு அவர் பணித்துள்ளார்.

## பாலியல் துஷ்பிரயோகம்

தனது 14 வயது மகளை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய 47 வயதான தந்தையை மட்டக்களப்பு ஆயித்தியமலை கால்துறையினரால், நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர். பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மகள், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குற்றச்சம்பவங்களை பரிசீலனை செய்யும் காவல்துறை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## சட்டவிரோத மண் பறிப்பு

வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் விற்பனைக்ககாக மண் ஏற்றி சென்ற நபரை கைதுசெய்துள்ளதாக வெல்லாவெளி காவல்துறையினர் தெரிவித்தனர். இதன்போது, மண் ஏற்றி செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உபகரணங்கள் கையளிப்பு

மக்களின் வரிப்பணத்திலிருந்தே மக்களுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார். காத்தான்குடி பிரதேச செயலகப்பிரிவில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார தொழில் உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக்கின் நிதியொதுக்கீட்டில் 20 குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள், இடியப்பம் தயாரிக்கும் உபகரணங்கள், இன்னும் பலவும் வழங்கப்பட்டன.

## "கொக்கட்டிச் சோலை படுகொலை" நினைவு

யுத்தத்திலே அரசாங்கம் வெற்றிபெற்றதை வரலாறு என்றால், யுத்தத்தின் போது உயிர்நீத்த உறவுகளை நினைவு கூறுவதும் வரலாறுதான் என் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

கொக்கட்டிச் சோலை இறால் பண்ணையில் கடந்த 1987ம் ஆண்டு நடைபெற்ற படுகொலையை நினைவுகூறும் முகமாக கொக்கட்டிச் சோலை கலாசார மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நினை நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.






## உயிர்வாயுவை உருவாக்கும் திட்டம்

இலங்கையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை உறுதிசெய்யும் நோக்கிலும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காகவும் உயிர்வாயு தொழினுட்பத்தை விரிவாக்குதல் சம்பந்தமான பயிற்சி நெறி இன்று செவ்வாய்க்கிழமை 27.01.2015 மட்டக்களப்பு மாநகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஐரோப்பிய யூனியனின் நிதி அனுசரணையோடு சுவிற்ச் ஏசியா எனும் இந்தத் திட்டம் ஜனதாக்ஸன் மற்றும் பீப்பிள் இன் நீட் ஆகிய நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுவதாக பயிற்சி வளவாளரும் ஜனதாக்ஸன் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளருமான அனுலா அன்ரன் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 38 புள்ளிகளில் 2015ன் பாதீடு




2015 மக்களுக்கான பட்ஜெட்

1. அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பு
2. ஓய்வூதியக் கொடுப்பனவு 1000 ரூபாவால் அதிகரிப்பு
3. சமுர்த்திக் கொடுப்பனவு 100 முதல் 200 வீதம் அதிகரிப்பு
4. உரமானியம் தொடர்ந்தும் வழங்கப்படும்
5. சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடு 10 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பு
6. மண்ணெண்ணெய் விலை லீட்டருக்கு 6 ரூபாவால் குறைப்பு
7. சமயல் எரிவாயு 300 ரூபாவால் குறைப்பு
8. சீனி கிலோ ஒன்று 10 ரூபாவால் குறைப்பு
9. 400 கிராம் பால்மா பக்கற் 61 ரூபாவால் குறைப்பு
10. ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 12.50 ரூபாவால் குறைப்பு
11. பாண் ஒரு இறாத்தல் 6 ரூபாவால் குறைப்பு
12. சஸ்டஜின் பால்மா 100 ரூபாவால் குறைப்பு
13. ரின்மீன் 60 ரூபாவால் குறைப்பு
14. அரச வங்கிகளில் 2 இலட்சம்வரை நகை அடகு வைத்து அதனை மீட்கமுடியாதவர்களின் வட்டிவீதம் தள்ளுபடி
15. சீமெந்து ஒரு மூடை 90 ரூபாவால் குறைப்பு
16. மாசி கிலோ ஒன்று 200 ரூபாவால் குறைப்பு
17. சிரேட்ட பிரஜைகளுக்கான பஸ் கட்டணம் 50 வீதம் குறைப்பு
18. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா ஒன்றாக இணைப்பு
19. 1000 சீசீக்கு குறைந்த கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கான வரி 15 வீதத்தால் குறைப்பு
20. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதம் கல்விக்கு ஒதுக்கு
21. அரச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு 24 மணி நேரமும் திறக்கப்படும்
22. செல்போன்களுக்கான ரீலோட் வரி 25 வீதத்தால் குறைப்பு
23. நாட்டிலுள்ள சகலருக்கும் வங்கிக் கணக்குகள்
24. என்.ஆர்.எப்.சி கணக்கிற்கு 5 வீத வட்டி அதிகரிப்பு
25. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதற்கான கட்டணம் 5000 ரூபாவிலிருந்து 1000 ரூபாவாகக் குறைப்பு
26. 5000 ரூபாவாகவிருந்த திருமணப்பதிவுக் கட்டணம் 1000 ரூபாவாகக் குறைப்பு
27. ஜனாதிபதி பதவியேற்புக்கு 6000 ரூபாய் மட்டுமே செலவு
28. அமைச்சரவையை 71 இலிருந்து 31 ஆகக் குறைத்தோம்
29. கடந்த வரவுசெலவுத் திட்டத்தில் 1,400 பில்லியன் ரூபாய் வரி வருமானமாக எதிர்பார்க்கப்பட்டது
30. கடந்த வரவுசெலவுத்திட்டத்தின் பற்றாக்குறை 521 பில்லியன் ரூபாயாகும். மொத்த தேசிய உற்பத்தியில் 4.6 சதவீதமாகும்
31. ஹெஜிங் ஒப்பந்தமே நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தது
32. ஜனாதிபதியின் செலவு 290 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது
33. கடந்த அரசாங்கத்தினால் அரசுக்கு 5000 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம்
34. இளைஞர் பாராளுமன்றத்திற்கு நிதியளிக்கப்படும்
35. 2013-2014 வரி வருடத்தில் 2000 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட இலாபத்தை சம்பாதித்த கம்பனிகள் அல்லது தனிநபர்கள் இலாபத்தில் 25 சதவீதத்தினை செலுத்த வேண்டும்
36. உழைக்கும் பொழுது செலுத்தும் வரியிலிருந்து ஊழிய வருமானத்தின் முதல் 600,000 ரூபா விலக்களிக்கப்பட்டுள்ளது
37. உரிமம் அளிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இயக்குனர்கள் அனைவரிடமிருந்தும் 250 மில்லியன் ரூபா ஒரே தடவையில் அறிவிடப்படும்
38. கடனட்டையினூடான கடன்களுக்கான வட்டியை 8 வீதமாக வரையறுக்க முன்மொழியப்பட்டுள்ளது

# பொருளாதார நோக்கற்ற பாதீடு ???



அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டம் நீண்டகால பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக இல்லை என முன்னாள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, அரசாங்கத்தின் நூறுநாள் திட்டம் என்பதன் அடிப்படையில் அந்த நூறுநாளை மட்டும் இலக்காகக் கொண்டு இந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

செலவுதொடர்பாக கூறும் அதேவேளை அரசாங்கத்துக்கு வருவாயைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி இந்த வரவுசெலவுத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைப்பின் காரணமாகவே கடந்த சில நாட்களுக்கு முன்பு அரசாங்கம் எரிபொருளின் விலையைக் குறைத்தது. அதன் பிரதி பலனையே மக்களுக்கு வழங்கியிருக்கிறது.

மலைமுரசு
MALAIMURASU

# தேசிய செய்திகள்

## "நோ" கசினோ

திட்டமிடல் அபிவிருத்தி சட்டமூலத்தின் கீழ் 3 நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த கெசினோ மற்றும் சூதாட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர்30ம் திகதி உரையாற்றிய போதே இந்த தகவலை வெளியிட்டார்.

# இரண்டாவது தமிழ் பிரதம நீதியரசர் ஸ்ரீபவன்


Sudath Silva

இலங்கையின் 44 வது தலைமை நீதியரசராக கே.ஸ்ரீபவன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

தலைமை நீதியரசர் ரிராணி பண்டாரநாயக்க ஒய்வு பெற்றுள்ள நிலையிலேயே கே. ஸ்ரீபவன் புதிய தலைமை நீதியரசராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற கே. ஸ்ரீபவன் 1974 ம் ஆண்டு சட்டக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

அதன் பின்னர் 1978 ம் ஆண்டு சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்துகொண்ட ஸ்ரீபவன், 1979-ம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரசதரப்பு வழக்கறிஞராக இணைந்து கொண்டார்.

24 ஆண்டுகள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றிய ஸ்ரீபவன், 2002 ம் ஆண்டு மேன்முறையிட்டு நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார்.

2008-ம் ஆண்டு உச்ச நீதிமன்ற நீதியரசராக பதவியேற்ற கே. ஸ்ரீபவன் 2013 ம் ஆண்டு பதில் தலைமை நீதியரசராகவும் பணியாற்றியிருந்தார். இலங்கையில் 1991-ம் ஆண்டில் 39-வது தலைமை நீதியரசராக ஹேர்பட் தம்பையா பணியாற்றியிருந்தார்.

1984-ம் ஆண்டு முதல் 1988ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தலைமை நீதியரசராக பணியாற்றிய சுப்பையா சர்வானந்தா இந்தப் பதவியில் இருந்த முதல் தமிழர் ஆவார்.

43-வது தலைமை நீதியரசர் ரிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பதவியகற்றும் தீர்மானம் சட்ட முரணானது என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தீர்ப்பு வழங்கிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவில் நீதியரசர் கே.ஸ்ரீபவன் அங்கம் வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

இலங்கையில் மனித உரிமைகள் மீறல் குறித்த ஐநா விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.



லண்டனில், தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவும் பிரித்தானிய தமிழர் பேரவையும் கலந்துகொண்ட ஒன்றுகூடல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இலங்கையில் ஒரு புதிய அரசாங்கம் ஒன்று பதவியேற்ற சில வாரங்களில் இந்த ஒன்றுகூடல் நடந்திருக்கின்றது.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கேமெரன், பிரித்தானிய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எட் மிலிபாண்ட் ஆகியோர் அங்கு தமது செய்திகளை அனுப்பியிருந்த நிலையில், அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பலரும் இதில் நேரடியாக கலந்துகொண்டார்கள்.

இங்கு செய்திகளை அனுப்பிய பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் அங்கு நேரடியாகக் கலந்துகொண்ட அனைவருமே இலங்கையில் போர்க்குற்றங்கள் குறித்த ஒரு சுயாதீன, சர்வதேச விசாரணை நடக்க வேண்டும் என்று மீண்டும் வலியுத்தினார்கள்.

அதேவேளை, இலங்கையின் புதிய அரசாங்கம் எடுத்து வருகின்ற சில நடவடிக்கைகளையும் அவர்கள் பாராட்டினார்கள்.

"இலங்கையில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்" என்று பிரித்தானிய பிரதமர் அங்கு தனது செய்தியில் கூறியிருந்தார் என்பது கறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு அலைவரிசைக்கு 1 பில்லியன் வரி...

முன்நாள் சனாதிபதியின் மகனான யோசித்த ராசபக்சவிற்குச் சொந்தமான விளையாட்டு அலைவரிசைக்கு ஒரு முறை மட்டும் செலுத்தற்பாலதான 1 பில்லியன் வரியை நிதி அமைச்சர் விதித்துள்ளார்.

விளையாட்டு அலைவரிசையினை தொடங்கிய காலத்தில் இருந்து ஒரு சல்லிக் காசையும் இலங்கைக்குச் செலுத்தாத இவ்வலைவரிசை முிதே வரி விதிக்கப்பட்டுள்ளது.

எவ்வித வெளிப்படையான கூறுவிலைகளையும் கோராமல் முன்னாள் சனாதிபதியின் மகனின் அலைவரிசைக்கு விளையாட்டு விடயங்களை இலங்கையில் ஒலிபரப்பும் ஏகொபித்த உரிமை அமைச்சரவையால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு MALAIMURASU உலகச் செய்திகள்



## ஒபாமாவுக்கு வரவேற்பளித்த பெண் தளபதி

இந்தியாவிற்கு வருகை தந்திருந்து அமெரிக்க அதிபர் பராக் ஒபாவிற்கு வழங்கப்பட்ட இராணுவ அணிவகுப்பு மரியாதைக்குப் பெண் தளபதியொருவர் முதன் முதலில் தலைமையேற்றுள்ளார்.

இந்திய வான்படை விங் கமாண்டர் தர அதிகாரியான பூஜா தாகூர் அமெரிக்க அதிபருக்கான இராணுவ மரியாதையான "கார்ட் ஒவ் ஹொனர்" மரியாதைக்குத் தலைமையேற்றிருந்தார்.

பெண் அதிகாரியொருவர் இவ்வாறானதொரு அணிவகுப்பிற்குத் தலைமையேற்றது இதுவெ முதற் தடவையாகப் பதிவாகியுள்ளது.

அணிவகுப்பினைத் தலைமையேற்று நடத்தி முடித்த பின்னர் பூஜா செய்திச் சேவைகளு- க்குப் பேட்டியளித்த போது படைப்பணியில் ஆண் பெண் வேறுபாடு இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

படைப்பயிற்சிகளின் போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்படும் பயிற்சிகளில் எவ்வித வேறுபாடுகளும் இல்லை.

நான் இவ்வாறு தலைமையேற்றது பெண்களுக்குப் பெருமையானது எனத் தெரிவித்துள்ள அவர் இதன் பின்னர் படையணிகளில் பெண்கள் சேர்வதும் ஊக்குவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## மரண தண்டனை நிச்சயம்

அவுஸ்திரேலியாவிற்கு ஹெரோயினைக் கடத்த முயன்று கைதான இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஒருவருக்கும் இந்தோனேசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஒருவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்பதில் இந்தோனேசியா பிடிவாதமாகவுள்ளது.

இவர்கள் இருவரும் அவுஸ்திரேலழயக் குடியுரிமை பெற்றவர்களாக இருப்பதால் மரண தண்டனை பற்றி மீள் பரிசீலிக்க வேண்டும் என ஆஸியால் எழுப்பப்பட்ட இராசதந்திர அழுத்தங்களை அடுத்து பதிலளித்துள்ள இந்தோனேசியா முடிவை மாற்றப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளது.

இந்தோனேஸியாவில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு 8 கிலோ ஹெராயின் போதைப்பொருளை கடத்த முயன்ற மயூரன் சுகுமாரன், ஆன்ட்ரூசான் என்ற இருவரும், 2005ல் பாலி விமான நிலையத்தில் கைதாகி மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர்.



## அமெரிக்கர்கள் கொலை

தலிபான்களை அமெரிக்க அரசானது பயங்கரவாதிகள் அல்ல எனத் தெரிவித்த அடுத்த மூன்று நாட்களுக்குள் ஆப்கானில் வைத்து மூன்று அமெரிக்க ஒப்பந்தக்-காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிய அரச படைகளுக்குள் நுழைந்து கரந்தடி படையாக இருக்கும் தலிபான்கள் பலரில் ஒருவராலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கானின் காபூல் நகர விமான தளத்திற்கு அருகில் முகாமிட்டுள்ள ஆப்கானியப் படைகளின் இருப்பிடத்திற்கு வருகை தந்த அமெரிக்க படை மீது நடத்தப்பட்ட சுடகலச் சூட்டினால் இவர்கள் கொல்லப்பட்டதுடன் கொலையாளியும் கொல்லப்பட்டதாக தலழபான்கள் அறிவித்துள்ளனா.

## ஸ்ரெப்ரெனிஸா படுகொலைகள் 5பேர் போக்குற்றவாளிகள்




ஸ்ரெப்ரெனிசா படுகொலை தொடர்பில் விசாரணை நடத்திவந்த முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான ஐநாவின் போர்க்குற்ற விசாரணை தீர்ப்பாயம் இறுதித் தீர்ப்பினை வழங்குவதற்கு தயாராகி வருகின்றது.

பொஸ்னியாவில் 1995-ம் ஆண்டில் நடந்த ஸ்ரெப்ரெனிசா படுகொலையில் தொடர்புடைய 5 பேர் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரெப்ரெனிசாவில் சுமார் எட்டாயிரம் முஸ்லிம் ஆண்களும் இளைஞர்களும் மூன்று நாட்களில் கொல்லப்பட்டனர்.

ஐரோப்பாவில் ஹோலோகோஸ்ட் படுகொலைகளுக்குப் பின்னர் நடந்துள்ள மிக மோசமான இனப்படுகொலை சம்பவமாக ஸ்ரெப்ரெனிசா பார்க்கப்படுகின்றது.

பொஸ்னிய- செர்பிய இராணுவத்தில் உயர் அதிகாரிகளாக இருந்தவர்களில் 5 பேரே இந்தப் படுகொலை விசாரணையில் குற்றவாளிகளாக காணப்பட்டனர்.

பொஸ்னிய- செர்பிய இராணுவத்தின் முன்னாள் கமாண்டர் ராட்கோ மிலாடிச்சின் நேரடிக் கட்டுப்பாட்டில் பணியாற்றியவர்களே இந்த ஐந்து பேரும்.

த ஹேக் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இனப்படுகொலை குற்றத்திற்கான வழக்கு விசாரணையை ராட்கோ மிலாடிச் எதிர்கொண்டுள்ளார்.

## ஐஎஸ்ஐஎஸ் உடன் கைதிகள் பரிமாற்றம்

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளால் பிணைக் கைதிகளாக்கப்பட்டுள்ள ஜப்பானைச் சேர்ந்த கெஞ்சி கோடோவையும், தங்கள் நாட்டு விமானியான மா'-அல்-கசாபேயையும் மீட்க, பெண் தீவிரவாதியான சஜிதாவை விடுதலை செய்ய ஜோர்டான் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் தங்கியிருந்த ஜப்பானியர்களான ஹருணா யுகாவா, கெஞ்சி கோடோ ஆகியோரை ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் கடந்த வாரம் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்தனர்.

அவர்களை விடுவிக்க ஜப்பான் அரசு மூன்று நாட்களுக்குள் 200 மில்லியன் டாலர்கள் கொடுக்க வேண்டும் என நிர்பந்தம் செய்தனர். ஜப்பான் அரசு அதற்கு உடன் படாததால், ஹருணா யுகாவா தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.



## தலாய்லாமாவை சீன அதிகாரி சந்தித்தார்!

சீன அரசாங்கத்தின் முன்னாள் மூத்த அதிகாரி ஒருவர் தலாய்லாமாவை ரகசியமாகச் சந்தித்த வீடியோ ஒன்று பிபிசிக்கு கிடைத்துள்ளது.

2010 முதல் இரு தரப்புக்கும் இடையே முறையான பேச்சுக்கள் எதுவும் நடக்கவில்லை.

ஆனால், 2012 இல் எடுக்கப்பட்ட இந்த வீடியோ, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் ஒருவர், சீனாவால் அதிகாரபூர்வமாக ஒரு பயங்கர பிரிவினைவாதியாகப் பார்க்கப்படும் திபெத்திய பௌத்த ஆன்மீக தலைவரிடம் எவ்வளவு நேரடியாக பேசுகிறார் என்பதை காண்பிக்கிறது.

இன்னும் பல ரகசிய சந்திப்புக்கள் நடப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

## புளூட்டோவின் அருகில் விண்கலம்

அமெரிக்க விண் ஆய்வு நிறுவனமான நாசாவின் ஹொரிசோன் விண்கலம் பூமியில் இருந்து 500 கோடி கிலோ மீட்டர்கள் பயணித்து புளோட்டோவின் அண்டைப் பகுதியை சென்றடைய 9 ஆண்டுகள் பிடித்தன.

அந்த குட்டிக் கிரகத்தின் படங்களை அது விரைவில் அனுப்பத் தொடங்கும்.

## பெண்களைத் துரத்திக் காதலிப்பது தப்பில்லை

பெண்ணை துரத்தி துரத்தி காதலிப்பது, "பாலிவுட்" பாணி என்பதால், இந்தியரை பொறுத்தவரை, அதை பெரிய குற்றமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என, ஆஸ்திரேலியாவில், ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன், இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியாவில் குடியேறியவர், சந்தேஷ் பாலிகா, இவர் ஒரு ஆஸ்திரேலிய பெண்ணை, ஒன்றரை வருடமாக விடாமல் துரத்தி, காதலிக்க முயன்றுள்ளார். அது தோல்வியடையவே, வேறொரு பெண்ணை, நான்கு மாதங்களாக துரத்தியுள்ளார். இது குறித்த வழக்கு, ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், நீதிபதி மைக்கேல் ஹில் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி அளித்த தீர்ப்பு:இந்தி சினிமாக்களில், நாயகியை தொடர்ந்து துரத்தினால் அவள் மசிந்து விடுவதாக காட்டப்படுகிறது. அதையே, இந்தியரான பாலிகா பின்பற்றியுள்ளார். இந்த கலாசாரம் தண்டனைக்கு உரியது. எனினும், பாலிகாவின் வேலை பறி போகக் கூடாது என்ற நல்லெண்ணத்தில், தண்டனை விதிக்காமல் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த வழக்கு தள்ளி வைக்கப்படுகிறது. அதுவரை, பாலிகாவின் நன்னடத்தை கண்காணிக்கப்படும். இவ்வாறு தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. முன்னதாக, பாலிகாவின் வழக்கறிஞர் கோர்ட்டில் வாதாடியபோது, ""இந்தியாவில், பெண்களை துரத்திச் சென்று காதலிப்பது சகஜம். இங்கு அது கிரிமினல் குற்றம் என்பது பாலிகாவிற்கு தெரியாது என்பதால், அவரை மன்னிக்க வேண்டும்,"" என்று கேட்டுக் கொண்டார்.

## திடீரெனச் சரிந்த கட்டடம்

டெல்லியில் கட்டடம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 4 தொழிலாளர்கள் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

தெற்கு டெல்லியில் கிட்வாய் நகரில் கட்டுமான பணி நடந்துகொண்டிருந்த கட்டடம் ஒன்று இன்று காலை திடீரென இடிந்து விழுந்தது. இதில் பணியில் இருந்த 4 பேர் படுகாயமடைந்தனர்.

4 பேரும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவரது நிலைமை கவலைகிடமாக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விணையடி நீ எனக்கு...

தொடர் நாவல்

**– கவிஞர் வீ.மைக்கல் கொலின்–**

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.
தருமு சிவராமு (பிருமிள்)



அன்று சித்ரா பௌர்ணமி தினம்.திருகோணமலை கடற்கரை அந்தி மங்கிய நிலவொளியில் மஞ்சள் போர்வை போர்த்தியது போன்று மின்னிக் கொண்டிருந்தது. மழை வருவதற்கான அறிகுறிகளாய் மேகங்கள் தங்களுக்குள் சண்டையிட்டபடி ஓடிக்கொண்டிருந்தன. வானம் நிர்மலமாய் காட்சியளித்தது. மழைக்குப் பயந்தோ என்னவோ அன்று வழமையாகபௌர்ணமி தினங்களில் கூடும் சனக்கூட்டம் இல்லாமல் ஒருவர் இருவராய் ஒவ்வொரு திக்குகளில் அமர்ந்திருந்தனர். வழமை போல் கடற்கரை ஒளிபரப்புச் சேவை விளம்பரங்களையும் சேர்த்துக்கொண்டு சினிமாப் பாடல்களுடன் ஒலித்துக் கொண்டிருந்தது. கடல் அலைகள் மீண்டும் மீண்டும் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனைப் போல் கரையை நோக்கி வருவதும் போவதுமாய் காலாகாலமான தனது பந்த்தை உறுதி செய்து கொண்டிருந்தன.

அலைகளைப் போலவே மீன்பிடிக்கச் சென்றிருந்த சில படகுகளும், வள்ளங்களும் கரையை நோக்கி வந்தவண்ணமிருந்தன.கடற்கரையின் முன்னே கடலுடன் இணைந்திருக்கும் திருகோணமலை கோணேசர் கோட்டையின் பக்கத்தே புதிதாக அமைக்கப்பட்டிருந்த மைதானத்தில் தமது உடற்பயிற்சியை முடித்துக்கொண்டு இராணுவவீரர்கள் சிலர் கோட்டைக்குள் சென்று கொண்டிருந்தனர். பௌர்ணமிதினமாதலால் திருகோணமலை பொது வாசிக சாலையில் பத்திரிகை வாசிப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் ஏதோ ஒரு சமூக சேவை அமைப்பின் நிருவாக சபை கூட்டம் நடைபெறற்றுக் கொண்டிருந்தது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களின் வாகனங்கள் சில நகராட்சி மன்ற வளவிற்குள் நின்றிருந்தன.

ஜெயரதன் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தான். கடற்கரை மணலில் கால்களைப் புதைத்துக் கொண்டு அமர்ந்திருப்பது அவனது வழக்கம். அவனது கால்களை நனைத்துச் செல்லும் அந்த அலைகள் அவனது மனக் காயத்தை தடவிக் கொடுப்பது போலவும் வந்து தழுவிச் சென்றன. தாயின் மறைவிற்குப் பின்னர் அந்தக் கடற்கரை மணலும் அலைகளும்தான் அவனது சுமைதாங்கிகள்.

அன்றும் இப்படித்தான் கடற்கரை மணலில் கால்கள் இரண்டையும் நீட்டியபடி படுத்துக் கிடந்தான். அவனது மன உளைச்சலைத் தீர்ப்பது போலவோ என்னவோ அலைகளும் மெது மெதுவாக வந்து அவனது பாதங்களை செல்ல நாய்க்குட்டிபோல் நக்கி விட்டு போனது.ஒரு தாய் தன் மகனின் தலையை ஆசையுடன் கோதி விடுவதைப்போல அந்த அலைகள் அவனது கால்களை வருடிவிட்டுச் செல்லும். அதில் ஒரு ஆறுதல், ஒரு சுகம், சோகங்களை எல்லாம் இறக்கி வைத்தாற் போன்ற ஒரு ஆத்ம திருப்தி, ஒரு சுய தெம்பு,பிரச்சினைகளில் இருந்து விடுபட்ட உணர்வு அவனுக்குள் ஏற்படும். .தனிமை சில வேலை இனிமையாகவும் இருக்கிறது.

பகலெல்லாம் சூரியச் சூட்டை சுமந்த மணல் வெப்பத்தைக் கடத்தி ஜெயரதனைச் சுட்டது.ஆனாலும் அந்த சூடு அவனுக்கு உறைக்கவில்லை.அதைவிட பெரிய தீப் பிழம்பு அவனது மனசுக்குள் கனன்றுகொண்டிருந்தது. அவனது பார்வையில் பொது வாசிக சாலை தெரிந்தது, அவனை ஒரு பூரண மனிதனாக்கிய பெருமை அதற்கும் உண்டல்லவா? பக்கத்தில் கைவிடப்பட்ட ராணுவ காவல் காப்பு அரண் இந்திய ராணுவ வருகையின் மிச்ச சொச்சங்களாக திருமலை மண்ணில் சுவடு பதித்து நின்றது. சிந்தனை ஓட்டம் தடைப்பட்டது.

" நிவேதா "

எவளை மறக்க வேண்டும், எவள் நினைவுகளைத் துடைத்தெரிந்து புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு வந்திருந்தானோ அவளது நினைவுகள் மீண்டும் மீண்டும் மனத் திரையில் பதிவாகிக் கொண்டிருந்தது.இவன் மன ஓட்டத்திற்கு ஏற்பவோ என்னவோ கடல் அலைகளும் வெள்ளை நுரைகளுடன் ஒரு பாட்டம் அழுது தீர்த்து விடுவதைபோல் ஓ வென்ற இரைச்சலுடன் வந்து இவன் கால்களை மணலில் இருந்து வெளியே துப்பிவிட்டு ஓடிப்போனது.

முழுநிலவு நாட்களில் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பது உண்மை. நிலவு கடலின் தன்மையைப் பாதிப்பது போல் நம் மன நிலையையும் பாதிக்கும் என்பதற்கு சில ஆதாரங்கள் கண்டு.பிடிக்கப்பட்டுள்ளன. நம் உடலின் என்பது சதவீதம் வெறும் தண்ணீரால் ஆனது .நம் உடலில் உள்ள திரவத்தின் தன்மை, இந்த உலகம் தோன்றிய ஆதிகாலத்தில் காணப்பட்ட கடல் நீரின் தன்மையைக் கச்சிதமாக ஒத்திருக்கிறது.இதனால்தான் நிலவு கடலின் தன்மையை பாதிப்பது போல் மனிதனின் தன்மையையும் பாதிக்கும் என்று நம்புகிறார்கள்.இன்றைய முழுநிலவு அவனைப் பாதித்ததோ என்னவோ ' நிவேதா ' என்ற நிலவு அவனை வெகுவாகப் பாதித்து விட்டது உண்மை.

' நிவேதா சந்திரன் கீழ் நோக்கி சதா விழுந்து கொண்டே இருக்கிறது. ஆனால் அதேசமயத்தில் அது பக்க வாட்டிலும் நகர்வதால் மேலே தூக்கி விடப்பட்டு விழாமல் காக்கப்படுகிறது... அந்த நிலவைப் பார். நிலவுக்கும் கறை உண்டு என்று பொய் சொல்லும் இந்த கவிஞர்களைப் பார்க்கும் போது எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. நிலவிலே கறைகளைப் போல் தோன்றும் அவைதான் “”கிண்ணக் குழிகள்” நிலவிலே அதிகமான மேடு பள்ளங்கள் உள்ளன.பெரும் பாதாளங்களைப் போல் குழிகள் உண்டு ...' நிலவிலும் மேடு பள்ளங்கள் ...பெண்ணிலும் மேடு பள்ளங்கள் உள்ளன. நிலவுக்கும் பெண்ணுக்குமான ஒப்பீடு ஒரு வகையில் பொருத்தமானதே ...'

“ போதும் போதும்' கவிஞரே உம்மை நிலவைப் பார்த்து கவிதை எழுதச் சொன்னால் விஞ்ஞானி ஆகிவிடுவீர் போலிருக்கிறது. நிவேதா அவனது வாயைப் பொத்துகிறாள்.ஜெயரதன் மெல்ல சிரித்தபடியே சொல்கிறான் ' கவிதையா ? நிலவைப் பற்றியா? எந்த நிலவைப் பற்றி? ஒரு நிலா இன்னுமொரு நிலாவைப் பார்த்து கவிதை எழுதச் சொன்னால் எப்படி எழுதுவது ?

எந்த தருணத்தில் அவன் அவளை நிலவாக ஒப்பிட்டு வருணித்தானோ இன்று வானத்து நிலவைப்போல் அந்த நிலாவும் அவனுக்கு இல்லை என்றாகிவிட்டது.

நிலா வானத்தில்இருப்பதுதான் நிலவுக்கும் நல்லது, கவிஞனுக்கும் நல்லது. ஆனால் அவனுக்கு ...?

**மேவும்.. .. ..**

# என் தேதைக்கு

**– கீதா –**

ஹலோ! யாருங்க..?”

“நாந்தாம்மா பேசுறேன். எப்படி இருக்க?”

நாந்தாம்மா என்கிற அழுத்தத்தில் முகம் ரோசாப்பூவாய் சில்லிட்டது.

“நீ..நீங்களா? இருங்க மாடிக்கு வர்றேன். இங்க பேசமுடியாது” கொஞ்சலாய் வெளிப்பட்டது வார்த்தைகள். கேள்வியோடு மாமியார் பார்வையையும் சட்டை செய்யாமல் மாடியேறி மூச்சிறைக்க,

“சொல்லுங்க.. மாடியில இருக்கேன்.”

“சாப்பிட்டியாடா நீ!” கரகரத்த ஆண்குரலில் பாசம் பொங்கியது.

“ம்ம்!” விசும்பலாய் வந்தது வார்த்தைகள்.

பத்து நிமிட உரையாடலில் ஏனோ அவள் எதிர்பார்த்த விசயம் தவிர எல்லா சம்பிரதாய விசாரிப்புகளும்.

“அப்புறம்”

சிலுசிலுவென சிறகடித்த இதயத்தின் மத்தியில் நரம்பொன்றை கத்தரித்த வலி வரும் அவளுக்கு இந்த வார்த்தையை கேக்கும்போதெல்லாம். வெளியூரிலிருக்கும் கணவனின் அழைப்பிற்கு ஏங்கித் தவிப்பதும், வந்ததும் குதூகலிப்பதும் அவன் குரல் கேக்கும் இந்த சில நிமிடங்களுக்குதானே. அவனுக்கு தன்னிடம் பகிர விசயமே இல்லாது எல்லாமும் தீர்ந்து போயிற்று என்கிற வெறுமையை வலியோடு உணர்த்தும் இந்த வார்த்தை நிச்சயம் கொடிது.

“ம்ம்.. சரி ஒண்ணுமில்ல” வீம்பாய் சொன்னாலும் பரிதவிக்கும் மனசு. இன்னிக்கும் அப்படித்தான். ஆனால் கண்ணீர் மட்டும் முட்டிக்கொண்டு வந்தது.

“சரிம்மா. பாத்துக்கோ! அடுத்தவாரம் பேசுறேன்.”

“ம்ம்...வந்து..” சொல்லி முடிப்பதற்குள் அலைபேசி அடக்கமானது.

ஏனோ அழணும் போல இருந்தது. சின்னதா ஒரு வாழ்த்து சொல்லியிருக்கலாம். என்னதான் வேலையினாலும் பொண்டாட்டி பிறந்தநாள் கூடவா மறந்து போகும். எல்லாமே நானா சொல்லிச் சொல்லி வாங்கணுமா என்ன? காலையில் பால் பாயசம் செஞ்சதுக்கே நக்கல் தாங்கல. ரெண்டு பிள்ளைங்களுக்கப்புறம், இந்த வயசுல இது வேறயான்னு? இப்படி அழுறது தெரிஞ்சா நாத்தி நமட்டு சிரிப்பு சிரிச்சே கொன்னுருவா. ஏன்மா என்னப் பெத்தே? அனாவசிமாய் அம்மாவுக்கு வசவு விழுந்தது. அவனை குறை சொல்ல முடியாத கோவம் கேவலாய் வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு வேகவேகமாய் நடந்தாள். மூச்சை மெல்ல இழுத்துவிட்டுக்கொண்டாள். சமாதானமானது மனது.

மாடியிறங்கி வந்தாள். வழக்கம் போல சலனமற்ற முகத்துடன்... துணிமடிக்கையில் வாசலில் அழைப்புமணி சத்தம். “அம்மா பார்சல் வந்திருக்கு.” யாருக்கிட்ட இருந்து? பெயர் எதுவும் இல்லாமல் ரோஜாக்கள் சகிதம் உள்ளே அழகான ஒரு தேவதை பொம்மை. நேர்த்தியும் அழகும் குழைந்து ஏதோ மனதை ஈர்த்தது.



என் தேவதைக்கு என்றெழுதியதை தவிர வேறேதும் இல்லை. வினாடி நிதானித்தவள் வந்த சில நிமிடங்களில் இறக்கைகள் முளைத்து கணவனிடம் தேடி பறக்கலானாள்.

“அண்ணி... அது... அது எனக்கு வந்தது... நரேன்கிட்ட இருந்து. அதான்... அம்மாட்ட சொல்லிராதீங்க.”

வருங்கால கணவனிடமிருந்து அவளுக்கு வந்த பரிசு.

“யாருக்குன்னு தெரியாமத்தான் நித்தி மன்னிச்சிடு. சீக்கிரம் எடுத்துட்டுப் போ. அத்தை வந்திடுவாங்க.”

நட்பாய் சிரித்தாள் அவள். ஏனோ குதூகலித்தது மனசு.


**உங்கள் மலைமுரசில்**

**புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக உங்கள் சிறுகதைகள் கோரப்படுகின்றன.**

எந்தத் தலைப்பிலும் சிறுகதைகள் அமையலாம். 300 - 400 சொற்களைக் கொண்டதாக தங்கள் ஆக்கங்கள் அமைந்திருத்தல் அவசியம்.

அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு, 159 ஏ கடற்காட்சி வீதி, திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## வேதனை தவிர்த்து வாழ்வில் விடியலைத் தேட வேண்டும்

நெருக்கமில்லாத உறவு
உருக் குலையும்
பொருத்தமில்லாத தாம்பத்தியம்
வருத்தம் தரும்!

தேடலில்லாத கூடல்
திருப்தி தரா
பாடல் தாளமில்லாத ஆடல்
முழுரசனை தரா!

வயது முதிர்ச்சி பெற
வாலிப வளப்பிழக்கும்
வயோதிபம் வந்துசேர
வாழ்க்கை வெறுத்துப்போகும்!

சிந்தித்து எடுக்காத முடிவு
செம்மை பெறா
செல்வம் இருக்குதென்று
செருக்குகொள்ளக்கூடா!

காதல் தோற்றுப்போனால்
சாதல் முடிவு ஆகா
வேதனை தவிர்த்து வாழ்வை
சாதனையாக்க வேண்டும்!

கவிக்குயிலன்,
சேனையூர்



## கனவில் என் வாழ்க்கை

பிரியா, நிலாவெளி

பகல் முழுவதும்
இரவாக வேண்டுமென்று
இறைவனிடம் வேண்டினேன்..!
இரவுநேர கனவில்
மட்டுமே உன்னோடு
வாழ்ந்து கொண்டிருக்கும்
சுகத்தை - நாள் முழுவதும்
அனுபவிக்கவேண்டும்
என்ற பேராசையினால்.....!

## பருவங்கள்

சந்திப்பு தெருவில்
தடுமாறும் வயதில்
சிரித்து தலைசாய்த்து
மௌனமாய் பேசி

சுகநலமெலாம்
விசாரணை செய்து
இருக்கும் உறவுகள்
இருப்பு பற்றியெலாம்

சுகமாய் பேசி
மனமும் சுகந்திட

துள்ளித் திரிந்த
பருவம் துளிர்ந்தது
கண்களில் இருந்து. .

திருமலை சுந்தா

## இருக்கின்றேன்!

இன்னும் இருப்பேனா?
இருப்பேன் போலே உளது?
கன்னித் தமிழுந்தான்
கரணியமாய்த் தெரிகிறது?

காந்தி ஐயா எந்தன்
கண்ணுக்குள் வருகின்றார்!
காந்தக் கலைஞரது
கடன்களையும் காண்கின்றேன்!

பெரியாரின் - அண்ணாவின்
பேருருக்கள் தெரிபடுதாம்!
அருந்தமிழின் பாவேந்தர் -
ஆம் பாவா ணரும் வருவார்!

உள்ளுவதெல்லாம்
உயர்வுள்ளலா மவற்றைத்
தள்ளினும் தள்ளாமைத்
தன்மையதால் இருக்கின்றேன்!

தாமரைத் தீவான்
ஒச்சந்தீவு, கிண்ணியா.



## சிரிக்கக் கற்றுக்கொடுத்தவள்

நீ
புன்னகைக்கும் போதெல்லாம் – என்னுள்
புதுரெத்தம் பாய்கிறது
உண்மையைச் சொல்
செவ்விதழ்களை நீ திறந்துகொள்வது
சிரிப்பதற்கா? அல்லதெனைச்
சிலிர்ப்பூட்டுவதற்கா?

தினமும் எழுந்து
சிந்திக்கிறேன் பெண்ணே –உன்
சிரிப்புக்குவமைகளை
கடைசியில் என்னையே நான்
நிந்தித்துக்கொள்கிறேன்
வராத வார்த்தைகளுக்காய்

நிட்சயமாய்ச் சொல்வேன்
நீதானெனக்குச்
சிரிக்கக் கற்றுக்கொடுத்தவள் –என்
வாழ்வின் மனஇறுக்கங்களால்
தோன்றிய வேதனைகளுக்கு நீ
மரண தேவதை

அதுவோர் காலங் கண்ணே
எல்லோருக்கும் விடிந்திருக்கும்
நான்மட்டும்
இருட்டில் நடந்து கொண்டிருப்பேன் உன்
புன்னகைப் பொற்கரங்கள்
என்னிமைகளைத் தட்டித்திறக்காதவரை

நினைத்துப் பார்க்கிறேன்-நாம்
பேசிக்கொண்டதைவிட
பிரியமாகச் சிரித்துக்கொண்ட
பொழுதுகள் ஏராளம் ஒருவேளை
முறைத்துக் கொண்டால்கூட
அதுயார் முதலில்
சிரித்துக்கொள்வதென்பதற்காகவே
இருந்திருக்கும்.

விலகிப் போனபின்னும்
நீ சிந்திய எல்லாச் சிரிப்புகளையும்
சேமித்து வைத்திருக்கிறேன் என்
சின்ன இதயத்தில்
என்றாவதொருநாள் நினைத்து
எனக்குள் நானே
சிரித்துக் கொள்வதற்காய்.

ஜீவன்

**வரலாற்றுப் பக்கம்**

# திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேஸ்வரம்

கடந்தவார தொடர்ச்சி.. ...

அதுபோலவே கோணேசர் பதிகத்திலும் அடுத்துவரும் வரிகள் திருக்கோணேசர் ஆலயச் சூழலின் இயற்கை அழகினை வர்ணிப்பதாக அமைத்திருக்கிறார் சம்பந்தர்.

'குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரே' என்று கண்மூடிப் பாடுகையில் இன்றும் நமக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்படும். இது பிரதேச உணர்ச்சியைப் பயன்படுத்தி சைவசமய மறுமலர்ச்சியில் மக்களைத் தாமாக முன்வந்து உழைக்கச் செய்ய அவர் கையாண்ட வழிமுறையாகும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் குறிப்பிட்ட தலத்தின் பெயரினை இணைத்துப் பாடும் வழக்கம் காரைக்கால் அம்மையாரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங் காடே

என்ற காரைக்கால் அம்மையாரின் திருவாலங்காட்டுத் திருப்பதிகம் இதற்குச் சான்றாகிறது. எனவே இந்த வழிமுறையைப் பின்பற்றி 'கோணமலையமர்ந்தாரே' என்று பாடிய சம்பந்தரின் பதிகங்கள் சமய உணர்வை மட்டுமின்றி நமக்கு பிரதேச உணர்வை ஊட்டுவதோடு இன்று திருகோணமலைப் பிரதேசத்தின் வரலாற்றை ஆராய்வோருக்கு உதவும் ஓர் ஆவணமாகவும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.



**பாடல் எண் : 1**

கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே.

(சந்தனக் கட்டைகளும், கரிய அகில் கட்டைகளும், அளவில்லாதமாணிக்கக் கற்களும் கடற்கரையினில் சேர, ஒலிக்கின்ற கடலின் அலைகள் முத்துக்களைக் கொழிக்கும் கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)

**பாடல் எண் : 2**

கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமா மலையமர்ந் தாரே.

(பிறர் கொடியது என்று அஞ்சும்அளவு அலைகளையுடைய ஒலிக்கின்ற கடல் முத்துக்களைச் சுமந்து வந்து மக்களுக்கு வழங்கும் வளமிக்க கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)

**பாடல் எண் : 3**

குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.

(ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த கோணமாமலையில் வீற்றிருக்கிறார். )

**பாடல் எண் : 4**

தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ் செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமா மலையமர்ந் தாரே.

(ஆரவாரத்துடன், செழுமையான முத்துக்கள், செம்பொன், இப்பி (சங்கு, சிப்பி) இவற்றைத் திரளாக அலைகள் கரையிலே சேர்க்கும் கோணமாமலை என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)

**பாடல் எண் : 5**

ஞாலம், கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.

(இவ்வுலகில், திருக்கோயிலும், சுனையும் கடலுடன் சூழ விளங்கும் கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)

**பாடல் எண் : 6**

விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமா மலையமர்ந் தாரே.

(விரிந்து உயர்ந்த மல்லிகை, மாதவி, புன்னை, வேங்கை, செருந்தி, செண்பகம், முல்லை ஆகிய சோலைகள் சூழ்ந்த கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)

இப்பதிகங்களின் வரிகள் இயற்கையில் அவருக்கிருந்த ஈடுபாட்டை நமக்கு உணர்த்துவதாய் அமைந்துள்ளன. அவர் நேரில் தரிசித்திராத திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் சூழலை தலயாத்திரை வந்துசென்ற அடியவர்கள் மூலம் அறிந்துகொண்டார்.

தொடரும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூரில் சூறையாடப்படும் பழங்குடி இன தமிழ் மக்களின் - விசாயக் காணிகள்

- திருமலை தர்ஷன் -

2006 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு உள்ளாகி மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மூதூர் கிழக்கில் வாழும் பழங்குடி இன மக்கள் பாட்டாளிபுரம், வீரமா நகர், நல்லூர் நீலக்கேரி போன்ற கிராமங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இதில் நல்லூரில் வாழும் பழங்குடி மக்களுக்கு சொந்தமான LDO பத்திரத்தை உடையதும் பரம்பரை உரித்து உடையதும் மற்றவர்களுக்கு விற்க முடியாததும், பழங்குடி இனத்தவர்களுக்கே உரியதுமான 1000 ஏக்கர் நெற் காணிகள் அயல் காணிகளில் வசிக்கும் சகோதர இனத்தவர்களினால் சட்டவிரோதமான முறையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வாழும் பழங்குடி இன மக்கள் மற்றைய பழங்குடி இன மக்களைப் போலவே கல்வி அறிவு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளார்கள். இதனை சாதகமாக பயன்படுத்தி இவர்களை விரைவாக ஏமாற்றி தமது காரியங்களை விரைவாக சாதித்துக் கொள்வதனை இக்கிராமங்களை சூழவுள்ள மக்கள் தொடர்ச்சியாக கையாண்டு வருகின்றார்கள். இவ்வாறான முறையிலேயே இவர்களது 1000 ஏக்கர் நெற்காணிகளும் களவாடப்பட்டிருக்கின்றன.

பழங்குடி இனத் தலைவரான பத்தாங்கத்தி எனப்படும் கௌரவத்துக்குரிய பதவியினை கோணமாமலை பத்தாங்கத்தி வகித்து வந்த காலப்பகுதியில் 1930ஆம் ஆண்டு D.S.சேனநாயக்கா அவர்களின் ஆட்சிக்காலத்தில் மூதூர் தொகுதி எம்பி யாக அபூபக்கர் இருந்த போது பழங்குடி இன மக்களுக்காக நல்லூரில் 1930ஆம் ஆண்டு உன்னைக்குளம் என்ற குளத்தை அமைத்துக் கொடுத்து உன்னைக் குளத்தின் வடிகால் பகுதியில் 1000 ஏக்கர் நெற்காணிகளை உருவாக்கி 1935ஆம் ஆண்டு வந்த நெற் காணிகளுக்கு சொந்தமான பழங்குடி இன மக்களுக்கு LDO பத்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த நெற் காணிகளை மற்றையவர்கள் அபகரித்துக் கொள்ளாத வகையில் பரம்பரை உரித்துடையவையாக இந்த பத்திரங்கள் உள்ளவை கவனிக்கப்பட வேண்டியவையாகும்.




இந்த 1000 ஏக்கர் நெற் காணியும் பத்தினி அம்மன் விவசாய சம்மேளனத்துக்கு உட்பட்டதாக நான்கு கண்டங்களை கொண்டதாகவும் இருந்தன. இவற்றில் கொங்கன் குளம் கட்டிடத்தில் 15 பேருக்கு சொந்தமான வயல் நிலமும் அரப்பத்தச் சேனை கட்டிடத்தில் 49 பேருக்குச் சொந்தமான வயல் நிலமும் ஆச்சேரிப் பள்ளம் கண்டத்தில் 22 பேருக்குச் சொந்தமான வயல் நிலமும், சாலம்பாக்கேணி கண்டத்தில் 10 பேருக்குச் சொந்தமான வயல் நிலமும் காணப்பட்டதாக கூறப்பட்டது.

இந்த விவசாய நிலங்களில் பழங்குடி இன மக்கள் விவசாயம் செய்து வந்த நிலையில் 2006ஆம் ஆண்டு சம்பூரில் ஆரம்பமான மக்கள் இடப்பெயர்ச்சியின் தொடர்ச்சியாக நல்லூர் பிரதேச பழங்குடி இன மக்களும் இடப்பெயர்க்கு உள்ளாகி மட்டக்களப்பில் அமைக்கப்பட்ட தற்காலிக இடைத்தாங்கல் முகாம்களில் தஞ்சம் அடைந்தார்கள். பின்னர் 2009ஆம் ஆண்டு நல்லூர் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டார்கள்.

இக்காலப் பகுதியில் நல்லூர் கிராம மக்களின் வயல் நிலங்கள் அயல் கிராமமான இக்பால் நகர் மக்களினால் சூறையாடப் பட்டதுடன் வயல் உரிமையாளர்களின் பெயர்களில் இருந்த இடாப்புக்கள் மாற்றம் செய்யப்பட்டு இக்பால் நகரைச் சேர்ந்தவர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டன.

வயல் செய்பவர்களுக்கு அரசாங்கத்தினால் குறைந்த விலையில் வழங்கப்படுகின்ற மானியப் பசளையினை ஒருவர் பெறுவதாயின் காணி உரிமையாளரின் ஒப்புதல் கடிதம் விவசாய சம்மேளனத்தின் ஒப்புதல் கடிதம் இவற்றோடு வயல் நிலம் அமையப் பெற்றுள்ள கிராம சேவையாளர் பிரிவுக்கு சொந்தமான கிராம சேவை உத்தியோகத்தரின் ஒப்புதல் கடிதம் இவற்றினூடாகவே மானியப் பசளை கொடுக்கப் படுகின்றன. ஆனால் நல்லூரில் உள்ள 1000 ஏக்கர் காணிகளுக்கும் மானியப் பசளை பெறப்படுகின்ற முறை சட்டத்துக்கு மாறாகவே காணப்படுகின்றது.



உயர் உரிமையாளராக பழங்குடி இனத்தவர் இருக்க வயல் இடாப்பு வேறு ஒருவரின் பெயரில் உள்ளது. வயல் நிலம் அமைந்துள்ள பகுதி வரைபடத்தின் அடிப்படையில் நல்லூர் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டதாக இருக்கும் போது மானியப் பசளைக்கான அனுமதி இக்பால் நகர் கிராமசேவையாளரினால் வழங்கப்படுவதுடன் 1000 ஏக்கர் நெற்காணிகளுக்கும் பத்தினி அம்மன் விவசாய சம்மேளனத்துக்கு உட்பட்டதாக இருக்கையில் புதிதாக ஓர் விவசாய சம்மேளனம் உருவாக்கப்பட்டு அவர்களின் ஒப்புதலுடன் மானியப் பசளை வழங்கப்படுகின்றது என மக்கள் குறை கூறுகின்றார்கள்.

சகோதர இனத்தவர்களுடைய இவ்வாறான திருட்டுத் தனமான காணி அபகரிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக பிரதேச செயலகம் பொலிஸ் நிலையம், மத்திய சபை என பழங்குடி இன மக்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் ஆனால் இது வரையில் இதற்கு சரியான தீர்வை பெற்றுத் தருவதில் உரிய அதிகாரிகள் அக்கறை அற்றவர்களாக இருப்பதினால் சொந்த நிலங்களை இழந்த மக்கள் பெருந் துன்பங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள். எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் அலசி ஆராய்ந்து பக்க சார்பற்ற முறையில் நீதியினை நிலை நாட்டும் வகையில் இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டியது உரிய அதிகாரிகளின் கடமையாகும்.

# கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தை ஏற்குமா ததே.கூ?

- கிழக்குப் பிரியன் -

திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை என மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியதான பெரு நிலப்பரப்பையும், இயற்கைத் துறைமுகத்தினையும், பரந்த வயல் நிலமென வளமான பௌதீக சூழலையும் தன்னகத்தே கொண்டதும் தமிழ், முஸ்லீம், சிங்கள என மூவின மக்களும் செறிந்து வாழும் அதே வேளை நாற்பது சதவீத தமிழ் மக்களையும் 37 சதவீத முஸ்லீம் மக்களையும், 23 சதவீத சிங்கள மக்களையும், 1916299 வாக்காளர்களையும் கொண்டதுமான தமிழர்களை பெரும்பான்மையாக கொண்ட செழிப்பானதொரு மாகாணமாக கிழக்கு மாகாணம் திகழ்கின்றது.

நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலின் பிற்பாடு கிழக்கு மாகாண சபை பற்றிய செய்திகள் கிழக்கு மக்கள் பலரினாலும் பேசப்படும் செய்தியாக காணப்படுகின்றது. அதாவது தமிழ் பேசும் மக்களான தமிழ் முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகளிலேயே அதிகம் பேசப்படுகின்றன. அதாவது கிழக்கு மாகாண சபை அரச அதிகாரம் பற்றியதாகவே உள்ளது.

08.01.2015 அன்று நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு தோல்வியைத் தழுவியது மட்டுமல்லாது கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தை இழக்கும் நிலையும் ஏற்பட்டது. இதன் விளைவாக கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தினை பெற்று சபையை நடத்திச் செல்வதற்கான பொறுப்பு இரண்டாம் நிலை பெரும்பான்மையைக் கொண்டதான தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கே உரித்தானது என்ற நிலையும் உருவானது.

அதே வேளை 39 உறுப்பினர்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையிலே ஆட்சி அதிகாரத்தை தம் வசப்படுத்த வேண்டுமாயின், 19 ஆசனங்களை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்ற விதியும் உண்டு. இவ்வாறானதோர் கட்சியே ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் ஆளுமைக் கட்சியாக நோக்கப்படும்.

இவ்வாறானதொரு நிலையில் பதினொரு ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பே பேரம் பேசும் சக்தியாக கிழக்கில் நிலை கொண்டுள்ளது என்றால் யாராலும் மறுக்கமுடியாது. இவ்வாறானதொரு சூழலில் கிழக்கிலுள்ள மற்ற அரசியல் தலைமைகள் யதார்த்த பூர்வமாக மனசாட்சியோடு சிந்தித்து தனிப்பெரும்பான்மையான ஆசனங்களோடும் முன்னைய காலத்திலேயே விட்டுக்கொடுப்பு அரசியலை செய்த கட்சி என்ற ரீதியிலும் மாற்று அரசியல் தலைமைகள் கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கே பெற்றுக் கொடுப்பதானது மாத்திரமே ஒட்டுமொத்த நாட்டிற்கும் நன்மை பயக்கும் என்பதனை கருத்தில் கொண்டு யதார்த்த பூர்வமான அரசியல் நகர்வுகளை செய்து தமிழர்களுக்குரியதை தமிழர்களுக்கே பெற்றுக் கொடுக்க ஆவணை செய்ய வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்களின் கடந்த கால அரசியல் இருப்பை நோக்குவோமேயானல் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டும் ஸ்திரத்தன்மையான சூழலை ஏற்படுத்தியும் தமிழர்களை நலிவுபடுத்தியும் காலம் காலமாக வந்த சிங்கள அரசுகள் தமது வெற்றிக்கான விதையை விதைத்தனர் அது மாத்திரமல்லாது எமது சகோதர இனமான முஸ்லீம் சமூகத்தின் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் சுயநலத்திற்காகவும், தங்களின் இருப்பை தக்க வைப்பதற்காகவும் பிரித்தாழும் தந்திரத்தையும் தட்டிப்பறிப்பு அரசியலையும் மேற்கொண்டு சகோதர இனமான தமிழர்களை படுபாதாளத்திற்கு தள்ளினர். இவையெல்லாம் கடந்த கால வரலாற்று உண்மை.

தமிழர்களின் கடந்த கால கொள்கை ரீதியான விட்டுக்கொடுப்பு அரசியலையும் பொறுமையையும் மாற்று அரசியல் தலைவர்கள் சரியான முறையில் தமக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளனர் என்றால் அது பொய்யாகாது (2013ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி முதலமைச்சர் பதவியையும் பெறும்படி ததே.கூ முஸ்லீம் காங்கிரஸை கோரி நேசக்கரம் நீட்டியது. முஸ்லீம் தலைமைகள் அதனை பொருட்டாக எண்ணாது நேசக்கரத்தை தட்டி விட்டது வரலாறு.)

இவ்வாறானதோர் நிலையில் தமிழ் மக்கள் தமது பெருவாரியான வாக்கினை சனாதிபதி தேர்தலிலே த.தே.கூவின் தலைமையின் கீழ் நின்று இன்றைய சனாதிபதி மைத்திர பால சிறிசேனவின் வெற்றிக்கு பெரும் பங்காற்றினர். இவ்வாறானதோர் நிலையில் இந்த அரசானது த.தே.கூவே கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தை ஏற்று நடாத்தி தமிழர்களுக்கு தகுந்த கைமாறு செய்ய வேண்டும்.

இன்னும் தாமதிக்காது தமிழரசியல் ஞானமாகவும் புரிதலுடனும் தமிழ் மக்களுக்குரிய உரிமையை பெற்றுக் கொடுப்பதில் ஒன்றித்து உழைக்க வேண்டும். ஏனெனில் அரசியல் அறிவுள்ள தமிழன் முதல் அடிமட்ட தமிழன் வரை த.தேகூவின் நகர்வை கண்காணித்துக் கொண்டிருக்கின்றான் என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INFOMATION TECHNOLOGY

MOBILE

## புதிய சேவை அறிமுகம்

ஸ்மார்ட் கைப்பேசிகளின் ஊடாக மனிதர்களில் ஏற்படும் பக்கவாத நோய்களை கண்டறிவதற்கான சாதனத்தை உருவாக்கும் முயற்சியில் சம்சுங் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இதன் அடிப்படையில் தற்போது EDSAP அல்லது Early Detection Sensor & Algorithm Package எனும் மாதிரி சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.



## சம்சுங் Galaxy S6

சம்சுங் நிறுவனம் Galaxy S6 எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. இக்கைப்பேசியானது 5.1 அங்குல அளவுடையதும், 2560 x 1440 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Samsung Exynos 7420 Processor, பிரதான நினைவகமாக 4GB RAM ஆகியனவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. இவை தவிர 20 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெராவினைக் கொண்டுள்ளதுடன், Optical Image Stabilization (OIS) எனும் புதிய தொழில்நுட்பத்தினையும் உள்ளடக்கியுள்ளது.

## இதயநோயை கண்டறியும் டுவிட்டர்

பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரின் உதவியுடன் இருதயம் தொடர்பான நோய்கள் உடையவர்களை கண்டறிய முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.


பென்சில்வேனியா பல்கலைக்கழகம், அமெரிக்காவிலுள்ள Northwestern பல்கலைக் கழகம், மற்றும் Melbourne பல்கலைக்கழகம் என்பனவற்றின் ஆய்விலே இத்தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

## கடவுச் சொற்கள் பறிப்பு




மாணவர்களின் கற்றல் திறனை பாதிக்கும் பேஸ்புக் பாவனையை கட்டுப்படுத்த அவர்களின் கடவுச்சொற்களை கட்டாயப்படுத்தி வாங்கும் சம்பவங்கள் அமெரிக்காவில் இடம்பெற்றுவருகின்றது. இதன்படி சமூகலைத்தள பாவனையின் கட்டுக்கோப்புக்களை மீறிய மாணவர்களின் கடவுச்சொற்கள் இம்மாதம் முதலாம் திகதி முதல் இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்நடைமுறை விரைவில் ஏனைய நாடுகளுக்கும் பரவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அழுக்கு நீர் - சுத்த நீர்




மின்னல் வேகத்தில் வளர்ந்து வரும் தொழில் நுட்ப உலகில் தற்போது அழுக்கு நீரை குடிநீராக மாற்றும் சோலார் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. Desolenator எனப்படும் இச்சாதனமானது சோலர் தொழில்நுட்பம் மூலம் நீரை வெப்பமேற்றுவதன் மூலம் நீர் சுத்திகரிக்கப்படுகின்றது. இதில் சேமிப்பு மின்கலம் மற்றும் டுஊனு திரையும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்மார்ட் பாதணி சந்தையில்...



ஸ்மார்ட் காலணிகளும் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. Altra Halo Smart Shoe எனும் இக்காலணிகள் ஓட்ட நிகழ்வுகளில் பங்குபெறுபவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது அவர்களின் ஸ்டைல், காலடி வைக்கும் முறைகள் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## நவீன ரக தலைக்கவசம்

உலகத் தரம் வாய்ந்த தலைக்கவசங்களை வடிவமைக்கும் நிறுவனங்களுள் ஒன்றான Forcite ஆனது கமெரா மற்றும் தொடர்பாடல் சாதனங்களை உள்ளடக்கிய நவீனரக தலைக்கவசத்தினை வடிவமைத்துள்ளது. இதில் இணைக்கப்பட்டுள்ள கமெராவானது 160 டிகிரி கோணத்திலும், 120fps எனும் வேகத்திலும் காட்சிகளை பதிவு செய்யக் கூடியதாக இருக்கின்றது.



தவிர புளூடூத் தொழில்நுட்பமும் தரப்பட்டுள்ளதுடன், இதன் ஊடாக ஸ்மார்ட் கைப்பேசிகளை இணைத்து

OTHER

## ஜீமெயில் ஊடாக பணவசதி



இணைய உலகில் அசைக்க முடியாத அரசனாக திகழும் கூகுள் நிறுவனம் ஜிமெயில் எனும் மின்னஞ்சல் சேவையை வழங்கி வருவது அறிந்ததே. இச்சேவையை உலகில் அதிகளவானவர்கள் பயன்படுத்தி வரும் நிலையில் இதன் ஊடாக பணம் அனுப்பும் வசதி முதன் முறையாக அறிமுகம் செய்யப்படுகின்றது. இதன்படி இன்னும் சில வாரங்களில் நண்பர்கள் மற்றும் குடும்பத்தவர்களுக்கு பணம் அனுப்ப முடியும்.

## புதிய வசதிகளுடன் டுவிட்டர்



மில்லியன் கணக்கான பயனர்களை தன்னகத்தே கொண்டுள்ள பிரபல சமூகவலைத்தளமான டுவிட்டர் இரு புதிய வசதிகளை அறிமுகம் செய்துள்ளது. இதன்படி வீடியோ எடிட்டிங் மற்றும் குழுக்களுக் கிடையிலான சட்டிங் ஆகிய வசதிகளையே அறிமுகம் செய்துள்ளது.

இவ்வசதிகளை டுவிட்டர் கணக்கு வைத்திருக்கும் அனைத்து பயனர்களும் பயன்படுத்த முடியும். இதேவேளை வீடியோக்களின் நீளம் ஆகக் கூடியது 30 செக்கன்கள் உடையதாக மட்டுமே இருக்க முடியும்.

## விண்டோஸ் 8 ஸ்மார்ட் டேபிள்

ஸ்மார்ட் கைப்பேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம் எனும் சாதனங்களின் வரிசையில் ஸ்மார்ட் டேபிளும் (மேசை) உருவாக்கப்பட்டுள்ளது. 46 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்ட இச்சாதனம் அடுத்த வாரமளவில் விற்பனைக்கு வரவுள்ளது. மேலும் இது 64 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதாக இருப்பதுடன் விண்டோஸ் 8.1 மற்றும் கூகுளின் அன்ரோயிட் கிட்காட் இயங்குதளங்களில் செயற்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



# குறுக்கெழுத்து புதிர் 046

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | | 13 ம | | ■ | 2 | | 14 க |
| 3 | | | | ■ | ■ | ■ | 15 | |
| 4 | 16 | 5 | 17 ரு | 18 | 19 | ள | | |
| ■ | | ■ | ■ | | | 20 கி | | 21 |
| 6 | லை | | | சே | | 7 | | |
| ■ | ■ | ■ | ■ | னா | ■ | | ■ | |
| 8 | னா | 22 | 10 | | | ள் | ■ | ங் |
| ன் | ■ | | 9 | | | | | ■ |
| | ■ | | ■ | 11 சா | | | | ■ |

### இடமிருந்து வலமாக

1. தர்மத்திற்கு எதிரானது
2. திருகோணமலையைச் சூழ உள்ளது - வலமிருந்து இடமாக
3. இதற்காகத்தான் இவ்வளவு போராட்டங்களும்
4. நட்சத்திரம்
5. இந்திய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர்
6. சுடலைக்காப்போன்
7. சிறு பறவை - ஹெலிகொப்டரை இப்படியும் தமிழர் அழைப்பர்
8. நாட்டின் தலைவர்
9. சிவனுடன் சேர்ந்திருப்பவள்
10. வாய்க்காலின் கதவு- குழம்பியுள்ளது
11. இதுவும் வேதம் ஓதும்

### மேலிருந்து கீழாக

1. உப்பின்றி அவிப்பது
2. நிறுத்துவதைச் சொல்லும் கட்டளைச் சொல்
3. முருகனுக்குப் பிடித்த இடம்
4. இதனைப் பட்டால் நிம்மதியில்லை
5. ஒரு கைபிடி குழையல் சோறு
7. வானத்தின் நிலை
8. ஆதாரத்தைக் குறிக்கும் சொல்
9. தமிழரசுக் கட்சித் தலைவர்
10. [illegible] பெண்கள் - குழம்பியுள்ளது
11. சுவைமிக்க பாணி - குழம்பியுள்ளது
12. இந்தியாவின் 10வது பிரதமர்
13. சளி பிடிப்பதைச் சொல்லலாம்
14. பிரபல்யமான சுல்தான் ஒருவர்

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 045 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | த் | 14 தி | ■ | ■ | 2 த | 15 டா | 16 க | ம் |
| ■ | 3 தா | ட | 17 கை | 4 க | ட | ப் | பா | 18 றை |
| 5 கை | ரி | கா | தி | ரி | ய | சி | ல | க |
| கே | 6 ச | த் | 19 தி | ■ | ம் | ■ | ம் | ■ |
| யி | ப் | 7 தி | மி | சு | ■ | 8 அ | 20 சூ | சை |
| ■ | பி | ர | ர் | ■ | 9 அ | ட் | டு | று |
| 10 சி | 21 வ | ம் | ■ | 22 டா | தி | 11 ச | ர | ம் |
| ■ | 12 ட | ச் | சு | க் | கா | ர | ன் | ■ |
| 13 ச | ம் | ப | ல் | கா | ரி | ம் | ■ | ■ |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*திருமதி. ஜெபிரசாலினி*
*மத்தியவீதி, உவர்மலை, திருகோணமலை*

*செல்வி. ஸ்ரீ. தன்யா*
*பெருந்தெரு, திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## "டார்லிங்" திரை விமர்சனம்

### இயக்குனர் சாம் ஆண்டனின் ஜீவி.பிரகாஷ், நிக்கி கல்ராணி நடிக்கும்



அறிமுக இயக்குனர் சாம் ஆண்டன் இயக்கத்தில் காதல், திகில், சென்டிமெண்ட் என கலந்து வந்த படம் தான் டார்லிங். ஆரம்பத்தில் வேறு ஒரு பெண்ணை காதலிக்கிறார் ஜீ.வி. ஆனால் அக் காதல் அருக்கு கைகூடி வரவில்லை. அதே கல்லூரியில் படித்து வரும் கதாநாயகி ஜி.வீயை காதலிக்கிறார். இர் காதலிப்பது ஜீக்கு தெரியாது. பின் ஜீ.வி, அவர் நண்பன் மற்றும் கதாநாயகி மூவரும் தற்கொலை செய்து கொள்வதற்காக ஓர் பண்ணை பங்களாவிற்கு செல்கின்றனர். அங்கே இவர்களுடன் சேரும் கருணாஸ் தானும் தற்கொலை செய்யவே வந்தேன் எனக் கூறி அவர்களுடன் சேர்ந்து கொள்கின்றார். அந்த பங்களாவில் கதாநாயகி, டார்லிங்காக மாறி கதைய சூடு பிடிக்க வைக்கிறார்.



அங்க கதாநாயகி மீது ஜீ.விக்கும் காதல் மலருது. அந்த நேரத்துல நம்ம ஹீரோ ஹீரோயின்ன தொட போகும் போது எல்லாம் தடுத்து விடுது டார்லிங். அதே நேரத்துல சேத்து வைக்கும் நண்பர்களையும் விட்டு வைக்கவில்லை. அந்த பங்களாவில கொஞ்ச நாளைக்கு முன்னாடி தன் காதலன் கண் முன்னாடியே கற்பழிக்க பட்டு கொலை செய்யப்பட்ட ஸ்ருதி யின் ஆவி தான் இதுக்கெல்லாம் காரணம்னு தெரிய வருகிறது. ஸ்ருதியின் ஆவி தன்னை கற்பழித்தவர்களை பழி வாங்க வேண்டும் என்று தன் மிரட்டல்களால் சொல்லாமல் சொல்லுகிறது. அதனால் அவர்களை தேடி செல்கின்றனர் கதாநாயகர்களும் அவர்களது நண்பர்களும். அவர்களை பழி வாங்கினார்களா? கதாநாயகியை விடுவித்தார்களா என்பதே கதை யின் கிளைமாக்ஸ்.

புதியதாக அறிமுகமாகிய கதாநாயகன் கதாநாயகியை குறை சொல்லாத அளவுக்கு நடித்துள்ளனர். கருணாஸ் மற்றும் பாலா சரவணின் டைமிங் காமெடி மேலும் பலம் சேர்க்கின்றது. மொத்தத்தில் படம் அனைவரையும் சிரிப்பில் மூழ்கடிக்கும் மொக்கை டார்லிங்காக உள்ளது.



## முருகதாஸின் இந்தி ரீமேக்

கத்தி' படத்திற்கு பிறகு ஏ.ஆர்.முருகதாஸ் இந்தி படம் ஒன்றை இயக்கப்போவதாக செய்திகள் வெளியாகின. ஹீரோயினை மையமாக வைத்து எடுக்கும் இந்தப் படத்தில் சோனாக்ஷி சின்ஹா கதாநாயகியாக நடிக்கவுள்ளார். இப்படம் தமிழில் அருள்நிதி நடிப்பில் வெளிவந்த 'மௌனகுரு' படத்தின் ரீமேக்காக இருக்கும் என்று கூறப்படுகிறது. தமிழில் வெளியான படத்தின் கதையில் சில மாற்றங்களை செய்து இந்தியில் இயக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

## ஜோ வின் படம் முடிவு

மஞ்சுவாரியர் நடித்து மலையாளத்தில் வெற்றிகரமாக ஓடிய 'ஹவ் ஓல்டு ஆர் யூ' என்ற படம் தமிழில் ரீமேக் ஆகிறது. இதில் மஞ்சு வாரியர் கேரக்டரில் ஜோதிகா நடிக்கிறார்.

46 நாட்கள் படப்பிடிப்பை தொடர்ந்து நடத்தினர். இறுதிக்கட்ட படப்பிடிப்பை சோழிங்கநல்லூரில் முடித்துள்ளனர். தற்போது இப்படத்தின் பின்னணி வேலைகளில் படக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இப்படத்தை சூர்யாவின் சொந்த நிறுவனமான 2டி என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் மூலம் தயாரித்திருக்கிறார். மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் இப்படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

## அலறும் விஷ்ணு

கிரிக்கெட் வீரராகவும் மற்றும் சினிமாவில் நல்ல நடிகராக திகழுபவர் விஷ்ணு. தமிழ்நாடு அளவில் விளையாடி அடிபட்டு காயம் காரணமாக பல மாதங்கள் மருத்தவமனை அனுமதிக்கப்பட்டார். இத்தருணத்தில் தான் வெண்ணிலா கபடி குழு படத்தின் வாய்ப்பு வர அதை ஏற்று கொண்டு ஹிட் ஆனார். இவர் சமீபகாலமாக மீடியாவை கண்டாலே அலறுகிறார். இதை பற்றி விசாரித்தால் வளரும் போது தான் ஒரு நடிகனுக்கு பப்ளிசிட்டி தேவை அதலால் எனக்கு இப்போது வேண்டாம் என்று நினைக்கிறேன் என்கிறாராம்.

## என்னை அறிந்தால் வெடிகுண்டு மிரட்டல்

அஜித், திரிஷா நடிப்பில், வெளியாக இருக்கும் 'என்னை அறிந்தால்' திரைப்படம் பொங்கலுக்கு வெளியாவதாக இருந்தது. ஆனால் சில காரணங்களால் அப்படம் ரிலீஸ் ஆவது தள்ளிப்போனது. இப்படம் வருகிற 5ந் தேதி வெளியாகிறது. இந்நிலையில் அப்படத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ளியாகும் அன்று உதயம் தியேட்டர் உள்ளிட்ட 8 தியேட்டர்களில் குண்டு வெடிக்கும். முடிந்தால் தடுத்து பாருங்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது அந்த மொட்டைக் கடிதத்தில்.



## சூப்பர் ஸ்டாருடன் நடிக்கும் சிவா



தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவர் சிவகார்த்திகேயன். இவர் ஒரு கன்னட படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்க இருக்கிறார். கன்னட சினிமாவின் சூப்பர் ஸ்டார் சிவ ராஜ்குமார் நடிக்க இருக்கும் வச்ரகயா என்ற படத்தின் அறிமுக பாடலில் தான் நடிக்க இருக்கிறாராம். அதேசமயம் சிவகார்த்திகேயன் நடித்த காக்கி சட்டை படம் வரும் பிப்ரவரி மாதம் 27ம் தேதி வெளியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரலில் உத்தமவில்லன்



கமல் ஹாஸனின் நடிப்பில் உருவாகியுள்ள உத்தம வில்லன் படம் பிப்ரவரி மாதம் வெளியிடப் போவதாக அறிவித்தனர். இந்த நிலையில் பிப்ரவரி மாதம் முழுக்க வேறு பெரிய படங்கள் வெளியாகக் காத்திருப்பதால், ஏப்ரல் 13 ஆம் தேதி படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. படத்தை வாங்கியுள்ள ஈராஸ் நிறுவனத்தின் கைவசம் வேறு பெரிய படங்கள் உள்ளதாலும் இந்த முடிவாம்.

## ஐ பாதிப்புக்கு கோபி உதவி கரம்



ஷங்கர் இயக்கத்தில் விக்ரம், எமி ஜாக்சன் நடிப்பில், பொங்கலை முன்னிட்டு வெளியாகியுள்ள பிரமாண்ட திரைப்படம் ஐ. இப்படம் தமிழகத்தில் வெளியான அதே நாளில் தான் கேரளாவிலும், ஆந்திராவிலும் வெளியானது. திருவனந்தபுரத்தில் இப்படம் வெளியான அன்று தியேட்டரில் பெரும் கூட்டம் கூடியிருக்கிறது. அந்த கூட்டத்தினரை கட்டுப்படுத்தும் பணியில் தியேட்டர் காவலாளி ஸ்ரீகுமார் என்பவர் ஈடுபட்டிருந்திருக்கிறார். அப்போது அவர் கூட்ட நெரிசலில் சிக்கி அடிபட்டிருக்கிறார். உடனே அவரை மீட்டு சுரேஷ் கோபி 1 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளார்.

## வீடு கட்டும் ஹன்சிகா



தமிழ் சினிமாவில் நாயகிகள் பலர் நடிப்பது மட்டுமில்லாமல் சமூக சேவைகளிலும் அக்கறை காட்டி வருவர். அதிலும் ஹன்சிகாவை முக்கியமாக சொல்லலாம்.

குழந்தைகளை தத்தெடுத்து அவர்கள் படிப்புக்கு தேவையான அனைத்து வேலைகளையும் செய்து வருகிறார். இவர்கள் தங்குவதற்கு தனியாக ஒரு வீடு கட்ட வேண்டும் என்பது ஹன்சிகாவின் ஆசையாம்.

ஒரு ஏக்கரில் நிலமும் வாங்கி ... வீடு கட்டுவது தான் பாக்கியாம்.



சென்ற வாரம்



நான் யாரு??

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தொழிலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும்



(வி.என்.சந்திரகாந்தி)

## வாழ்வியல் 38

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை தொடர்ந்து ஒரு மனதுக்கினிய செய்தி காதுக்கு எட்டியது! அது மீண்டும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை நாட்டுக்குள் அனுமதிப்பது என்பதாகும்.

சில வருடங்களுக்கு முன்னர் பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் நிதி உதவியை பெற்று உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் எமது மக்களுக்கு அளப்பரிய சேவையை வழங்கிக் கொண்டிருந்தன. சர்வதேச நிதி நிறுவனங்களின் நடு நிலமையும் அவை பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களுக்கு வழங்கிக்கொண்டிருந்த அளப்பரிய சேவையும் ஒரு சாரார் மத்தியில் பொறாமைத் தீயை வளர்த்தது. 'யூ.எஸ்.எயிட், யூ.என்.எச்.சீ.ஆர், கெயார், டி.ஆர்.சி, யூ.என், ஐ.ஓ.எம், ரெட்குறொஸ் உள்ளிட்ட பல சர்வதேச நிறுவனங்கள் தமது சேவையை இடை நிறுத்திக் கொண்டு பின்வாங்க நேரிட்டது. யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிவாரணங்களும் இல்லாமல் போயிருந்தால் என்றோ ஒரு சமூகம் அழிந்து போயிருக்கும்.

இக் கட்டுரையின் நோக்கம் அவர்கள் அப்படி என்ன சேவைகளை மக்களுக்கு வழங்கினார்கள் என்பதை ஆராய்வதே.

முதலில் அரச தொழில் பற்றி சிறிது பார்ப்போம். நாம் எல்லோருமே அரச தொழிலுக்காக ஏங்குபவர்களே! அதற்கு காரணம் எம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஆதங்கம் என்று அறவே கொள்ளமுடியாது. முற்றிலும் எமது சுயநலம் தான் அங்கே மேலோங்கி நிற்கின்றது. நிலையான உயர்ந்த சம்பளம், நிரந்தர வேலை, சம்பள ஏற்றங்கள், பதவி ஏற்றங்கள், அந்தஸ்து, ஓய்வூதியம் என்கின்ற அம்சங்கள் தான் அரச தொழிலுக்கு எம்மை ஈர்க்கின்றன. இனி ஒரு அரச தொழிலை பொறுப்பேற்கும் போது அந்தந்த பதவிகளுக்குரிய பொறுப்புக்கள் கடமைகள் வரையறுக்கப்பட்டிருக்கும். குறிப்பாக ஒரு அலுவலகருக் குரிய கடமைப்பட்டியல் (List of Duty) வழங்கப்படும். அது எந்த வகையிலும் மக்களுக்கான சேவையை முன்னிறுத்துவதாக அமைந்திருக்காது. நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் அலுவலர்களது கடமைகள் அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றின் நிருவாகம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. இருப்பினும் மருத்துவத்துறை மக்களுக்கு அளப்பரிய சேவையை செய்வதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. பொறியியல் துறை உட்கட்டுமான வேலைகளிலும் பெருந்தெருக்கள் அமைப்பதிலும் நாட்டிற்கு சேவையாற்று கின்றது. சமூக சேவைகள் திணைக்களம், தொழில் திணைக்களம் போன்றவை முதியோர் பராமரிப்பையும், இளைஞர்களுக்கான தொழில் பயிற்சியையும் வழங்குகின்றன.

இனி தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் குறிக்கோளும், சேவையும் எப்படி அமைகின்றன என்று பார்ப்போம். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கருதுகோளை நடைமுறையில் நிலைநாட்டிய பெருமை தொண்டு நிறுவனங்களையே சாரும். யுத்தம் எமது மக்களின் சுமூகமான வாழ்க்கையை சின்னா பின்னமாக்கியது. அவர்களுடைய வீடு வாசல்களை தரமட்ட மாக்கி உள்நாட்டிலேயே இடம் பெயர வைத்தது. வாழ்வாதாரம் இழக்கப்பட்டது. எம் மக்கள் தாம் வாழும் வீட்டை அண்டியே கால் நடைகளை வளர்த்தும், சிறு பயிர்களை உண்டு பண்ணியும், நெற்செய்கையை மேற்கொண்டும், தமது வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்தி இருந்தனர். இடம் பெயர வேண்டி நேர்கையில் ஆடு, மாடு, கோழி என அனைத்தையும் கைவிட்டு உயிரை மட்டும் காப்பாற்றி செல்ல வேண்டிய பரிதாப நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள்.

அது மட்டுமன்றி பயங்கர 'செல்' தாக்குதல் காரணமாக பலர் தமது உறுப்புக்களை இழக்க வேண்டி ஏற்பட்டது. உயிராபத்தும் அதிக அளவில் ஏற்பட்டது. மனைவி கணவனை இழந்தாள், பெற்றோர் பிள்ளைகளை இழந்தனர். வயது வித்தியாசமின்றி சொந்தங்கள் இழக்கப்பட்டன. இதனால் அவ்வக் குடும்பங்களுக்குரிய வருவாய் இழக்கப்பட்டது.

வடக்கில் பல கிராமங்களில் 'செல்' தாக்குதல் நடைபெற்று கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே 'ரெட்குரொஸ்' போன்ற தொண்டு நிறுவனங்கள் அம்புலன்ஸ் வண்டிகளில் அப் பகுதிகளில் தேடுதல் நடாத்தி காயப்பட்டவர்களை உடனுக்குடன் வைத்தியசாலைக்கு எடுத்து சென்றனர். தமது உயிரையும் பொருட்படுத்தாத அவர்களது சேவை மனப்பான்மையை பாருங்களேன். தற்காலிகமாக இடம் பெயர்ந்தோர் பாதுகாப்பான இடங்கள் என்று கருதிய பிரதேசங்களுக்கு செல்கையில் அவர்களை வரவேற்க அங்கெல்லாம் உறவினர்களா இருந்தார்கள்? அங்குதான் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தமது சேவையை உடனுக்குடன் விஸ்தரித்தன. ஆயிரக்கணக்கில் மக்கள், பெண்கள், சிறுவர்கள், கைக்குழந்தைகள் என்று திரண்டனர். பல நாட்களாக உணவு இல்லை. மாற்றுடை இல்லை. நோய்களுக்கு பரிகாரம் இல்லை. காயங்களுக்கு சிகிச்சை இல்லை. அத்தியாவசிய சுகாதார வசதிகள் இல்லை. அத்தனைக்கும் கையில் பணம் இல்லை. மக்கள் வெயிலிலும் பனியிலும் அல்லலுற நேர்ந்தது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஐக்கியத்துடன் செயற்பட்டன. தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டன. அதில் பெண்களும் சிறுவர்களும் தங்கவைக்கப்பட்டார்கள்.

பாரிய தகரக் கொட்டைகைகள் அமைக்கப்பட்டன. உணவு வசதிகள் குவிந்தன. மாற்றுடை வழங்கப்பட்டது. நீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. பல நாட்களுக்கு பின் மக்கள் குளித்தார்கள். தூக்கத்தை தொலைத்தவர்கள் சிறிது கண் அயர்ந்தார்கள். சிகிச்சை எதுவும் இன்றி நோயாலும் உடற் காயங்களாலும் அவதியுற்றுக் கொண்டிருந்தவர்களை வைத்தியர்கள் முகாமில் வைத்தே சிகிச்சை அளித்து தேற்றினார்கள். அத்தியாவசியமான சுகாதார தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

தற்காலிக முகாம்களில் தங்க வைத்தவர்களை தொண்டு நிறுவனங்கள் கீழ் குறிப்பிடப்படும் விதத்தில் அடையாளம் கண்டன. 'பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்', 'தொழில் ஆற்றல் பாதிப்புக்குள்ளானவர்கள்', 'யுத்தத்தால் அநாதையான சிறுவர்கள் முதியவர்கள்', 'யுத்தத்தால் அவயவங்களை இழந்தோர்', 'யுத்தம் காரணமாக மனநிலை பாதிக்கப்பட்டோர்', மேற்குறிப்பிட்ட அனைவருமே தமது சொந்த வீட்டையும் வாழ்வாதாரத்தையும் இழந்திருக்கிறார்கள்.

யுத்தத்தில் கணவனை இழந்த பெண்கள் தமது பிள்ளைகளை மட்டுமன்றி கணவனின் பெற்றோரையும் பராமரிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். தொண்டு நிறுவனங்கள் அக் குடும்பங்களுக்கு வருவாய் தரக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுத்தன. தையல் இயந்திரத்தை பெற்று கொடுத்தன. கோழி வளர்ப்பு சிறு பயிர் செய்கைகளுக்கு நிதி உதவி வழங்கின.

தொழில் பாதிப்புக்குள்ளான இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளித்தன. மேசன் தொழில், மரவேலை, வெல்டிங், பெயிண்ரிங், வயரிங் ஆகியவற்றை ஊக்குவித்தார்கள்.

யுத்தத்தால் அநாதரவான சிறுவர்களையும் முதியவர்களையும் பொறுப்பேற்று இல்லங்களில் சேர்த்தார்கள்.

யுத்தத்தால் ஊனமுற்றவர்களுக்கு செயற்கை அவயவங்களை பெற்று கொடுத்தார்கள்.

யுத்தம் காரணமாக மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய சிகிச்சைகளும் ஆலோசனைகளையும் (Counseling) வழங்கினார்கள்.

தொண்டு நிறுவனங்கள் அனைவரதும் ஜீவனோபாயத்திற்கு வழி அமைத்தார்கள். அவர்களை மீள் குடியேற்றும் முயற்சியில் தீவீரமாக ஈடுபட்டார்கள். வீடு கட்டுதல் தெருக்கள் அமைத்தல், கிணறு அமைத்தல் பொதுக்கட்டிடம் அமைத்தல், சந்தை கட்டிக் கொடுத்தல் ஆகிய பல உட்கட்டுமான பணிகளை மக்களின் நன்மைக்காக பெரும் பணச்செலவில் செய்தார்கள். அதனை எவரும் மறக்க முடியாது.

இந்த கட்டுரையாளர் "செடொட்"(Sedot) தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் திட்ட முகாமையாளராக பணிபுரிந்து கொண்டிருந்த 2007ம் ஆண்டு காலப்பகுதியில் 'யூ.எஸ்.எயிட்டின்' நிதிப்பங்களிப்புடன் கட்டியமைக்கப்பட்டதே திருக்கோணமலை நவீன பேருந்து நிலையம்!




# பொய்யற்ற ஓர் அழைப்பு

சஞ்சயன் செல்வமாணிக்கம்



சில வாரங்களுக்கு முன் தொலைபேசியில் என்னை அழைத்தார், சில மாதங்களுக்கு முன் அறிமுகமான நண்பர். அவரைப் பற்றி ஒரு ஆக்கம் எழுதியிருந்தேன். (பார்க்க விழுதுகளைத் தொலைத்தவர்கள்). அன்று கணணி வாங்குவதற்கு அறிவுரை கேட்டிருந்தார். இன்று கணணி வாங்கி விட்டதாயும் அதை பாவிக்கும் விதம் பற்றி கற்பிக்கவே என்னை அழைத்தார்.

அவர் மொராக்கோ நாட்டவர், ஆனால் சுவீடனில் கடந்த 45 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து தற்போது நோர்வேயில் வாழ்கிறார். வீட்டு வாசலில் நின்று வரவேற்றார். எனது ஜக்க[illegible] பெரிய தலைவர்களின் ஜக்கட்டை சிப்பந்திகள் [illegible] எடுப்பது போல கழட்டி எடுத்தார். நன்றி என்[illegible] போ[illegible] நெஞ்சில் கை வைத்து தலைசாய்த்து எனது [illegible]றியை ஏற்றுக் கொண்டார்.

கணணியை காட்டிய படியே என்ன குடிக்கிறீர்கள் என்றார் மிகவும் மரியாதையாய். தேத்தண்ணி என்றேன். கணணியை எடுத்து இயக்கினேன். அறைக்குள் இருந்து புரியாத மொழியில் பேசிக்கொண்டு வந்தார் அவரின் மனைவி. அருகில் வந்து கையை பிடித்து குலுக்கினார். பின்பு தேத்தண்ணி போட்டுத் தந்தார். அதன் பின் அவர் நான் அங்கு நின்ற 3 மணிநேரமும் அவரின் அறையை விட்டு வெளியே வரவில்லை.

தனது மனைவி வந்திருக்கும் விருந்தினருடன் பேசாமல் தனது அறைக்குள்ளேயே இருந்தது அவருக்கு அசௌகரீயமாக இருந்திருக்க வேண்டும். என்னிடம் அதற்கு மன்னிப்புக் கேட்டார். நான் அது பரவாயில்லை, அது அவரின் கலாச்சாரமாக இருக்கும் என்றேன். ஆம் அது தான் எனது பிரச்சனை என்றார். மனைவி தனக்கு உணவு சமைக்கும், வேலைக்கு போகும் நேரத்தை விட மிகுதியாயிருக்கும் பல மணிநேரங்களை இறைவணக்கத்துக்கே செலவிடுவது இவருக்கு பிடிக்கவில்லை என்பதை அவரின் வார்த்தைகளினூடாக அறிய முடிந்தது.

இருப்பினும் தன் மனைவியை தான் அவளின் இஸ்டத்துக்கு விட்டிருப்பதாகவும், அவள் மிகவும் உண்மையாகவும், பண்பாகவும் இருப்பதாகவும், அவர் தெற்கு மொறாக்கோவை சேர்ந்த மிகவும் வறுமையான குடும்பத்தை சேர்ந்தவர் என்றும் சொன்னார். தான் மணமுடிக்க தீர்மானித்த போது பல மிக இளமையான பெண்கள் தன்னை மணமுடிக்க முன்வந்ததாயும், அவற்றில் பலர் தனது பணத்தில் குறியாயிருந்ததாகவும் ஆனால் தனது மனைவியின் குடும்பத்தினர் மட்டும் நேர்மையாய் இருந்தார்கள் என்றும் சொன்னார்.

மொறாக்கோவில் பணம் இருக்கும் கிழவர்கள் வயதில் குறைவான பெண்களை திருமணம் முடிக்கிறார்கள் என்றும், பெண்ணின் தகப்பன் வறுமையினால் இதற்கு சம்மதிப்பதாயும், ஆனால் அந்தக் கிழவர்கள் இறக்கும் போது பெண்கள் இரண்டு, மூன்று குழந்தைகளுடன் மீண்டும் தம்மிடம் தஞ்சம் புகுவதை அந்த பெண்களின் தகப்பன்மார் புரிந்து கொள்கிறர்கள் இல்லை என்பதும் அவரின் ஆதங்கமாய் இருந்தது.

தன்னிடம் மொறாக்கோவில் இரண்டு வீடுகள் இருப்பதாயும், அவை வெறுமனே இருப்பதாயும் சொன்னார். அவற்றில் பிரான்ஸ் நாட்டவர்கள் தங்கியிருந்ததாயும் ஆனால் அந்த பிரான்ஸ் நாட்டவரின் வேலைக்காரர்கள் தனது தளபாடங்களை களவெடுப்பதால் தற்போது வாடகைக்கு விடுவதில்லை என்றும், தான் மட்டும் வருடத்தில் ஒரு தடவை அங்கு போகிறார் என்றும் தனது சொத்துக்கள் பற்றி என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

கூகில் மப் (Google maps) இல் அவரின் வீட்டைக் காட்டினேன். சிறு குழந்தைபோல் குதூகலித்தார். இது எப்படி சாத்தியம் என்றார்? விளக்கினேன். புரிந்ததோ புரியவில்லையோ தெரியாது ஆனால் தலையாட்டினார்.

என்னை மெராக்கோவுக்கு வரச் சொன்னார். தனது வீட்டில் நான் விருந்தாளியாக தங்கியிருக்கவேண்டும் என்றார். நான் சிரித்தேன். அவரின் வார்த்தைகளில் பொய்யில்லை என்பது மட்டும் எனக்குத் தெரிந்தது. தனது நாட்டின் சிறப்புக்களை விளக்கிக் கூறிக்கொண்டிருந்தார்.

நான் புறப்பட்ட போது எனது ஜக்கட்டை மாட்டிவிட்டார். எனக்கு இவ்வாறு ஜக்கட் மாட்டிவிடப்பட்டது முதல் அனுபவம் என்பதால் நானும் பல தடவைகள் நன்றி சொல்லி விடைபெற்றேன். உனக்குத் தந்த அழைப்பை நீ எற்றுக் கொள்வாய் என நம்புவதாகச் சொன்னார். நான் புன்னகைத்தேன். அப் புன்னகையின் அர்த்தம் நான் வருகிறேன் என்பதா அல்லது வரமாட்டடேன் என்பதா என்பது எனக்குப் புரியாதிருந்தது.

இன்றைய நாளும் நல்லதே


சாதாரண மானவனின் மனது

கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுநடப்பு

# துணிவே எம் துணை – அன்றி வேறேதுமில்லை



அந்த சிறுவனது பெயர் குமரன். அவனுக்கே சரியாக தெரியாது அவனது சொந்த ஊர் எது? என்று நாட்டில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து அங்கும் இங்கும் அலைந்து வாழ்ந்ததே இதற்கு காரணம்.

குமரன் பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை என்பதால் தங்களுக்கு எது நடந்தாலும் பரவாயில்லை தங்களது மகன் எங்கேயாவது ஒரு மூலையில் பாதுகாப்பாக வாழ்ந்தால் அதுவே போதும் என முடிவு செய்து கந்தபொல பிரதேசத்தில் உருளைக் கிழங்கு விவசாயம் செய்யும் விவசாயி ஒருவரிடம் அவனை வளர்க்க பாரமளித்திருந்தனர் அந்தப் பெற்றோர்.

குமரனின் பெற்றோர்கள் மட்டுமல்ல அவனது மூதாதையர்கள் எவரும் கல்வியில் நாட்டமில்லாதபடியால் அன்று அவனை படிப்பிக்க அவனது பெற்றோர் ஆர்வம் காட்டவில்லை. இன்று எமது அரசாங்கம் கூறுகிறது " ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி முக்கியம்" எனவே கட்டாயம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டுமென்று அவ்விதம் எச்சரிக்கை விடுத்தாலும் சில பெற்றோர் தம் பிள்ளைகளுக்குரிய கல்வி செல்வத்தை பெற்று கொடுக்க முன்வருவதில்லை.

அதனால் சமூகச் சீரழிவுக்கு அதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதை அங்கு சுட்டி காட்டுதல் மிக முக்கியமானதாகும். அதே வேளை நாட்டின் இன்றைய பொருளாதாரத்தையும் அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும். சீருடைகளையும், புத்தகங்களையும் இலவசமாக வழங்குவதால் மட்டும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பூரணமடைந்துவிடும் என கூறமுடியாது.

இலங்கையில் இலவச கல்வி வழங்க காரணமாக இருந்தவர் காலம் சென்ற கண்ணங்கரா என்பவர் அவரையடுத்து மாணவர்களின் நாளாந்த அவசியத் தேவைகளை அறிந்து காலம் சென்ற முன்னால் பிரதமர் விஜேயானந்தா தகாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச போன்றவர்கள் மதிய உணவு, சீருடை, புத்தகம் போன்றவற்றை இலவசமாக வழங்கும் திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர்.

முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ கூட பாடசாலைக்கு கணனி வழங்கும் திட்டங்களை ஆரம்பித்துவைத்தார். அதனூடாக பல பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் பயன் பெற்றனர். இந்தியாவின் தமிழ் நாட்டில் கூட காலம் சென்ற முன்னால் முதல்வர் காமராஜர் தான் பாடசாலை செல்லாவிட்டாலும் தமிழ் நாட்டு பிள்ளைகளுக்கு இலவச கல்வி வசதிகளை முதன்முதலில் அரம்பித்து வைத்தார். அதனுடாக தமிழ் நாட்டில் பல இலட்சம் பிள்ளைகள் பயனடைந்தனர்.

ஒரு நாள் அவர் தனது காரில் கிராமமொன்றுக்கு சென்று கொண்டிருந்த வேளையில் ஒரு பையன் வயல் வெளியில் பட்டம் ஒன்றினை பறக்கவிட்டு கொண்டிருந்தான். உடனே காரை நிறுத்த சொல்லி விட்டு அவர் அந்த பையன் அருகில் சென்று "ஏனப்பா நீ பள்ளிகூடத்திற்கு செல்ல வில்லை" என மிக அன்பாக கேட்டார். அதற்கு அவன் "படிப்பை மாத்திரம் இலவசமாக தந்தால் போதுமா? மதிய சாப்பாட்டை யார் தருவாங்க?" என்று ஒரு கோடு போட்டான். அவனது கோரிக்கை நியாயம் என்பதை ஏற்றுக்கொண்ட காமராஜர் தமிழ் நாட்டில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அன்று உடனடியாக அமுழ்படுத்தினார். அவர் பாடசாலை சென்று கற்காவிட்டாலும் தனது ஆட்சியில் சகல பிள்ளைகளும் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்க வேண்டுமென்று பெற்றோரை கட்டாயப் படுத்தினார்.

ஆனால் தற்பொழுது தான் எமது நாட்டில் கல்வியின் முக்கியத்தவம் உணரப்பட்டு சகல பிள்ளைகளும் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. குமரன் அன்று பள்ளிக்கூடம் செல்ல முடியாமைக்கு பல காரணங்கள் இருந்தன. குமரனுக்கு மட்டுமல்ல வன்செயல்களில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட அத்தனை பிள்ளைகளுக்கும் அக்குறைபாடு இருந்தன. அதனால் நன்றாக படிக்க கூடிய பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் படிப்பை விட உயிருக்குத்தான் முக்கியத்தவம் கொடுத்தனர். குமரனை எப்படியும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகவே கந்தபொல பிரதேசத்திலுள்ள விவசாய குடும்பமொன்றிடம் அவனது பெற்றோர் அவனை பாரம்கொடுத்து விட்டு சென்றனர்.

பெற்றோர்கள் வசதியற்றவர்கள் என்பதால் அவனை கந்தப்பொல பாடசாலையிலோ அல்லது விடுதியிலோ சேர்க்க அவர்கள் முன்வரவில்லை. அவன் அந்த விவசாயக் குடும்பத்தின் நாளாந்த விவசாய வேலைகளுக்கு உதவியாக இருந்து வந்தான். அந்தக் குடும்பம் கூட மிக வறிய குடும்பமே குமரனுக்கு மூன்று நேர உணவளித்து உடுதுணி வழங்குவதே பெரும் விடயம். ஏதோ கூலி ஒன்றும் கொடுக்காமல் அவனிடம் வேலை பெற்று வந்தனர். அந்த காலத்தில் ஒருவரை தங்கவைத்து தேவையானவைகளை வழங்குவது என்பது சிறிய விடயமா?

இந்தியாவில் இன்று கூட சுமார் ஒரு இலட்சம் பேர் இலங்கை அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். சுமார் 101 முகாம்களில் குறித்த அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் இன்றைய ஆட்சி மாற்றத்தையடுத்து பலர் நாடு திரும்பவுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. நாடு திரும்பினாலும் அந்த மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வோண்டியுள்ளனர். அதாவது பல்லாயிரக்கணக்கான காணிகளை அன்றைய அரசாங்க இராணுவத்திற்கு வழங்கியுள்ளது. அதில் அகதிகளாக சென்ற மக்களின் காணிகளும் அடங்கும். அவர்கள் நாடு திரும்பினால் அவர்கள் குடியிருப்பு வசதி, வாழ்வாதாரம் போன்ற அடிப்படை பிரச்சனைகளை புதிய அரச ஏற்படுத்தி கொடுக்குமா? என்ற முக்கிய கேள்வி எங்கும் இன்று எழ ஆரம்பித்துள்ளது.

புதிய அரசு மனிதாபிமான அடிப்படையில் வடகிழக்கு வாழ் மக்களுக்கு உதவி செய்ய முன்வரும் போது குறுகிய அரசியல் நோக்கில் வாழும் தென் மாகாண பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் தேவையில்லாமல் பெருபான்மையை உசுப்பேற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மீண்டும் இந்த நாட்டில் பிரிவினவாதம், பயங்கரவாதம் தலை தூக்கப்போகின்றன என விமல் வீரவன்ச மேடைக்கு மேடை கூறுகிறார்.

குமரன் தற்பொழுது வளர்ந்த இளைஞன் எத்தனை காலத்திற்குத் தான் கந்தப்பொல பிரதேசத்தில் வசிப்பது. இந்தியாவில் இருந்து பெற்றோர் தற்போது நாடு திரும்புவதாகவும் இல்லை. அவனுக்கென்று அவன் இதுவரை ஒன்றுமே சேமித்து வைக்கவில்லை. கையில் பணம் இருந்தால்தானே அவன் சேமிப்பதற்கு. பெற்றோர் இந்தியாவில் நலமாக இருந்தாலும் அவன் இலங்கையில் உற்றார் உறவினர்களற்று ஒரு தனிமரமாகவே வாழ வேண்டியுள்ளது. தான் இவ்வளவு காலமும் தங்கியிருந்த அந்த விவசாயி குடும்பத்திடம் தனது நிலைமையை விளக்கி கூறிவிட்டு அங்கிருந்து வேலை தேடி மன்னாருக்கு சென்றான்.

மன்னார் பிரதேசம் அவனுக்கு புதியதாக இருந்தாலும் எப்படியோ அங்குள்ள புதிய குடியேற்றத்திற்கான காணிகள் அளக்கும் வேலைக்குள் நாளாந்த சம்பள அடிப்படையில் வேலை எடுத்திருந்தான். அது தவிர வேறு பல வேலைகளும் பகுதிநேர வேலையாக செய்து ஓரளவு பணம் சேர்த்தான். அப்பகுதி காட்டுப் பகுதியாகையால் அங்கு கிடைக்கும் முதுரை, தேக்கு போன்ற பெறுமதி மிக்க மரங்களை வெட்டி கள்ளமாக கொண்டு செல்லும் கும்பலோடு இவனும் சேர்ந்து கொண்டான்.

அத்துடன் காணி அற்றவர்களுக்கு காணி வழங்குமுன் பலரிடம் பணம் பெற்று அக்காணித்துண்டுகளை திருட்டுத்தனமாக விற்று இன்னும் அதிகமாக பணம் சேர்த்தான்.

பாடசாலை செல்லாமல் இருந்தாலும் குமரன் நல்ல புத்திசாலியாக செயல்பட்டான். குறுகிய காலத்தினுள் அங்குள்ள அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அனைவருடனும் மிக நெருங்கிய உறவை வளர்த்துக் கொண்டான்.

தன்னிடம் உள்ள பணம் போதுமென்று எண்ணிய அவன் அதன் பின்னர் சகல சட்ட விரோத செயல்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்தான். அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு தன்னாலான உதவிகளை செய்தான். தனக்கு தேவையான அனைத்தும் அவனுக்கு மிக எளிதாக கிடைத்தன.

ஒரே ஒரு குறை இருந்தது அவனுக்கு. தன்னைப் பெற்றெடுத்த தன் தாய் தந்தையரை எப்படியாவது கண்டுபிடித்துவிட வேண்டும் என எண்ணி தேடினான். இன்னமும் அவர்கள் அகதிமுகாமிலே இருந்து கஷ்டப்படுதாக தெரியவந்தது. தனக்கிருந்த செல்வாக்கை பயன்படுத்தி தன் பெற்றோரை ஊருக்கு அழைத்து வந்தான். அத்துடன் தன்னை வளர்த்து ஆளாக்கிய அவ்விசாய குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்தான்.

எந்த ஒரு துணையும் இல்லாதிருந்த அவனுக்கு அவனது துணிவே துணை நின்று சாதிக்க வைத்தது. அவனது திருந்திய உள்ளம் தனக்கு போதுமான அளவு பணம் சேர்ந்த பின் மீண்டும் குறுக்கு வழிக்கு இட்டுச்செல்லவில்லை.

**– பாலையூற்றான் –**

---

இப்படியும் நடக்கலாம்

## மணமுடிக்காததால் கொலை

பாகிஸ்தானில் பெண் ஒருவர் (18), தனது தாய் மற்றும் சகோதரனுடன் வசித்து வந்துள்ளார். இவர்களது வீட்டின் அருகே சாஜித் குரேஷி என்ற துணி வியாபாரி குடியிருந்தார். இவர் தன் பக்கத்து வீட்டில் குடியிருந்த 18 வயதான பெண்ணை திருமணம் செய்ய விரும்பி, அவளது தாய் மற்றும் சகோதரனிடம் பலமுறை பெண் கேட்டுள்ளார். ஆனால் அவர்கள் மறுத்ததால், ஆத்திரமடைந்த குரேஷி கடந்த 26ம் திகதி குடித்துவிட்டு, பக்கத்து வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளார்.

## போஸ் கொடுத்ததினால் தற்கொலை



ரோமானியன் பதிப்புக்காக பிளேபாய் பத்திரிகை யின் முதற் பக்கத்தில் அந்நாட்டை சேர்ந்த Lorendana Chivu என்ற பெண், தான் 18 வயதிலிருந்த போது நிர்வாண நிலையில் போஸ் கொடுத்துள்ளார். இந்நிலையில் தன் மகளின் புகைப்படத்தை பார்த்த தந்தை, அதிர்ச்சியில் ஆழ்ந்ததுடன் அவமானம் தாங்க முடியாமல் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டுள்ளார். தற்போது 25 வயதாவதாகின்றது இருப்பினும் இன்றும் எனக்கு வேதனை அளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

## செல்பி எடுப்பதற்காக 87 நோயாளிகள் கொலை

இத்தாலிய நாட்டை சேர்ந்த செவிலிய பெண்மணி ஒருவர், 87 நோயாளிகளை கொலை செய்து செல்பி எடுத்தாரா என்ற சந்தேகத்தில் பொலிசார் விசாரித்து வருகின்றனர். கடந்தாண்டு அக்டோபர் மாதம் லூகோ நகரிலுள்ள உம்பர்டோ மருத்தவமனையில் சுமார் 38 நோயாளிகளை கொலை செய்து செல்பி எடுத்த குற்றத்திற்காக என்ற அப்பெண்மணியை பொலிசார் கைது செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக மருத்துவமனையில் விசாரணை செய்ததில், அந்த செவிலிய பெண்மணி பணியாற்றிய இரண்டு ஆண்டுகளில் 87 நோயாளிகள் வழக்கத்துக்கு மாறாக இறந்துள்ளதை கண்டுபிடித்துள்ளனர்.



- வட கிழக்கு அமெரிக்காவைத் தாக்கிய ஜுனோ பனிப் புயல் காரணமாக நியூயோர்க் நகரிலும் ஏனைய பிரதேசங்களிலும் 90 சென்ரிமீற்றர் அளவு பனிப் பொழிவு இடம்பெற்றுள்ளது.
- கடந்த சனிக்கிழமை தாய்லாந்தில் இடம்பெற்ற வருடாந்த தேசிய சிறுவர் தின வைபவத்தின் போது சிறுவர்களுக்கு தமது குடும்பத்தினருடன் அரசாங்க இல்லம் பல்வேறு இராணுவ தளங்கள் என்பவற்றுக்கு சென்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் தென் பாங்கொக்கிலுள்ள தாய்லாந்து கடற்படை பயிற்சி நிலையத்துக்குச் சென்ற சிறுவர்களுக்கு பாரிய இயந்திர துப்பாக்கிகளை கையாளவும் விமானப்படை விமானமொன்றில் பயணம் செய்யவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.
- அமெரிக்காவின் டெக்சாஸை சேர்ந்த Yasmin Eleby (வயது 40) என்ற பெண் எத்தனையோ வருடங்களாக தேடியும், தனக்கு ஏற்ற காதலன் கிடைக்காத விரக்தியில் தன்னைத்தானே திருமணம் செய்து கொண்டதாக தெரிவித்துள்ளார். இந்த திருமணத்தில் அவரது நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டும் கலந்து கொண்டு வாழ்த்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ஆய்வு

# கேள்விக்குறியாகும் மகிந்தவின் எதிர்காலம்



அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்ததை அடுத்து, அவரது எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி இப்போது முக்கிய விவகாரமாக மாறியுள்ளது. கடந்த 8ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்பாராத தோல்வியை கண்டிருந்தார். இந்தத் தோல்வியை அவர் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இன்னும் குறைந்தது ஏழு ஆண்டுகளுக்கு – 2022ஆம் ஆண்டுவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியிலிருப்பதே அவரது திட்டமாக இருந்தது. அந்தத் திட்டம் நிறைவேறும் என்ற முழு நம்பிக்கையில் அவர் இருந்திருந்தார். இதனால், அவர் தனது அடுத்தடுத்த அரசியல் நகர்வுகள் குறித்த திட்டங்கள் எதையும் முன்கூட்டியே வகுத்துக்கொள்ளக்கூடிய நிலையேதும் இருந்திருக்கவில்லை. இப்போதைக்கு தாம் ஆட்சியிலிருப்பதுவும் தனக்கு பின்னர், அதிகாரத்தை தனது மகன் நாமல் ராஜபக்ஷவின் கையில் கொடுப்பதுமே அவரது மேலோட்டமான எதிர்காலத்திட்டமாக இருந்தது.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்ற திடீர் சூறாவளி தனக்கும் தனது குடும்பத்தினதும் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கும் என்று அவர் கொஞ்சமேனும் எதிர்பார்த்திருக்கவில்லை. இதனால், அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, அடுத்த கட்டம் குறித்து தீர்மானிக்கமுடியாத நெருக்கடியினுள் சிக்கிப்போயுள்ளார். மக்களால் தோற்கடிக்கப் பட்டதை அடுத்து, இனி அரசியலில் ஈடுபடுவதிலிருந்து ஒதுங்கிக்கொள்வோம் என்று அவரால் இன்னமும் கூட முடிவெடுக்க முடியவில்லை. மிக உயர் பதவியிலிருந்த ஒருவர், மக்களால் நிராகரிக்கப்படும்போது, மீண்டும் மக்களின் முன் வாக்குக் கேட்டுச் செல்லாமல், அரசியலை விட்டு ஒதுங்குவது மாண்பு.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் பதவியிலிருந்து விலகிய பின்னர், அரசியலில் ஈடுபடவில்லை. இவர்கள் மூன்றாவது பதவிக்காலத்துக்கு போட்டியிட வாய்ப்பின்றியோ அல்லது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விரும்பாமலோ அரசியலிலிருந்து ஒதுங்கி விட்டனர். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறன ஒருவரல்ல. அவர் பதவியிலிருந்தபோதே, மூன்றாவது பதவிக்காலத்துக்காக போட்டியிட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டவர். அவ்வாறு மக்களால் நிராகரிக்க ப்பட்ட ஒரு தலைவராக இருந்தபோதிலும், தனது 45 வருட அரசியல் வாழ்வு குறித்து பெருமையாக பேசும் அவரால், தனது கடந்தகால அரசியல் வாழ்வுக்கு மாண்பை ஏற்படுத்தும் முடிவொன்றை இன்னமும் எடுக்கமுடியவில்லை.

அவ்வாறு செய்ய முடியாதமைக்கு காரணம், அவரது அரசியல் எதிர்பார்ப்பு இன்னமும் ஈடேறவில்லை என்பதேயாகும். இன்னமும் அதிகாரத்தை பிடிக்கவேண்டு மென்ற எதிர்பார்ப்பு அவரிடம் இருக்கிறது. இல்லாவிட்டால், அவர் மூன்றாவது பதவிக்காலத்துக்காக போட்டியிட்டி ருக்கமாட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில், இப்போது தனக்காக மட்டுமன்றி தன்னை சுற்றி இருப்பவர்களுக்காகவேனும் அதிகாரத்துக்காக போட்டியிடவேண்டிய நிலையில் இருக்கிறார். அவரது குடும்பத்தினர் மட்டுமன்றி, அவருக்கு ஆதரவளித்து உயர்த்திவிட்டவர்களும் அவரது ஆட்சியில் அவரை சுற்றி இருந்தவர்களும் இப்போதும் அவரை வைத்து தம்மால் மேலெழ முடியுமென்று நம்புபவர்களும் அவரை அரசியலிலிருந்து ஒதுங்கிவிடப்போவதில்லை. இதுவே, மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் எதிர்காலம் குறித்து முடிவெடுக்க முடியாதுள்ளமைக்கு முக்கிய காரணம்.

இப்போது அவரது கையிலிருந்து ஆட்சி அதிகாரம் மட்டும் பறிக்கப்படவில்லை. கட்சியின் மீது அவர் செலுத்திய அதிகாரமும் பறிக்கப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து கட்சியின் அத்தனை அதிகாரங்களையும் எவ்வாறு பறித்தெடுத்தாரோ, அதுபோலவே இப்போதும் அவருக்கும் நடந்திருக்கிறது. ஆனால், கொஞ்சம் வித்தியாசமாக அவராகவே இறங்கிவந்து தன்னிடமிருந்த கட்சியின் தலைமைப் பதவியை விட்டுக்கொடுத்திருக்கிறார். அந்த இடத்தில் மஹிந்த ராஜபக்ஷ விட்டுக்கொடுக்க மறுத்திருந்தால், நெடுநாளைக்கு அவரால் அந்தப் பதவியை கட்டிக்காக்க முடிந்திருக்காது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலிருந்து விலகிக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷவை, மீண்டும் அரசியலுக்குக் கொண்டுவருவதற்கும் பிரதமர் வேட்பாளராக போட்டியிடவைப்பதற்கும் முயற்சிகள் நடப்பதாக தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்தவுடனேயே, மஹிந்த ராஜபக்ஷ அரசியலிலிருந்து விலகமாட்டார், அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடுவார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அறிவித்திருந்தார். விமல் வீரவன்ச மட்டுமன்றி, முன்னாள் அமைச்சர்களான தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ.குணசேகர போன்ற இடசாரித் தலைவர்களும் கூட மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரவேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். இவர்கள் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான புதிய அரசாங்கத்தில் இணைந்துகொள்ளவோ, அவரது தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கவோ தயாராக இல்லை.

இந்தளவுக்கும், இவர்கள் அனைவரும் முன்னர் சந்திரிகா குமாரதுங்கவின் அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்தவர்கள். சந்திரிகா குமாரதுங்க வுடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்றாலும், இப்போது சந்திரிகா பின்புலத்திலிருந்து இயக்கமுற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இவர்களால் கைகோர்க்க முடியவில்லை. இதற்கு கொள்கை ரீதியான முரண்பாடே காரணமென்று கூறினால் அது அபத்தமானது. அதைவிட, கொள்கை ரீதியில் அப்படியொன்றும் வித்தியாசமான தலைவராக மஹிந்த ராஜபக்ஷ இருந்துவிடவும் இல்லை. கடந்த பத்தாண்டுகளாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சுற்றி இயங்கிப் பழகிவிட்ட இந்த அரசியல் தலைமைகளால், அதனைக் கைவிட்டு வெளியே வரமுடியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் கவர்ச்சியும் மக்கள் ஆதரவும் அவர்களின் வெற்றிக்கும் தேவைப்படுகிறது. அண்மைய ஜனாதிபதித் தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிட்டத்தட்ட 57 இலட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன. இந்தளவுக்கு மக்கள் ஆதரவு உள்ள ஒருவரை முன்னிறுத்தி, அரசியல் செய்வதே புத்திசாலித்தனமானது என்று அவரது முன்னைய கூட்டணிக் கட்சிகள் நினைக்கின்றன. ஏனென்றால், எப்படியும் இன்னும் இரண்டொரு மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிடும். அடுத்து நடக்கப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய நிலையில் விமல் வீரவன்சவோ, தினேஸ் குணவர்த்தனவோ, திஸ்ஸ விதாரணவோ, டியூ.குணசேகரவோ, வாசுதேவ நாணயக்காரவோ இல்லையென்று கூறமுடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டது இந்தக் கட்சிகளுக்கு பலம் சேர்த்ததே தவிர, இந்தக் கட்சிகளால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலம் பெற்றதென்று கூறுவது மிகையான கருத்தாகும். முன்னதாக மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவார் என்று தகவல்கள் வெளியாகின. ஆனால், அவரிடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் பதவி போய்விட்டது. இப்போது அவரிடம் உள்ளது கட்சியின் போசகர் பதவி மட்டும். தேர்தலுக்கு பின்னர் இராணுவத்தினரின் துணையுடன் ஆட்சியை தக்கவைக்க முயன்றதாக சதிக் குற்றச்சாட்டு சுமத்தப்படும் நிலையில், அதனை வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் போசகர் பதவியிலிருந்தும் மஹிந்த ராஜபக்ஷவை நீக்கும் முயற்சிகள் நடப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில், மீண்டும் அவரால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக அரசியலுக்கு வருவதோ, பிரதமர் பதவியை பிடிப்பதோ சாத்தியமானதொரு விடயமாக இருக்காது. எனவே, அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஒரு புதிய கட்சியை உருவாக்கி, அதனுடன் கூட்டணியை வைத்துக்கொண்டு போட்டியிட்டால், தம்மை காப்பாற்றிக்கொள்ள முடியுமென்று அவரது முன்னைய கூட்டாளிகள் எதிர்பார்க்கிறார்கள். இதனாலேயே, மீண்டும் அவரை எப்படியாவது அரசியலுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். எனினும், தாம் புதிய கட்சியையோ, கூட்டணியையோ உருவாக்கப்போவதில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியதாக செய்திகள் வெளியாகின. ஆனால், அது எந்தளவுக்கு உறுதியான கருத்தென்று கூறமுடியாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அளிக்கப்பட்டுள்ள கட்டாய ஓய்வு, அவரை மட்டுமே அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்திவிடப் போவதில்லை. அவரை சுற்றியிருந்த குடும்பத்தினரையும் அரசியல் கட்சிகளையும் கூட அகற்றிவிடும் ஆபத்துள்ளது. தேர்தல் தோல்வியின் பின்னர், புதிய அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள், மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் சவாலான விடயமாகியுள்ளது. தொடர்ச்சியாக எல்லா முனைகளிலிருந்தும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அவரை திணறடிக்கத் தொடங்கியுள்ளன. அவர் மீதும், அவரது சகோதரர்கள் மற்றும் பிள்ளைகள் மீதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டபோது, அமைதியாகவே இருந்தார். ஆனால், தனது மனைவி சிராந்தி ராஜபக்ஷ மீது 100 கிலோ தங்க மோசடி முயூற்சி குற்றச்சாட்டை முன்னாள் பொலிஸ் அதிகாரி வாஸ் குணவர்த்தனவின் மனைவி சுமத்தியதை அடுத்தே, அவர் வாயை திறந்தார்.

தன் மீதும் தனது குடும்பத்தின் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாகவும் அவை அனைத்தும் பொய்யானவை என்றும் என்றோ ஒரு நாள் இது வெளிச்சத்துக்கு வருமென்றும் அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அந்த அறிக்கையின் ஓர் இடத்தில், தாம் ஓய்வுபெற்ற பின்னரும் அமைதியாகவோ, நிம்மதியாகவோ இருக்கமுடியவில்லை என்றும் கூறியிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. இது அவர் விரக்தியின் உச்சத்தை எட்டியிருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. கடந்த 9ஆம் திகதி அதிகாலை அலரி மாளிகையிலிருந்து வெளியேறியபோது, தனக்கும் தனது குடும்பத்தினதும் பாதுகாப்புக்கும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தரவாதத்தை பெற்றிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. ஆனாலும், அவரை குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாப்பதாக எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள், முறைகேடுகள் எல்லாவற்றுக்குமே அவர் பதில் கூறி ஆகவேண்டிய நிலை ஏற்படும் போலத் தெரிகிறது. தொடர்ச்சியான அழுத்தங்களை கொடுத்து அவரை நிலைகுலைய வைக்க புதிய அரசாங்கம் முயற்சிப்பதாக தெரிகிறது. இத்தகைய நிலையில், தம்மையோ தமது குடும்பத்தினரையோ புதிய அரசாங்கம் விட்டுவைக்காது என்பது அவருக்கு புரிந்திருக்கும். குற்றச்சாட்டுகளிலிருந்து புதிய அரசாங்கம் தம்மை பாதுகாக்காது என்று தெரிந்த நிலையில், தனது குடும்பத்தினது நலனை பாதுகாப்பதற்காக அவர் மீண்டும் அரசியலுக்கு வர முயற்சிக்கலாம். அதற்காக அவர் வேறுபட்ட வழிமுறைகளை கையாள முயன்றாலும் கூட ஆச்சரியமில்லை.

என்றாலும், மீண்டும் அரசியலில் உச்சத்தை எட்டிப்பிடிப்பது என்பது மஹிந்த ராஜபக்ஷவுக்கு இனிமேல் அவ்வளவு சுலபமான காரியமாக இருக்காது. இது அவரது குடும்பத்தினருக்கும் அவரை சுற்றி இருப்போருக்குமுள்ள பாதகமான விடயம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்த மிகப்பெரிய தவறு உள்நாட்டுக்குள் மட்டுமன்றி, சர்வதேச அரங்கிலும் நண்பர்களை விட விரோதிகளை அதிகம் சம்பாதித்துக்கொண்டமை. அதன் விளைவாக, இன்று மஹிந்த ராஜபக்ஷவின் நிலைக்காக எந்த நாடுமே வாய் திறந்து வருத்தம் தெரிவிக்கமுடியாத நிலை காணப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் காய் நகர்த்தல்களில் செய்த பல தவறுகள் இப்போது அவரையே எதிர்த்துத் தாக்க ஆரம்பித்துள்ளன. இது அவரை எங்கு கொண்டுபோய் நிறுத்தப்போகிறது என்பதை காலந்தான் தீர்மானிக்கவேண்டும்.

– – கே.சஞ்சயன் – –

www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. சாம், கமால் ஆகிய இருவரும் முறையே ரூபா 5மில்லியன், ரூபா 4500000 ஆகிய தொகைகளை முதலிட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தனர்.
1. இருவரும் முதலிட்ட தொகையை எளிய விகிதத்தில் தருக.

2. வருடமொன்றின் முடிவில் இலாபமாக ரூபா380000 கிடைத்தது. இத்தொகையை முதலீட்டின் விகிதப்படி பங்கிட்டால் சாமுக்கு கிடைக்கும் இலாபம் யாது?

3. கமால் தனது இலாபத்தின் அரைப்பங்கை 14வீத எளிய வட்டி தரும் நிரந்தர வைப்பில் இருவார் எனின், 2 வருட முடிவில் அவருக்கு கிடைக்கும் வட்டி எவ்வளவு?

4. கமால் வியாபாரத்தை ஆரம்பித்து 1 மாதம் கழித்து சாம் வியாபாரத்தில் இணைந்து இருந்தால் பத்து மாதங்கள் வியாபாரம் நடத்திய பின் கிடைக்கும் இலாபத்தை பகிர வேண்டுமாயின் பங்கீட்டு விகிதம் யாது?

02. வட்டமொன்றின் மிகப்பெரிய நாணின் நீளம் 6 செமீ எனின், அவ்வட்டத்தின் ஆரையைக் காண்க.

03. சுரேஸ் தனது தம்பியிடம் உள்ள பணத்தை போன்று இரு மடங்கு பணத்தொகையை வைத்திருக்கின்றான். சுரேஸ் தன்னிடமிருக்கும் தொகையில் ரூபா 30ஐ தம்பிக்கு வழங்கினால் இருவரிடமும் உள்ள பணத்தொகைகள் சமனாகும். சுரேசிடம் உள்ள பணத்தை காண்க?

04. கூட்டல் விருத்தி ஒன்றின் 3ம் உறுப்பு 18உம், 9ம் உறுப்பு 42உம் ஆகும் இவ்விருத்தியின் முதலுறுப்பு, பொதுவித்தியாசம் காண்க?
இக் கூட்டல் விருத்தியின் 4ஆம் உறுப்பினதும் 10ஆம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 7ஆம் உறுப்பின் இரு மடங்காகும் எனக் காட்டுக?

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### நீதிப் பாடல்கள் (புதிய பாடத்திட்டம்)

### திரிகடுகம்

இந்நூலை இயற்றியவர் நல்லாதனார். சுக்கு, மிளகு, திப்பிலியாகிய திரி கடுகம் எனும் மருந்து மாந்தர் உடல் நோயை நீக்கி உறுநலம் பயப்பது போல மக்களின் மன இருளைப் போக்கி இம்மை, மறுமை, இன்ப நலன்களை அளிக்கவல்ல முப்பெரும் உறுதிப்பொருட்களை ஒவ்வொரு வெண்பாவிலும் உரைப்பது 'திரி கடுகம்' ஆகும். இது நூறு வெண்பாக்களை உடையது. இவ்வுலகில் மழை இல்லாமல் போவதற்கு காரணமே குடிகளை கொடுமைப்படுத்தி பொருள் கவரும் மன்னனும் உள்ளதைக் கூறாமல் பொய்யே பேசும் மக்களும் வாழ்க்கைப்பட்ட பின்னர் கணவனுடைய சொல்லை மீறி விரும்பிய இடம் செல்லும் பெண்ணும் இவ்வுலகில் இருப்பதனால்த்தான் என்கிறார். அதிலிருந்து ஒரு பாடலை நோக்குவோம்.

**கணக்காயரில்லாத ஊரும் பிணக்கருக்கு**
**மூத்தோரை இல்லா அவைக்களனும் ~ பார்த்துண்ணுந்**
**தன்மையிலாள ரயலிருப்பு மிம்மூன்று**
**நன்மை பயத்த லில.**

**பாட்டின் பொருள்** - கற்றுக் கொடுப்போர் இல்லாத ஊரும் பிணக்கிணைக் கெடுக்கும் அறிவடையோர் இல்லாத சபையும் பகுத்துக் கொடுத்து உண்ணும் குணமில்லாதவர் பக்கத்தில் இருப்பும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு நன்மை தருவனவல்ல.

**வினா** : திரி கடுகம் பாடலின் நன்மை பயக்காதவை எனக்குறிப்பிடப்படும் மூன்று விடயங்கள் யாவை?

**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : வரலாறு

01. புராதன இலங்கையில் வாழ்ந்த மக்கள் வளைந்து செல்லும் ஆறுகளில் நீர்ச் சுழி ஏற்படும் இடத்திலும் வேகம் குறைந்த இடத்திலும் அணைகட்டி நீரை சேமித்து வைத்து விவசாய நிலங்களுக்கு நீரை அனுப்பினர். இந்த நீர்ப்பாசன தொழிநுட்ப முறையை எவ்வாறு அழைத்தனர்?
1. யோதகால்வாய் 2. சுரங்கக்கால்வாய்
3. அமுன 4. கலிங்கல்

02. தனிக்கட்சி யொன்று ஒரு நாட்டில் காணப்படுவதால் ஏற்படும் தீமையாக கொள்ளக் கூடியது?
1. தேவைக்கேற்ப யாப்பினை மாற்றிக்கொள்ளும் நிலை
2. கட்சி மோதல்கள், கட்சி விமர்சனங்கள் அதிகரிப்பு
3. மக்கள் பிரிவுகள் ஏற்படல்
4. சட்டம், நீதி, நிதித்துறைகள் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலை

03. கி.பி 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்த தலைவர்கள் அடங்கும் தொகுதி
1. ஹெப்பட்டிப்பொல, மடுகல்ல, வீரபுரன் அப்பு
2. வீரபுரன் அப்பு, கொங்காலே கொடபண்டா, குடாபொலதேரர்
3. ஹெப்படிப்பொல, வீரபுரன் அப்பு, குடாபொல தேரர்
4. மடுகல்ல, பூட்டாவோ ரட்டரால, ஹெப்பட்டிப்பொல

04. இலங்கை வரலாற்றின் கடைசி சிங்கள மன்னன்
1. 2 ஆம் இராஜசிங்கன் 2. 1 ஆம் இராஜசிங்கன்
3. வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

05. கலிங்க மாகனிடமிருந்து பாதுகாப்புப் பெற பிரதேச ஆட்சியாளரான சங்க என்பவனால் அமைக்கப்பட்ட நிலையம்
1.மினிப்பே 2.கோவிந்தமல 3. யாப்பகூவ 4.தம்பதெனியா

## Grammar

Ex 01: ***Put the verb into the present continuous or present prefect continuous.***

1. Maria .............................. (learn) English for two years.
2.Hello, Tom. I ................................ (look) for you all morning. Where have you been?
3. Why .................................... (you / look) at me like that? stop it!
4. We always go to ireland for our holidays. We ...................... (go) there for years.
5. I ....................... (think) about what you said and I've decided to take your advice.
6. 'Is Ann on holiday this week?' 'No, she ......................... (work)'.

Ex 02: ***For each situation, ask a question using the words in brackets.***

1. You have a friend who is learning Arabic.
You ask : (how long/ learn/ Arabic)
<u>How long have you been learning Arabic?</u>

2. You see somebody fishing by the river.

You ask : ........................................................................
(how many fish/ catch?)

3. A friend of yours is a teacher.

You ask : ........................................................................
(how long / teach?).

4. Some friends of yours are having a party next week.

You ask :......................................................................
(how many people / invite)

## பாடம் : விஞ்ஞானம்

01. பின்ருனவற்றுள் எப்பதார்த்தம் வாந்தி எடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது?
1. $Na_2SO_4$ 2. $Na_2CO_3$ 3. $CaSO_4$ 4. $(NHa)_2SO_4$

02. தென் பசுபிக் சமுத்திரத்திலே அணு ஆயுதங்களைச் சோதித்துப் பார்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் சர்வதேச நிறுவனங்களில் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றாடல் நிறுவகம்?
1. உலக சுகாதார நிறுவனம் 2. யுனெஸ்கோ நிறுவனம்
3. மிஹிகத சுரகிமு (புவி மாதாவைக் காப்பாற்றுவோம்)
4. கிறீன் பீஸ் நிறுவனம்

03. பின்வருவனவற்றுள் சடப்பொருள் அல்லாதது எவை?
1. ஒலி, ஒளி, வெப்பம் 2. மின், ஒலி காந்தம்
3. வெப்பம், மின், மின்கலம் 4. மின்குமிழ், மின்மணி, காந்தம்

04. ஒரு விவசாயி ஏறத்தாழ ஒரு ஏக்கர் அளவுடைய தனது பயிர் நிலத்தில் பூச்சி நாசினி விசிற வேண்டுமெனத் தீர்மானித்தார். அதற்காக அவர் கையாள வேண்டிய நடவடிக்கை யாது?
1. கடுமையாக காற்று வீசும் ஒரு சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்தல்.
2. நன்கு வெயில் எரிக்கும் ஒரு சந்தர்ப்பத்தை தெரிவு செய்தல்
3. உடலின் மேற்பகுதியில் அணிந்துள்ள உடைகளை நீக்கிய பின் விசிறுவதற்கு ஆயத்தமாதல்
4. இரசாயனப் பொருள் அடங்கியுள்ள உறையில் காணப்படும் அறிறுத்தல்களைப் பின்பற்றுதல்

05. கண்ணுக்குள் புகும் ஒளியின் அளவைக் கண்ணில் இருக்கும் பின்வரும் எப்பகுதி ஆளுகின்றது?
1. கண்மணி 2. பிசிர்தசை 3. வில்லை 4. கதிராளி

06. ஆவியுயிர்பைக் குறைப்பதற்கு கள்ளித் தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கம்
1. இலைகள் சதைப்பிடிப்புள்ளதாக இருத்தல்
2. இலைகள் அருகில் இருத்தல்
3. தண்டுகள் முட்களைக் கொண்டிருத்தல்
4. பரந்த வேர்த் தொகுதிகள் இருத்தல்

07. இதயத் துடிப்பைக் கட்டுப்படுத்தும் மூலையின் பகுதி எது?
1. மூளையம் 2. மூளி 3. கபச்சுரப்பி 4. நீர்வளைய மையவிழையம்

08. ஒடிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறும் தாவரம் எது?
1. அன்னாசி 2. சதைக்கரைச்சான் 3. வல்லாரை 4. வெங்காயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 05

01. தாள்களை இணைக்க பயன்படுத்தப்படும் கருவி எது?
1. துளை கருவி 2. பிணை கருவி 3. துறப்பணம்

02. துருப்பிடித்த தகரம் காலில் வெட்டுவதனால் ஏற்படக்கூடிய அபாயகரமான நோய் எது?
1. குக்கல் 2. ஏற்பு வலி 3. மாரடைப்பு

03. உயரமான கட்டடம், உயரமான இடங்களில் வசிப்போர் மின்னல் தாக்குவதை தடுக்க பொருத்த வேண்டிய உபகரணம் எது?
1. மின்னற்கடத்தி 2. மின்னல் வாங்கி 3. இடிவாங்கி

கீழேயுள்ள அட்டவணையை அவதானித்து 04ஆம், 05ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| பேனா - 1<br>கொப்பி - 1 | ரூபாய் 16.00 | பேனா - 1<br>கொப்பி - 2 | ரூபாய் 21.00 |

04. கொப்பியொன்றின் விலை யாது?
(1) ரூபாய் 11.00 (2) ரூபாய் 5.00 (3) ரூபாய் 6.00

05. பேனா ஒன்றின் விலை யாது?
(1) ரூபாய் 11.00 (2) ரூபாய் 10.00 (3) ரூபாய் 6.00

06. கீழ்வரும் பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலைக்கைதட்டி
குதூகலிக்கப் போகுது
நீலவானும் கண்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்

1. கவிஞர் நிலவை எதற்கு உவமித்துக் கூறுகிறார்?

2. கோலக்கடல் அலக்கைதட்டிக் குதூகலிப்பது ஏன்?

3. மங்கை என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

4. வினைச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக.

5. பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

6. அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.

7. இப்பாடல் நாளொன்றின் எப்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது?

07. “சிறு வயதில் கற்கும் கல்வியானது மனதில் நன்றாகப் பதியும்.” இக்கருத்தைத் தரும் பழமொழி எது?
1. விளையும் பயிரை முளையிலே தெரியும்
2. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
3. இளமையிற் கல்வி சிலையிலெழுத்து

08. கீழ் உள்ள மாவட்டங்களில் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம் எது?
1. கொழும்பு 2. கண்டி 3. யாழ்ப்பாணம்

09. ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் குமார் முன்னாலிருந்து ஐந்தாவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும் போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
1. 7 2. 8 3. 6

10. ரூபா 164 பெறுமதியுள்ள பொருட்களை வாங்கிய தியானா ரூபா 200 இனை கொடுத்தாள். வியாபாரி அவளிடமிருந்து இன்னும் 14 ரூபாவைப் பெற்றுக்கொண்டு மிகுதிப்பணத்தைக் கொடுத்தார். அவர் கொடுத்த மிகுதிப் பணம் எத்தனை ரூபாய்?
1. ரூபா 50 2. ரூபா 22 3. ரூபா 64

11. உப்புப் பைக்கற் ஒன்றை வாங்கும் போது அவ்வுறையில் இவ்வாறான குறியீடு காணப்பட்டால், இக்குறியீடு குறிப்பது?
1. ஈரலிப்பு உள்ள இடத்தில் வைக்க வேண்டாம்.
2. குழாய் நீரைச் சுத்தமாக பயன்படுத்துக.
3. உப்பை கழுவாமல் பயன்படுத்துக.





**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---

# சிறுவர் முரசு



## அப்போ இதெல்லாம் எதுக்கும்மா! குட்டிக்கதை

தாய் ஒட்டகமும் குட்டி ஒட்டகமும் ஒரு மாலைப் பொழுதில் உலாத்திக் கொண்டிருந்தன.

குட்டி ஒட்டகம் படு சுட்டி. சதா வாய் ஓயாமல் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும். அன்றைக்கும் அப்படித்தான்.

“அம்மா! நமக்கு மட்டும் முதுகில் திமில் இருக்கே. ஏனம்மா?”

தாய் எப்போதும் பொறுமையாக பதில் சொல்லும்.

“நாமெல்லாம் இயல்பாகப் பாலைவனத்தில் வாழ்பவர்கள் இல்லையா! பாலைவனத்தில் தண்ணீர் பாலைவனச் சோலைகளில் மட்டும்தான் கிடைக்கும். தினம் தினம் கிடைக்காது. கிடைக்கும் தண்ணீரை முடிந்த மட்டும் நம் உடம்பில் சேமித்து வைத்துக் கொண்டு வேண்டும் போது உபயோகப் படுத்திக் கொண்டால் தண்ணீர் கிடைக்காத பாலைவனத்தில் பல நாள் சுற்றித் திரியவே நமக்கு இயற்கை திமிலைக் கொடுத்திருக்கு”

குட்டி திரும்பவும் கேட்டது. “அப்போ நமக்கு கண் இமை கெட்டியாக இருக்கே, மூக்கை மூடிக் கொள்ள மூடி இருக்கே? மத்த மிருகத்துக்கு அப்படி இல்லையே. அது ஏன்”

தாய் ஒட்டகம் வாயை அசை போட்டுக் கொண்டு சொன்னது. “பாலைவனத்தில் மணல் புயல் அடிக்கும், அப்போ சட்டுன்னு ஒதுங்க இடம் கிடைக்காது. கண்ணுக்கும் மூக்குக்கும் பாதுகாப்பா மூடி இல்லைன்னா கண்ணுலயும் மூக்குலையும் மணல் போயிடுமே. அதனால்தான் நமக்கெல்லாம் இப்படி மூடி இருக்கு”

குட்டி இப்போது அம்மாவின் கால் குளம்பைப் பார்த்துக் கேட்டது. “இவ்வளவு பெரிய குளம்பு நமக்கு எதுக்கு?”

“அது கண்ணு, மணல்ல நடக்கும் போது நம்ம கால் மணல்ல புதையாம நடக்கத்தான்”. பொறுமையாக பதில் சொன்னது அம்மா ஒட்டகம்.

“பல்லும் நாக்கும் இவ்வளவு கெட்டியா, தடியா இருக்கே. அது ஏன்?”. இது குட்டி யோசனையுடன் கேட்ட கேள்வி. அம்மா ஒட்டகம் சொன்னது. “பாலைவனத்தில் செடி கொடியெல்லாம் முரட்டுத்தனமாக இருக்கும். அதையெல்லாம் கடித்துச் சவைத்துத் தின்ன வேண்டாமா?”

இப்போது குட்டி பட்டென்று கேட்டது. “அம்மா! இதையெல்லாம் வைத்துக் கொண்டு லண்டன் குளிரிலே இந்த மிருகக் காட்சி சாலையிலே நாம ரெண்டு பேரும் என்ன செஞ்சுகிட்டு இருக்கோம்?” என்று கேட்டது. பதிலின்றி அம்மா வாயடைத்து நின்றது.

## விடுகதைகளும் விடைகளும்

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?
4. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
5. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
6. கீழே ஊற்றிய தண்ணீர் மேலே தொங்கி இனிக்குது

**விடைகள்**
1. சைக்கிள்
2. பட்டாசு
3. தபால் பெட்டி
4. கடல் அலை
5. சாமரம்
6. இளநீர்

கே. பிரணவி,
தரம் -05
திருகோணமலை



செல்வன்.வி.மேகனன் தரம் 05, திருகோணமலை

## சிந்திக்க .. ..

நீங்கள் பொறுமையை இழப்பது ஒரு நொடியாகவே இருந்தாலும், அந்த ஒரு நொடியில் தோல்வி உங்களை உரசிப் பார்த்துவிடும்!

## விடுகதைகள்

அம்மா மரத்து நிழலினிலே
அன்று தனியாய் இருக்கையிலே
அம்மாவும் வந் திருந்தாரே
அப்பாவும் வந் திருந்தாரே!

பெரியம்மாவும் வந்திருந்தார்
பெரியப்பாவும் வந்திருந்தார்
பெரியக்காவும் வந்திருந்தார்
பெரியண்ணாவும் வந்திருந்தார்!

சின்னம்மாவும் வந்திருந்தார்
சித்தப்பாவும் வந்திருந்தார்
சின்னக்காவும் வந்திருந்தார்
சின்னண்ணாவும் வந்திருந்தார்!

தம்பிப்பயலும் வந்திருந்தான்,
தங்கச்சியும் வந்திருந்தாள்!
நம் பழைய விடுகதைகள்
நானுரைக்க அவிழ்த்தனரே!



இப்போது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## பொது அறிவு - 07

01. இலங்கையில் பங்குக் கொடுக்கல் வாங்கல்கள் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1896 இல்
02. 2012 இல் உலகிலேயே தங்க அலங்காரச் சந்தையாக மாறியுள்ள நாடு எது? சீனா
03. சர்வதேச பதிப்புரிமைகள் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது? ஏபரல் 23
04. முகவர்களில் அதிகாரம் கூடியவர்? காரணி முகவர்
05. 2014 இல் ஆப்பிரிக்கரில் பரவி அதிகளவான மக்களை பலி எடுத்த நோய் எது? எபோலா
06. உலகின் மிகவும் நுமை நிலையினை உடைய நாடுகளைக் கொண்ட கண்டம் எது? ஆபிரிக்கா கண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் தர மாணவர்களின் வரவேற்பு

2015ம் ஆண்டு முதலாம் தரத்திற்கான மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு 19.01.2015 திங்கட்கிழமை காலை திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆரம்ப பிரிவு வளாகத்தில் இடம்பெற்ற போது மாணவர்கள் பெற்றோருடன் ஆதி கோணநாதர் ஆலயத்தில் சென்று வழிபட்டு கல்லூரிக்கு



வருவதையும், அதிதிகள் கல்லூரி அதிபருடன் வரவேற்கப்படுவதையும், கல்லூரி அதிபர் செ.பத்மசீலன் தலைமையுரை ஆற்றுவதையும் புதிய மாணவர்கள் இறைவணக்கம் செய்வதையும் மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

மூதூர் நிருபர்





## மகா கும்பாபிஷேகம்

- கதிரவன் -

அருள்மிகு ஞான பைரவ சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 01.02.2015 அன்று நிகழ திருவருள் கூடியுள்ளது. இதனை முன்னிட்டு கிரியைகள் நேற்று 30.01.2015 அன்று ஆரம்பிக்கப்பட்டன.

ஞானபைரவரின் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபம் இன்று 31.01.2015 அன்று இடம்பெறவுள்ளது. எனவே அடியார்கள் அனைவரும் இவ் எண்ணெய்க்காப்பு வைபவத்திலும் மகாகும்பாபிஷேக பூசைகளிலும் கலந்து கொண்டு ஞான பைரவரின் இஷ்ட சித்திகளை பெற்றேகுமாறு வேண்டிக் கொள்கின்றனர் ஆலய நிர்வாகிகள்.




## முன்பள்ளிகளுக்கான நீர்வடிப்பு உபகரணங்கள் வழங்கி வைப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. முன்பிள்ளைப்பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இந்த உதவிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. சிறுவர் நலன் அமைச்சின் மூலம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் சிறுவர் திணைக்களத்தின் ஊடாக இந்த பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.


இது தொடர்பான நிகழ்வு அன்று பிற்பகல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியால் உதவி

திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில், சோலையடி பகுதியில் உள்ள கடலன்னை மீன் வியாபாரிகள் சங்கத்திற்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் அவர்களின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து மீன் பெட்டிகள் மற்றும் தராசுகள் அண்மையில் அவ்வங்கத்தினருக்கு வழங்கி வைத்தார்.

மூதூர் நிருபர்





# நாகரீகமும் வீணாய்ப்போகும் சூரிய ஒளியும்

## மக்கள் முரசு

இன்றைக்கு கிராமத்து இளைஞர்களும் பேண்ட் மாட்டிக் கொள்கின்றனர். ஷூ அணிகின்றனர். இந்த வேகாத வெயிலில் ஃபுல் கை ஷர்ட், கோட், டை சகிதம் பலர் மேலும் கீழும் அலைவதைக் காணலாம். பருவ நிலையைக் கணக்கில் கொள்ளாமல் இப்படித்தான் டிரஸ் அணிய வேண்டும் என்று நிர்ணயிக்கிற தனியார் நிறுவனங்கள் பல உண்டு.

அந்தக் காலத்தில் கிராமப்புறங்களில் குறிப்பாகத் திறந்த வெளியில் பணியாற்றுகிறவர்கள் தலையில் தலைப்பாகை கட்டுவர். அது தலைக்கு, குறிப்பாகக் கடும் கோடைக் காலத்தில் பாதுகாப்பு அளிப்பதாக இருந்தது. ஆனால் முண்டாசு கட்டுவது படிப்படியாக மறைந்து வருகிறது. காற்றோட்டமான வேட்டிக்குப் பதில் குழாய் மாட்ட ஆரம்பித்த நாம் தலைப்பாகைக்குப் பதில் மேலை நாட்டுப் பாணியில் தொப்பி அணிய ஆரம்பித்திருந்தால் கோடையில் தலைக்கு நல்ல பாதுகாப்புக் கிடைக்கும்.



ஆடை அணிவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் வேறு முக்கியமான பாதக அம்சத்தையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் சட்டை அல்லது பேண்ட் துணிகள் முற்றிலும் பருத்தியால் ஆனவையாக இருந்தன. ஆனால் கடந்த பல ஆண்டுகளில் ரேயான் மற்றும் பாலியஸ்டர் கலக்கப்பட்ட நூலினால் ஆன துணிகள் பெருகி விட்டன. நூற்றுக்கு நூறு பருத்தியால் ஆன துணிகளின் விலைகள் மிக அதிகமாக இருக்க, மேற்கூறிய கலப்பு இழைத் துணிகளின் விலை மலிவாக உள்ளது. இவை சுருக்கம் விழாதவை. எளிதில் துவைத்துக் காய வைத்து விடலாம். நீண்ட நாட்கள் உழைப்பவை. இந்த அம்சங்களின் விளைவாக கலப்பு இழைத் துணியால் ஆன சட்டை, பேண்ட் அணிபவர்களே அதிகம். நூற்றுக்கு நூறு பருத்தியால் ஆன அதிக விலை கொண்ட துணிவகைகள், வசதி படைத்தவர்கள் அணிபவையாகி விட்டன.

கடும் வெயில் அடிக்கிற பிரதேசத்தில் வசிப்பவர்கள் கலப்பு இழையால் ஆன துணிகளை அணியும் போது அவை வியர்வையை எளிதில் உறிஞ்சுவதில்லை. காற்றோட்டமாக இருப்பதும் கிடையாது. சொல்லப்போனால் வெப்ப மண்டலப் பிராந்தியத்தில் வசிப்பவர்களுக்கு இந்த வகைத் துணிகள் உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது அல்ல.

இதெல்லாம் போதாது என கோடையில் நாக்கு வறண்டு போகும் போது பருகும் பான வகைகளிலும் ஃபேஷன் புகுந்து விட்டது. டிவியிலும் பத்திரிகைகளிலும் பெரிதாக விளம்பரப்படுத்தப் படும் பிரபல பிராண்ட் பானங்களைப் பருகுவதே அந்தஸ்தான ஃபேஷன் என்ற நினைப்பு புகுத்தப்பட்டுவிட்டது. இன்னமும் தெரு மூலைகளில் இளநீர் வியாபாரம் நடக்கிறது என்றாலும் இளநீர் அருந்துவது பட்டிக்காட்டுத்தனம் என்ற எண்ணம் வேரூன்றி அதைப் பருகுவது அடியோடு மறைந்து விட்டாலும் வியப்பில்லை.

வியர்வை உப்புக் கரிக்கும் என்பது பலரும் அறியாத விஷயம். வேண்டுமென்றால் நீங்கள் இதை சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம். சாதாரணமாக வெயில் காலத்தில் அதிகம் வேர்க்கும். அதுவும் கடும் கோடையில் திறந்த வெளியில் பணியாற்றுகையில் நிறைய வியர்வை வெளிப்படும். அவ்வித நிலையில் வியர்வையுடன் உடலில் உள்ள மிக அவசியமான உப்புகளும் அதிக அளவில் இழக்கப்படலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். வெயில் தாங்காமல் உயிரிழப்பதற்கு இது ஒரு காரணம் என்று கருதப்படுகிறது. கடும் வெயிலினால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் உப்புச் சத்து அடங்கிய பானங்களை நிறையப் பருக வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அந்த நாட்களில் உப்பு சேர்க்கப்பட்ட நீர் மோர் குடிப்பார்கள். அது கோடைக் காலத்தில் உடலுக்கு ஆரோக்கியமானதாக இருந்தது. ஆனால் இந்த ஃபேஷன் யுகத்தில் யார் நீர் மோரை நாடப் போகிறார்கள்?

அமெரிக்காவில் தான் வெயிலை அதாவது சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றும் ஆராய்ச்சி முதலில் மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்கா உருவாக்கிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில் இங்கும் சூரிய ஒளியை மின்சாரமாக மாற்ற பல கருவிகளும் சாதனங்களும் உருவாக்கப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆனால் இவை எல்லாம் பெரும் செலவு பிடிக்கக்கூடியவை. சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றுவதற்கு ஆகும் செலவு கடந்த பல ஆண்டுகளில் பெரிதும் குறைந்துள்ளது என்றாலும் அது இன்னமும் கட்டுபடியாகாத அளவில் தான் உள்ளது.

- எஸ்.கார்த்திகா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சர்....

முக்கியஸ்தர்கள் பேசிவருகின்றனர்.

ஐக்கிய தேசிக் கட்சியின் பேரத்தில் முக்கிய பொருளாக இருப்பது முதலமைச்சர் பதவியாக உள்ள நிலையில் கிழக்கில் ஸ்திரமான நிலையில் உள்ள இரண்டு கட்சிகளுடன் மத்தியல் ஸ்திரமான நிலையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியும் களத்தில் இறங்கியுள்ளது.

மத்திய அரசில் வழங்கப்பட்ட அமைச்சுப் பதவிகளைப் புறந்தள்ளியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிழக்கு மாகாண முதலமைச்சுப் பதவியை, மத்திய அரசில் அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விட்டுக் கொடுப்பது நியாயமானது என்ற கருத்து வலுப்பெற்றுவரும் நிலையில் அக் கருத்தை நிராகரித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி.

"நாம் தேசிய அரசில் அமைச்சுப் பதவிகளை ஏற்றிருப்பதனால் கிழக்கு மாகாண முதலமைச்சுப் பதவியினை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிப்பது அர்த்தமற்ற கருத்தாகும்.

கிழக்கு மக்களிடம் நாம் முகங்கொடுக்க வேண்டுமாயின் கிழக்கின் ஆதிக்கம் எம்மிடம் இருக்க வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு அவர்கள் முன்வைக்கும் காரணம் நியாயமாக இருக்கலாம். அதே போல் எமக்கும் எம் பக்க காரணங்கள் நியாயமானதே. எனவே கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்க கூட்டமைப்பு தயாரெனின் அமைக்க முடியுமெனின் நாம் ஆதரவளித்து செயற்படவும் தயாராகவே உள்ளோம். முதலமைச்சுப் பதவியினையும் அவர்களே எடுத்துக் கொள்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நாம் கிழக்கு மாகாண அமைச்சுப் பதவிகள் எதையும் ஏற்க மாட்டோம். நாம் வெறும் உறுப்பினர்களாகவே இருக்கின்றோம். ஆனால் ஆதரவளித்து செயற்படவும் தயாராக இருக்கின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

தனித்து எந்தவொரு கட்சியும் ஆட்சியமைக்க முடியாதுள்ள நிலையில் ஸ்ரீ.மு.காவின் இந்த அறிவிப்பில் பூடகமான எச்சரிக்கையொன்று தமித் தேசியக் கூட்டமைப்பிற்கு இழையோடுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

## சமுர்த்தி

பகுதியாகவேனும் வழங்கப்பட வேண்டும். காவல்துறையினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் சமுர்த்தி வங்கிக் கட்டிடம் சமுர்த்தி வங்கிக்கு மீள வழங்கப்பட வேண்டும் என்பவையே மிகப் பிரதானமானவையாக இருந்தன. . (பேஸ்புக்)

## எதிர்த்தும் ...

ஆர்ப்பாட்டமானது பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகத்திற்கு முன்பாக நிகழ்ந்தது.

இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவது இரண்டாவது முறையாகும். ஏற்கனவே பிரதேசச் செயலாளருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அடுத்து அன்றைய தினத்தில் பிரதேசச் செயலகத்திற் பணிபுரியும் அலுவலர்கள் பிரதேசச் செயலாளருக்கு ஆதரவானதொரு ஆர்ப்பாட்டத்தை நடாத்தியிருந்தனர். இதனையடுத்து அரச அலுவலர்கள் எவ்வாறு ஆர்ப்பாட்டங்களை அலுவலக நேரத்தில் நடாத்த முடியும் என்றதொரு கடும் கண்டனம் எழுப்பப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது முறையாக நடைபெற்றுள்ள இந்த ஆர்ப்பாட்டங்களை அடுத்து அரசியல் தலைவர்கள் இவ்விடயம் தொடர்பாகத் தொடர்ந்தும் மௌனம் காப்பது ஏன்? என்ற கேள்வியை மக்கள் எழுப்பியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்த் தலைமைகள் இவ்விடயம் தொடர்பாகச் சுதந்திர விசாரணையொன்றைக் கோரி, பிரதேசச் செயலாளரால் இழைக்கப்பட்டதாக மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள முயற்சி எடுக்காமலிருப்பது பலவீனமானதொரு அரசியல் தலைமைத்துவ நிலையை வெளிக்காட்டுவதாக மக்கள் தெரிவித்தனர்.

## மு.காவிற்கு....

அமைக்கத் தேவையான ஆதரவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியபோது அக்கட்சிகளிடையே உருவான உடன்படிக்கையின் படி கிழக்கின் முதலமைச்சர் பதவியை இரண்டரை வருடங்களின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ்கட்சிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வழங்கியிருக்க வேண்டும்.

தற்போது அரசியல் நிலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அடுத்து கிழக்கில் யார் முதலமைச்சர் பதவியை பெற்றுக்கொள்வது என்னும் இழுபறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையே ஏற்பட்டுள்ள நிலையில் முதலமைச்சர் பதவியை விடடுக்கொடுக்கும் இவ்வறிவிப்பைக் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரும் கிழக்கு மாகாண அமைச்சரவைப் பேச்சாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட போதே மாகாண அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஏற்கனவே தமக்கும் முஸ்லிம்

## திருக்கோணேசர்...

எதிர்வரும் 7ம்திகதி அதிகாலை 5 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தவரும் அடியார்கள் எண்ணெய் கொண்டுவர வேண்டிய தேவையில்லை எனத் தெரிவித்துள்ள பரிபாலனசபையினர் அடியார்களுக்குத் தேவையான எண்ணெய் கட்டணமின்றி வழங்கப்படும் என்றும் அதற்கென யாரும் கொடைகளை வழங்க விரும்பினால் கோவில் உண்டியலில் அக்கொடைகளை இட்டுச் செல்லாம் என்றும் தெரிவித்தனர்.

சிவனூர்வலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அதற்கென செலவாகும் தொகைகளையும் சேர்த்து கும்பாபிசேக மற்றும் சங்காபிசேகத்திற்குத் தேவையான பால் தயிர் இளநீர், கரும்பு மற்றும் பழ வகைகளை வழங்குமாறு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

மண்டலாபிசேகம் செய்ய விரும்பும் அடியார்கள் ஆலய பரிபாலன சபையைத் தொடர்புகொள்ளுமாறு (0262226688) கேட்கப்பட்டுள்ளனர்.

## வசதிக் கட்டணம்....

**அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் இந்த விடயம் தொடர்பில் தெளிவூட்டப்பட்டுள்ளது.**

**இதற்கமைய. பாடசாலை அபிவிருத்திக்காக பழைய மாணவர் சங்கம். வகுப்பு நலன்புரி சங்கம் ஆகியவற்றினூடாக அறவிடப்படும் அனைத்து அறவீடுகளும் நிறுத்தப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

## திருகோணமலை ...

குறையும் என்றும் தெரியவருகின்றது.

திருகோணமலை மாவட்டத் தமிழ் அரசியல்வாதிகள் திருகோணமலை வளாகம் தொடர்பாகத் தொடர்ந்தும் பாராமுகமாகச் இருப்பதால் பல்கலைக்கழகம் தொடர்பாக தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுவதுடன் பல்கலைக்கழகத்தின் இன விகிதாசாரமும் கடுமையாக மாற்றப்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## முதலமைச்சர்....

மிதிவண்டிகள் 250 களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்ணுற்ற அவர்கள் அவை சனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவை களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த களஞ்சியக் கட்டிடத்திற்கு சீல் வைத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பான வழக்கொன்றைக் காவல்துறையினர் தாக்கல் செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## மாகாணங்களை இணை...

புரிந்தவரும், இந்திய தேசிய காங்கிரஸ்சின் அரசியல்வாதியுமான மணிசங்கர்ஜயர் கடந்த வாரம் திருகோணமலைக்கு வருகை தந்திருந்தார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே 1987ம் ஆண்டு யூலை மாதம் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி இலங்கை ஒரு பல்லின, பல்மத நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதிகாரப்பரவலாக்கல் முறை மூலம் மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட முதலாவது மாகாணசபையில் ஆட்சியில் இருந்த வரதராசப்பெருமாள் அவர்களின் பத்மநாபா ஈபிஆர்எல்எவ் அணியினரை மணிசங்கர்ஜயர் கண்டு பேசியுள்ளார்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட பத்மநாபா ஈபிஆர்எல்எவ் அணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சத்தியன் 13ம் திருத்த சட்டபடி இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மிக விரைவாக நடைமுறைபடுத்துவதற்கு இந்திய மத்திய அரசையும் இலங்கை அரசையும் வலியுறுத்துமாறு மணிசங்கர்ஜயரைக் கேட்டு கொண்டார்.

மேலும் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை திரும்பவும் அழைத்துவருவதென்றால் முதல் கட்டமாக எமக்கான அரசியல் தீர்வு எட்டப்பட்டு அதனை நடைமுறைபடுத்தவும் வேண்டும், எமது அண்டைய நாடான இந்தியாவை எமது மக்கள் இன்னும் நம்புகிறார்கள். எமது பிரச்சனையை இந்தியா முன்நின்று தீர்க்க வேண்டும் என்பதையும் தெரிவித்த சத்தியன் எமது தமிழ் மக்கள் இனி மேலும் நம்பி நம்பி ஏமாறாமல் மிக விரைவாக சகல அதிகாரங்களுடனும் 13வது திருத்த சட்டத்தை அமுல்படுத்த இந்திய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் மணிசங்கர்ஜயரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 28ம் திகதி...

சங்காபிசேகக் கிரியைகள் அனைத்தும் 28ம் திகதி மாலையுடன் நிறைவு பெறுவதால் அன்றைய தினத்திலே நகரப் பகுதிகளில் மட்டும் சிவனூர்வலத்தை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

சங்காபிசேகத்தை அடுத்து வருடாந்தத் திருவிழாக்காலமும் ஆரம்பமாகவுள்ளதாலேயே இவ்வொருநாள் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வருடாந்தத் திருவிழாவானது ஏப்ரல் மாதம் 3ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த 18ம் நாள் தீர்த்தோற்சவமும், 19ம் நாள் பூங்காவனமும் 20ம் நாள் தெப்போற்சவமும் நடைபெறும் என பரிபாலன சபையினர் மேலும் தெரிவித்தனர்.

## காணாமற்போனோ ...

வகை தொகையற்ற மானுடக் கொலைகள், நடைபெற்ற போரின்போதும் அதன் பின்பும் காணாமல்போகச் செய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளை இழந்து தேடி அலைந்து அவர்களின் பெற்றோர்களும் மனைவி மற்றும் உறவுகளும் எதுவித பயனுமற்று கண்ணீருடன் ஏக்கத்துடன் இன்றும் வாழ்கின்றனர்.

இந்நிலையில் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும் அந்த ஆட்சியாளர்களின் நூறு நாள் வேலைதிட்டமும் தமிழ் மக்களின் வாழ்வில் நிம்மதியையும் சுபீட்சத்தையும் கொண்டுவருமென ஒட்டுமொத்த தமிழினம் எதிர்பார்க்கின்றது.

எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் சகல மாகாண சபை மற்றும் நகர, பிரதேச சபை உறுப்பினர்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், கட்சி நிர்வாகிகள் கலந்துகொள்ள வேண்டுமெனவும் சமுகத்தின் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், புத்திஜீவிகள் பொது சன அபிமானமுள்ள சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்களென திரண்டு காணாமல் போன உறவுகளை மீட்டுத்தரக்கோரியும் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரியும் திரண்டு குரல் கொடுக்கவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட காணாமல் போன உறவுகளின் அமைப்பு மிக நேசமுடன் எதிர்பார்த்து நிற்கின்றது.

இதற்கு ஒரு தீர்வு எட்டும்வரை மாவட்டம் தோறும் போராட்டம் நடத்தப்படுமெனவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாய்மையே வெல்லும்

## உண்மையே பேசு உனை மக்கா அழைப்பான் அல்லாஹ்



பத்ர் களத்தை விட்டும் வணிகக் கூட்டத்துடன் சாமர்த்தியமாக தப்பித்த, அபூசுப்யான் 'பத்ருக்கு பழி தீர்ப்பதற்காக பல முறை படைதிரட்டி வந்தார். உஹது நடந்தது, அஹ்ஸாப் நடந்தது. "ஹுதைபியா ஒப்பந்தம் நடந்தது.

மக்கா வெற்றியின் போது, குரைஷித் தலைவர்களே சரணடைய வருகிறார்கள், என்ற ஆதங்கத்தில் இதோ ஆயிது இப்னு அம்ரும் அபூசு.ஃப்யானும் வருகிறார்கள்! என்று நபித்தோழர்கள் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் இந்த வருகையை விட இஸ்லாம் மிக கண்ணியமிக்கது! இஸ்லாம் மேலோங்கும்! தாழாது! என்றார்கள்! (நூல்கள்: தாரகுத்னீ, புகாரீ)

மக்கா வெற்றியின்போது 'அபூசு.ஃப்யானின் வீட்டில் நுழைந்தவருக்கும் அடைக்களம்!' என்று அறிவித்து அபூசு.ஃப்யான் (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் சிறப்பிக்கின்றார்கள். (நூல்: முஸ்லிம்) அபூசு.ஃப்யான் (ரலி) அவர்களை முஸ்லிம் கண்டு கொள்ளவோ, அமருமாறு கூறுவதோ கிடையாது, இந்நிலையில், அபூசு.ஃப்யான் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் நபியே! என்னிடமிருந்து நீங்கள் மூன்றை ஏற்றுக் கொள்ளவேண்டும்! என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், சரி! ஏற்றுக் கொள்கிறேன் என்றார்கள். அரபு மக்களில் மிகவும் கவர்ச்சி மிக்க, அழகான என்னுடைய மகள் உம்மு ஹபீபாவை உங்களுக்கு மணமுடித்துத் தருகிறேன்! என்றார்கள். அதை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இரண்டாவதாக, என்னுடைய மகன் முஆவியாவை உங்களுடைய எழுத்தாளனாக நியமிக்கின்றேன்! என்றார்கள். அதையும் ஏற்றுக் கொண்டார்கள். மூன்றாவதாக, நான் முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் செய்தது போன்று இறை நிராகரிப்பாளர்களை எதிர்த்துப் போரிட என்னை படைத் தளபதியாக்க வேண்டும்! என்றார்கள். அதையும் நபி (ஸல்) அவர்கள் ஏற்றார்கள்.

அபூசு.ஃப்யான் (ரலி) அவர்கள் முன்வைக்கும் அனைத்துக் கோரிக்கைகளையும் மறுக்காமல் அப்படியே ஏற்றுக் கொள்வராக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள் என்று அறிவிப்பாளர்களில் ஒருவரான அபூசுமைல் அவர்கள் கூறுகிறார்கள். (அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் -ரலி, நூல்: முஸ்லிம்)

தொடரும் .. .. எம்.முஜீபுர்ரஹ்மான்



# நண்டு வறுவல்



### தேவையான பொருட்கள்

நண்டு – 6, பூண்டு - 2 (பெரிது), மிளகு - 3 தே.கரண்டி, கசகசா - 3 தே.கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப, தேங்காய் - பாதி, சாம்பார் வெங்காயம் - 5, பச்சை மிளகாய் அல்லது காய்ந்த மிளகாய் - 100 கிராம், சோம்பு - 3 தே.கரண்டி, சீரகம் - 2 தே.கரண்டி, எண்ணெய் - 150 கிராம்

### செய்முறை

ஒரு தாச்சியில் சிறிது அளவு எண்ணெய் ஊற்றி துருவிய தேங்காய், கசகசா, சீரகம், சோம்பு, மிளகு, காய்ந்த மிளகாய் ஆகியவற்றை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். வறுத்த மசாலாவுடன் பூண்டு, மஞ்சள் சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். அதில் சுத்தம் செய்த நண்டுகளை சேர்த்து, அவை நிறம் மாறும் வரை வதக்கவும். அரைத்த மசாலாவை இத்துடன் சேர்த்து குறைந்த தீயில் வறுக்கவும். நண்டு வறுவல் ரெடி.

அழகுக் குறிப்பு

# உடல் எடை குறைக்க ஜாக்கட்



புதிதாக ஐஸ் ஜாக்கெட் என்ற உடல் எடையை குறைக்கும் கருவியை உருவாக்கியுள்ளனர். இந்த ஐஸ் ஜாக்கெட் உடல் எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். மிக எளிமையான கோட்பாட்டைக் கொண்டு இது இயங்குகிறது. பார்ப்பதற்கு கோட்டிற்கு உள்ளே அணியும் சட்டை போல இருக்கும். இதற்குள் குளிர்ந்த நீர் இருக்கும். இதை சட்டையைப்போல உடலில் அணிந்து கொள்ளலாம்.

குளிர்ந்த நீரால் உடல் வெப்ப நிலை குறைவதால் அதை சமநிலைப்படுத்த நம் உடல் தனக்குள் உள்ள கலோரிகளை எரித்து உடலின் வெப்ப நிலையை அதிகரிப்பதால் நம் உடல் எடை குறைகிறது.

# ஐஸ்கட்டி ஃபேஷியல்



ஐஸ் கட்டிகளை ஒரு சுத்தமான துணியில் வைத்து, அதனைக் கொண்டு முகத்தை வட்ட வடிவில் மசாஜ் செய்ய வேண்டும். ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்து வருவதால், சோர்ந்து காணப்படும் முகம் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

இதனால் சருமத்துளைகளின் அளவு குறையும். இதனால் முகத்தில் பருக்கள் வருவது குறையும். சில நேரங்களில் அதிகப்படியான வெயிலினால் சருமமானது எரிச்சலுக்கு உள்ளாவதுடன், காயங்களும் ஏற்படும். அப்படி சூரியக்கதிர்களால் பாதிக்கப்பட்ட சருமத்தை சரிசெய்ய, ஐஸ் கட்டிகளைக் கொண்டு மசாஜ் செய்தால், நல்ல இதம் கிடைக்கும்.

சிலருக்கு இளமையிலேயே சருமத்தில் சுருக்கங்கள் இருக்கும். இது முதுமைத் தோற்றத்தைக் கொடுக்கும். எனவே இவற்றைத் தடுக்க ஐஸ் கட்டிகளைக் கொண்டு சருமத்தை மசாஜ் செய்ய வேண்டும்.



# மருத்துவம்

## மூட்டுவலியை போக்க!!



இன்றைய காலகட்டத்தில் 30 வயதை எட்டி விட்டாலே மூட்டு வலி தொற்றிக் கொள்கிறது. மூட்டுகளுக்கு தேவையான சத்துக்கள் கிடைக்காததே இதற்கு காரணம். எனவே ஆரோக்கியமான உணவை உட்கொண்டு, சீரான உடற்பயிற்சிகளை செய்து வந்தால் மூட்டு வலியை விரட்டி அடிக்கலாம்.

- மூட்டுகளில் ஏற்படும் பிரச்சினையை தொடக்கத்திலேயே சரிசெய்ய வேண்டும், வீக்கம் ஏதும் இருந்தால் மருத்துவரை அணுகுவது நலம்.
- உடல் எடையை சீராக பார்த்துக் கொள்ள வேண்டும், எடை அதிகரிக்கும் பட்சத்தில் மூட்டுகளுக்கு அதிகப்படியான அழுத்தம் ஏற்பட்டு வலிகள் உண்டாகும்.
- நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்பவர்கள், தினமும் உடற்பயிற்சிகள், நடைப்பயிற்சியை மேற்கொண்டால் மூட்டுகளின் ஆரோக்கியத்தை பாதுகாக்கலாம்.
- காய்கறிகள், பழங்கள், பால் மற்றும் கால்சியம் அதிகம் நிறைந்த பொருட்களை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# குடல்புண் பிரச்சினைக்கு தீர்வு



இயற்கை நமக்கு கொடுத்துள்ள உணவுகளால் நாம் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம். சில இயற்கையான உணவுகளின் பலன்கள்.

**தேன்:** சக்தியை கொடுக்கும், இதயத்தை பலப்படுத்தும், இருமலை குணப்படுத்தும், ஹிமோகுளோபினை அதிகப்படுத்தும்.

**வெந்தயம்:** ரத்தத்தில் உள்ள சர்க்கரையையும், சிறுநீரில் உள்ள சர்க்கரையையும் குணமாக்கும்.

**துளசி:** தினமும் துளசி சாப்பிட்டு வந்தால் ரத்தத்திலுள்ள விஷத்தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்கிறது.

**பூண்டு:** வயிற்றில் உண்டாகும் வாயு கோளாறுகள் அனைத்தையும் போக்கும் தன்மை கொண்டது.

**இளநீர்:** உடலில் உள்ள வெப்பத்தை தணிக்கும். காலரா, சின்னம்மை, பெரியம்மை போன்ற நோய்களுக்கு சிறந்த பானம்.

வெண்ணெய்: வாய் மற்றும் வயிற்று புண்களை குணப்படுத்தும்.

**மிளகு:** ரத்த குழாய்களில் படியும் கொழுப்பை கரைக்கும் தன்மை மிளகுக்கு உண்டு.

பாகற்காய்: சர்க்கரை வியாதிக்கு நல்லது. வாய்நாற்றம் போக்கும். வயிற்றுப்பூச்சியை கொல்லும்.

**பச்சைபட்டாணி:** உடலுக்கு வலிமையும், புத்துணர்ச்சியையும் தரும். குடல் புண்களை ஆற்றும், களைப்பை நீக்கும்.



# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : எதிர்மறையான சூழலை சரி செய்து முன்னேற்ற பாதையில் நடை போடுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும்.

**ரிஷபம்** : பொது இடங்களில் எவருடனும் அதிகம் பேச வேண்டாம். வீடு, வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

**மிதுனம்** : வாகன பயணம் இலகுவாக அமையும். உடன் பிறந்தவர்களின் க'டம் தீர இயன்ற அளவு உதவுவீர்கள்.

**கடகம்** : உடல்நலத்திற்கு சீரான ஓய்வு அவசியம். இல்லறத்துணை, சில வி'யங்களில் மனக்குழப்பத்துடன் பேசுவார். தொழில், வியாபாரத்தில் சிறு அளவில் போட்டி ஏற்படலாம்.

**சிம்மம்** : உடன் பிறந்தவர்களின் எண்ணத்திற்கு மாறாக நீங்கள் எதுவும் பேசவேண்டாம். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும்.

**கன்னி** : குடும்பத்தில் மங்கல நிகழ்வு, உறவினர் வருகை கூடுதல் மகிழ்ச்சி தரும். புத்திரர் அறிவுத்திறமையை பயன்படுத்தி படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர்.

**துலாம்** : தாய்வழி உறவினர்களிடம் இருந்த மனக்கிலேசம் விலகும். புத்திரர் விளையாட்டுத்தனமான குணங்களுடன் செயல்படுவர். உங்களின் வழிகாட்டுதல் நல்வழி நடத்தும்.

**விருச்சிகம்** : உங்களை அவமதித்து பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. தம்பி, தங்கையின் வாழ்வு நலம் சிறக்க உதவுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு** : பணிகளில் இருந்த தாமதம் விலகி முன்னேற்றம் ஏற்படும். உடன் பிறந்தவர், உங்களின் சொல்லுக்கு கூடுதல் மரியாதை தருவர். வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும்.

**மகரம்** : அதிக விலையுள்ள பொருளை கவனமுடன் பாதுகாக்கவும். புத்திரரின் எதிர்கால நலன் சிறக்க பணிபுரிவீர்கள். பொறாமை குணம் உள்மனதில் வைத்து பேசுபவரிடம் விலகுவது நல்லது.

**கும்பம்** : சிலர், சுயலாபம் கருதி உங்களை புகழ்ந்து பேசுவர். அவர்களிடம் விலகி சொந்தப் பணியில் கவனம் கொள்வது நல்லது. வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும்.

**மீனம்** : பணியில் நேர்த்தி உருவாகும். புதிய திட்டம் நிறைவேறிய மகிழ்ச்சியில், இயலாதவர்களுக்கு உதவுவீர்கள். சமூகத்தில் கூடுதல் மதிப்பு, மரியாதை கிடைக்கும். புத்திரர், அறிவு சார்ந்த செயல்களால் பெருமை தேடித் தருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## மென்பந்து கிரிக்கட் சுற்று

விக்ரம், ராஜன் மற்றும் கங்கு ஞாபகார்த்தமாக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் வருடாந்தம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின், கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 05 விக்கெட்களால் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. நேரம் போதாமையால் 29 ஓவர்கள் கொண்ட போட்டியாக இந்தப் போட்டி நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



## கைகொடுத்த பந்து வீச்சால் வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், 19 வயதுப்பிரிவு பிரிவு 3 அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட இரண்டு நாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்று கடந்த 24ஆம் திகதி செ‍ன். மேரிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில், ஆர்.லோகதீஸ்வரன், வி.யதுசன் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சு எஸ்.ஜெனி பிளமினின் துடுப்பாட்டம் கைகொடுக்க செ‍ன்.ஜோன்ஸ் கல்லூரி 4 விக்கெட்டுகளால் வடமேல் மாகாண செ‍ன். மேரிஸ் கல்லூரி அணியை வென்றது.



## நீண்டதூர ஓட்டப் போட்டி

அளவெட்டி அருணோதயா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியை முன்னிட்டு, கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் தூர வீதி ஓட்ட போட்டி கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. இந்தப் போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்ற இடங்களையும் முறையே ர.கண்ணன், கி.ஜெயதாஸ், ஆ.குபீகரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இப் போட்டியில் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



## இன ஒற்றுமை வளர்க்கும் நோக்கில் போட்டி

நாவிதன்வெளி பிரதேசத்தில் இன ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் சவளக்கடை காவல்துறையினர் ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 12ஆம் கொலனி கதரீனா விளையாட்டுக் கழகம் 5 விக்கட்டுக்களால் வெற்றியை தனதாக்கி கொண்டது. சவளக்கடை காவல் துறைப் பொறுப்பதிகாரி ஏ.எம்.எம்.நஜீப் தலைமையில் வேப்பையடி கலைமகள் வித்தியால மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இப்போட்டி நடைபெற்றது.

அணிக்கு 6 பேர் கொண்ட 5 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், 16 கழகங்கள் பங்குபற்றின என்பது குறிப்பிடத்தக்கது.



## கிண்ணியாவில் - மரதன் ஓட்டப் போட்டி

தி-கிண்ணியா அல்-அக்ஸா கல்லூரியின் 87வது வருடாந்த இல்ல விளையட்டுப் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்டப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கிண்ணியா சூரங்கல் இடத்திலிருந்து அல் அக்ஸா கல்லூரி வரையும் இப்போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியை, கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியரும் விளையாட்டுக் குழுச் செயலாளருமான ஏ.எல்.நபீல் ஒழுங்கு செய்திருந்தார். கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி கல்லூரி வளாக மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் ஏ.ஆர்.உபைத்துல்லா தலைமையில் இடம்பெறும் இப்போட்டியில், லோட்டஸ், அந்தூரியம், றோஸ், ஜெஸ்மீன் ஆகிய நான்கு இல்லங்கள் பங்கு பற்றுகின்றன.





## சாதனைச் சதம் சங்கா



நியூசிலாந்து அணிக்கு எதிரான 7வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இலங்கை அணி ஆறுதல் வெற்றி பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 6 விக்கெட் இழப்புக்கு 287 ஓட்டங்கள் குவித்தது. இலங்கை அணிக்கு திரிமன்னே, டில்ஷான் நல்ல தொடக்க கொடுத்தனர். மறுமுனையில் 21வது சதத்தை பூர்த்தி செய்த சங்கக்காரா 105 பந்துகளில் 14 பவுண்டரியுடன் 113 ஓட்டங்கள் விளாசி கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

## ஐ.பி.எல் ஏலம்

ஐ.பி.எல் போட்டிகளுக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் போட்டிகளில் யுவராஜ் சிங், கெவின் பீற்றர்ஸன் மற்றும் தினேஸ் கார்த்திக் ஆகியோர் அதிக விலையில் ஏலத்தில் எடுக்கப்பட்டனர். எனினும் இந்த ஆண்டிற்கான ஐ.பி.எல். போட்டி களில் யுவராஜ் சிங்கை றோயல் சலஞ்சர்ஸ் அணியும் கெவின் பீட்டர்ஸன், தினேஸ் கார்த்திக், உட்பட 14 வீரர்களை டெல்லி அணியும் நீக்கியுள்ளது.

## காலிறுதிப் போட்டி - டென்னிஸ்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலியா பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆடவர் பிரிவில் விளையாட நொவாக் ஜோக்கோவிக், மிலோஸ் ரோனிக், ஸ்டன் வாவ்ரிங்கா, கெய் நிசிகோரி, தோமஸ் பேடிச், ரபேல் நடால், அண்டி முரே, நிக் கிர்ஜியோஸ் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர். நான்காவது சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

மகளிர் போட்டிகளுக்கான காலிறுதி சுற்றுக்கு செரீனா வில்லியம்ஸ், டொமினிக்கா ஷிபுகோவா, மடிசன் கெய்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், எகடெரினா மகரோவா, சிமோனா ஹலெப், ஜுஜின் பௌசார்ட், மரியா சரப்போவா ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.



## மன உளைச்சலில்..

தமது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே மற்றும் ஸ்ரீ லங்கா கிரிக்கட்டின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க ஆகியோர் திட்டமிட்ட செயற்பாடுகளை முன் எடுத்ததாக இலங்கை அணி வீரர் குமார் சங்கக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா கிரிக்கட் செயற்பாட்டு பணிப்பாளர் கால்டன் பேர்ணாட்டிற்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலிலே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விசாரணை

இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் சுரேஷ் ரெய்னா, பெண் ஒருவருடன் இருந்தது தொடர்பான விசாரணைக்கு இலங்கை கிரிக்கெட் வாரியம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 2010ல் ஆசியக் கிண்ண போட்டியில் பங்கேற்க இந்திய அணி, இலங்கை வந்தது. அப்போது தம்புலாவில் உள்ள ஒரு ஹொட்டலில் தங்கியிருந்த போது, ரெய்னாவுடன் ஒரு பெண் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதனாலேயே இவ்விசாரணை நடாத்தப்படவுள்ளது.

## கடுங் காய்ச்சலில் ஹரிஸ்



நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தங்கி உள்ள ஹோட்டலில், பாகிஸ்தான் சகலதுறை கிரிக்கெட் வீரர் ஹரிஸ் சொஹைலின் அறைக்குள் இயற்கையை தாண்டிய ஒருவர் வந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வீரர்கள் ஹரிஸ் சொஹைலின் அறைக்கு சென்ற வேளையில் அவருக்கு இந்த சம்பவம் காரணமாக கடும் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் முகாமைத்துவம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உடனடியாக அவரின் அறை, ஹோட்டல் நிர்வாகத்தினால் மாற்றப்பட்டுள்ளது.

## இறுதிப்போட்டி

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டிக்கு, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஆகியோர் முன்னேறியுள்ளனர். அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், மடிசன் கீஸ் ஆகியோர் மோதினர். அசத்தலாக ஆடிய செரினா 76, 62 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார். எனவே இறுதி களத்தில்செரினா, ஷரபோவா மோத உள்ளனர்.



ஷரபோவா

## இந்திய பத்மஸ்ரீ விருது

இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டன் மிதாலிராஜ், பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்.இது குறித்து 32 வயதான மிதாலி ராஜ் கருத்து தெரிவிக்கையில் 'பத்மஸ்ரீ விருதை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு இருப்பது மகிழ்ச்சி கலந்த ஆச்சரியமாகும். தேசிய விருதுகள் நமது திறமையை பாராட்டுவதாகும் எனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை வளாகத்திற்கு மீண்டும் தகுதி வாய்ந்த அதிகாரி




கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக நிர்வாகத்திற்கு மீண்டும் தகுதி வாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை வளாக நிர்வாகத்தைத் கடந்த மூன்று மாதங்களாகத் தற்காலிகமாகப் பொறுப்பேற்றிருந்த தகுதி வாய்ந்த அதிகாரியான பேராசிரியர் ரஞ்சித் பிறேம்லால் டி சில்வா அவர்களின் பதவிக்காலம் கடந்த 15ம் திகதியுடன் காலாவதியாகியிருந்தது.

எனினும் வளாகத்திற்கு முதல்வர் ஒருவர் நியமிக்கப்படாமலிருந்ததால் பேராசிரியர் ரஞ்சித் பிறேம்லால் டி சில்வா அவர்கள் அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கு தகுதி வாய்ந்த அதிகாரியாகக் கடமையாற்றவுள்ளார்.

இதற்கான நியமனத்தை புதிய அமைச்சரவை வழங்கியுள்ளது.

தகுதி வாய்ந்த அதிகாரிக்கான கொடுப்பனவுகள் மாதாந்தம் பல லட்ச ரூபாய்கள் எனவும் உரிய முதல்வர் நியமிக்கப்படுமிடத்து செலவுகள் பலமடங்காகக் 17

## மகுடம் "பிருமிள்" சிறப்பிதழுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன



கிழக்கிலிருந்து வெளியாகும் சஞ்சிகைகளுள் ஒன்றான மகுடம் இதழ் இலங்கையில் முதன் முதலாக இலக்கியவாதி "பிருமிள்" அவர்களுக்குச் சிறப்பிதழை வெளியிடவுள்ளது

அச்சிறப்பிதழுக்கான ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு மகுடம் ஆசிரியர் திரு கொலின் இலக்கியவாதிகளிடம் கோரியுள்ளார்.

ஆக்கங்களை " மகுடம், இல. 90, பார் வீதி, மட்டக்களப்பு" என்ற முகவரிக்கோ அல்லது w.michaelcollin@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்க முடியும். (0774338878)

# காணாமற்போனோரை மீட்கக் கோரி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

வடக்குகிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடந்த காலத்தில் அராஜக அரசாங்கங்கள் மற்றும் ஒட்டுக்குழுக்களின் கடத்தல்களால் காணாமல் போகச்செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான உறவுகளை மீட்டுத்தரக்கோரி கிளிநொச்சியில் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையில் உருவாகி இருக்கும் நல்லாட்சிக்கான அரசாங்கத்தை நோக்கி கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்த கிளிநொச்சி மாவட்ட காணாமல் போனோருக்கான அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த காலத்தில் பெரும் போர்களின் போதும் குறிப்பாக முள்ளிவாய்க்காலில் முடிந்த 17

## முதலமைச்சர் செயலகத்தின் 250 துவிச்சக்கர வண்டிகள்

யாருக்காக???

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் செயலகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்த 250 புதிய மிதி வண்டிகளுக்கு காவல்துறையினர் தடை வைத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை (26) மாலை கிடைத்த துப்புத் தகவலொன்றின் அடிப்படையில் உப்புவெளியில் உள்ள மாகாண விவசாயத் திணைக்களத்தில் களஞ்சியசாலையொன்றைக் காவல் துறையினர் முற்றுகையிட்டுள்ளனர்.

அங்கு புத்தம் புதிய 17

## எதிர்த்தும் – ஆதரித்தும் இரண்டாவது தடவையாகவும் ஆர்ப்பாட்டம்





திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் சசிதேவி சலதீபனுக்கு எதிராகவும் ஆதரவாகவும் இரண்டாவது தடவையும் பொது மக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன.

பிரதேசச் செயலாளரின் அடாவடித்தனங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது எனக் கோசமிட்ட மக்கள் பிரதேசச் செயலாளருக்கு எதிரான பதாதைகளைத் தாங்கியவாறு திருகோணமலை பேருந்துத் தரிப்பிடத்தில் அணி வகுத்திருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்திற்கு எதிராகத் திட்டமிடப்பட்ட 17

## செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயத்தில் சத்துணவுத்திட்டம் கோலாகல ஆரம்பம்

திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயத்தில் 2015ம் ஆண்டுக்கான ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த 26ம் திகதி கோலாகலமாக நடைபெற்றது.

பாடசாலைக்கான சத்துணவு வழங்கப்படுவதைச் சிலர் தடுக்க முயன்றபோதும் அதனை வலயக் கலவி அலுவலகத்தினர் சிறப்பாகக் கையாண்டதை அடுத்து செல்வநாயகபுரம் பாடசாலையில் முட்டையுடன் கூடிய சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் வலயக் கல்வி நிர்வாகப் பணிப்பாளர் அரியநாயகம், அபிவிருத்திப்பிரிவு பிரதிப் பணிப்பாளர் திருமதி.சு.வரதசீலன், சத்துணவுத்திட்டப் பொறுப்பாளர் அ.தனுசன், பாடசாலையின் நிரந்தர அதிபராக் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள பி.ராஜசுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





## "சமுர்த்தி நிவாரணத்தை வழங்குங்கள் "

### மூதூர் கிழக்கு மக்கள் கோரிக்கை



மூதூர் கிழக்கில் உள்ள மக்களுக்கான சமுர்த்தி முத்திரைகள் 2006 மார்ச் மாதத்துடன் நிறுத்தப்பட்டன. அன்றில் இருந்து இன்றுவரை நூற்றியாறு மாதங்களாக சமுர்த்தி முத்திரைகள் வழங்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் வாழ்ந்தார்கள் என்பதனை விட வேறு காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ் விடயமாக சமுர்த்திச் சங்கங்களினால் சமுர்த்தி அமைச்சருக்கு கடந்த திங்கட் கிழமை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதனையொட்டி ஊடகவியலாளர் சந்திப்பு திருக்கோணமலையில் நடத்தப்பட்டது.

இச்சந்திப்பில் முன்வைக்கபட்ட கோரிக்கைகளாக மூதூர் கிழக்கிலுள்ள மக்களுக்கு சமுர்த்தி முத்திரை வழங்கப்பட வேண்டும். 106 மாதங்களுக்கும் வழங்கப்படாமலிருந்த சமுர்த்தி முத்திரை மொத்தமாகவேனும், பகுதி 17

## டெங்கு விழப்புணர்வை ஏற்படுத்திய ஸ்ரீசண்முகா சிறார்கள்



திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி தரம் ஒன்று மாணவிகள் டெங்கு நோயின் தாக்கம் பற்றி பொது மக்களுக்கு தெளிவுபடுத்த விழிப்புணர்வு செயற்பாடு ஒன்றில் 30ம் திகதி ஈடுபட்டனர்.

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 31.01.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org